# தமிழரசு

16.6.1976 50 காசு



# அரசு – மிகவுயர்ந்த தரமான

# போர்ட்லேண்ட் சிமெண்ட் உங்களுக்குக் கிடைக்கிறது

அரசு சிமெண்ட் தரத்தில் தலைசிறந்து விளங்குவது; தரமே உருவானது. வலிமைக்கு மற்றொரு பெயரான அரசு, வலுவான கட்டுமானங்களுக்கு நேர் நிகரில்லாததாகும்.

அரசு சிமெண்டுக்குள்ள தனிச் சிறப்புத் தன்மைகள், அதனால் கட்டப்படும் எதையும் திண்மையும், நீர்க்காத திறனும் கொண்டு நெடுங்காலம் நீடித்து விளங்கச் செய்கின்றன.

அரசு ஒரு நவீன, விஞ்ஞான ரீதியான தயாரிக்கப்படும் போர்ட்லெண்ட் சிமெண்ட் குடியிருப்பு இல்லங்கள், பண்ணைக் கட்டிடங்கள், அலுவலக கட்டிடங்கள், தானியக் குதிர்கள், குழாய் அமைப்புகள், அணைகள், பாலங்கள், நீர்த்தொட்டிகள், நீர்த் தேக்கங்கள், நீச்சல் குளங்கள், அலங்கார அமைப்புக்கள் போன்ற எத்தனையோ கட்டுமான வேலைக்கு அரசு அருமையானதொரு சிமெண்ட்.

அரசு தமிழ்நாட்டிலேயே முதலாவதான ஒரே அரசினர் துறை சிமெண்ட் ஆலை




யால், கடுமையான தரக்கட்டுப்பாடுகளைக் கையாண்டு உற்பத்தி செய்யப்படுகிறது.

## தமிழ்நாடு சிமெண்ட்ஸ் கார்ப்பரேஷன் லிமிடெட்

ஆலங்குளம், இராமநாதபுரம் மாவட்டம்

## அரசு – வலிவும் வனப்பும் வாய்ந்தது

AC-16



திரு. மோஹன்லால் சுகாதியா அவர்கள்
16-6-1976 அன்று
தமிழ்நாட்டு ஆளுநராகப் பதவி ஏற்ருர்.


மலர் - 6

# தமிழரசு

இதழ் - 24

16 - 6 - '76




# ஆளுநர் பதவிஏற்பு விழா

## (நிகழ்ச்சி வர்ணனை)

இந்தியக் குடியரசுத் தலைவர் அவர்களால், தமிழ்நாட்டு ஆளுநராக நியமிக்கப்பட்டுள்ள திரு மோஹன்லால் சுகாதியா அவர்களும் திருமதி சுகாதியா அவர்களும் கிண்டி இராஜ பவனத்திலிருந்து 1976-ஆம் ஆண்டு ஜூன் திங்கள் 16-ஆம் நாள் காலை 10-45-க்குப் புறப்பட்டார்கள். திறந்த மகிழ்வுந்து வண்டியில் இராஜபவனத்திலிருந்து வந்த அவர்களை வானூர்திப் படை வீரர்களும் விசைமிதி வண்டிக் காவல் வீரர்களும், சுற்றிலும், காவல் மரியாதையோடு அழைத்து வந்தார்கள். இராஜாஜி மண்டபத்திற்கு அவர்கள் காலை 11-12 மணிக்கு வந்து சேர்ந்தனர். இராஜ பவனத்திலிருந்து இராஜாஜி மண்டபம் வரை காவலர் வரிசை கண்காணித்தது. விழா ஊர்வலம், அஞ்சலகத் தலைவர் அலுவலகத்திலிருந்து இராஜாஜி மண்டபம் வரை அமைந்திருந்தது. வழிகாட்டி வீரர்களாகக் குதிரைப் படைக் காவலர், அஞ்சலகத் தலைவர் அலுவலகத்திலிருந்து ஊர்வலத்தை முன் நடத்திச் சென்றனர். பதவி ஏற்கவிருந்த ஆளுநருக்கு ஆயுதம் தாங்கிய காவல் வீரர்கள் படைக்கல அணிவகுப்பு மரியாதை அளித்தனர்.

வானூர்திப் படை வீரர்கள் ஐம்பதின்மர் இராஜாஜி மண்டபத்தின் முன்னர். அணிவகுப்பு மரியாதை நிகழ்த்தினர். இராஜாஜி மண்டபத்தை அடைந்ததும், பதவி ஏற்கவிருந்த ஆளுநரும், திருமதி சுகாதியா அவர்களும் மகிழ்வுந்திலிருந்து இறங்கும்போது ஆலோசகர்களாலும், தலைமைச் செயலாளராலும் வரவேற்கப் பெற்றனர். பதவி ஏற்கும் ஆளுநருக்கு முப்படைத் தலைவர்களையும், காவல் துறை தலைவரையும் தலைமைச் செயலாளர் அறிமுகப்படுத்தினார்.

அணிவகுப்பு மரியாதை வீரர்குழுத் தளபதி அழைத்து வர, பதவி ஏற்கவிருக்கும் ஆளுநர், அணிவகுப்பு மரியாதையை ஏற்றார். அணிவகுப்பு மரியாதை நிறைவுற்றவுடனே ஆளுநரும், திருமதி சுகாதியா அவர்களும், மெய்க்காவலர், தலைமைச் செயலாளர், ஆலோசகர்கள் ஆகியோர் முன் செல்ல, மண்டபத்தில் நுழை வாயிற்படி ஏறினார். அவர்களைத் தொடர்ந்து, ஆளுநரின் தனிச் செயலர் பின் சென்றார். படிகள் கடந்து நுழைவாயிலில், உயர் நீதிமன்றத் தலைமை நீதிபதியை, பதவி ஏற்கவிருக்கும் ஆளுநருக்கும், திருமதி சுகாதியா அவர்களுக்கும், தலைமைச் செயலாளர் அறிமுகம் செய்து வைத்தார். பின்னர் ஆளுநரும், திருமதி சுகாதியா அவர்களும் முதலில் மேடைக்குச் சென்று இருக்கைகளில் அமர வழிவிட்டனர். அதன் பின்னர், கீழ்க் குறித்தோர் மேடைக்குச் சென்று தத்தம் இருக்கைகளில் அமர்ந்தனர்.

**சட்டப் பேரவைத் தலைவர்,**
தலைமை நீதிபதி,
ஆலோசகர்கள்,
சட்ட மேலவைத் துணைத் தலைவர்,
தலைமைச் செயலாளர்,

ஆளுநரின் தனிச் செயலரும், மெய்க் காவலர்

களும், பொதுத் துறைத் துணைச் செயலரும் பின் வரிசை இருக்கைகளில் அமர்ந்திருந்தனர். கீழே ஆறாவது பத்தியில் குறித்த முறையில் தலைமை நீதிபதி ஆளுநருக்குப் பதவி ஏற்பு உறுதிமொழியைச் செய்து வைத்து, பதவி ஏற்கும் ஆளுநர் அவர்தம் இருக்கையில் அமரும் வரையிலும், அனைவரும் நின்ற வண்ணம் இருந்தனர்.

தலைமைச் செயலாளர், பதவி ஏற்கும் ஆளுநரிடமிருந்து பதவி ஏற்பு உரிமை ஆணையைப் பெற்றுக் கொண்டு அதனை எடுத்துரைக்கும் இசைவைப் பெற்றார். இசைவு பெற்றதும், தலைமைச் செயலாளர், படிப்பதற்கான சாய்வு மேசையை அணுகிச் சென்று, பதவி ஏற்புரிமை ஆணையை அவைமுன் படித்தார். இதன்பின்னர், பதவி ஏற்கும் ஆளுநரும், தலைமை நீதிபதியும், மேடையிலுள்ள சாய்வு மேசையின் அருகே சென்றனர். அம்மேசையின் மீது பதவி ஏற்பு உறுதிமொழியின் படிகள் இரண்டு வைக்கப்பட்டிருந்தன. பிறகு, தலைமை நீதிபதி, ஆளுநருக்குப் பதவி ஏற்பு உறுதிமொழி செய்து வைத்தார். இந் நிகழ்ச்சி நிறைவுற்றவுடனேயே:—

இராஜாஜி மண்டபத்திலும், கிண்டி இராஜபவனத்திலும் ஒரேநேரத்தில் தேசியக் கொடி ஏற்றிவைக்கப்பட்டது. (இராஜாஜி மண்டபத்திலிருந்து வான்தந்தி வழியாகச் செய்தி உடனடியாக அனுப்பப்பெற்றது.)

காவலர் இசைக்கருவிக்குழு தேசியப் பாடலை முழங்கியது.

தேசியப் பாடலின் இறுதிவரிகள் நிறைவுற்றவுடனேயே ஆளுநர் தமது இருக்கையில் அமர்ந்தார். அதன்பின்னர் அழைப்பாளர் அனைவரும் அமர்ந்தனர்.

பின்னர் ,பதவி ஏற்பு உறுதிமொழி ஆவணத்திலும், கீழ்க்குறித்த பிற ஏடுகளிலும் ஆளுநர் தம் கையொப்பம் இட்டார். (காலை *11-25*):

இதன் பின்னர், ஆளுநரும், திருமதி சுகாதியா அவர்களும் மேசைக்கு முன் சென்று தத்தம் இருக்கைகளில் அமர்ந்தனர். பின்னர் சிறப்பு விருந்தினரும், அலுவலர்களும் கீழ்க் கண்ட முறையில் ஆளுநருக்கும், திருமதி

**தமிழ்நாடு ஆளுநராகப் பதவி ஏற்க வந்த திரு. மோஹன்லால் சுகாதியா அவர்கள், அஞ்சலகத் தலைவர் அலுவலகத்திலிருந்து இராஜாஜி மண்டபம் வரை குதிரைப்படை வீரர்கள் முன்னும் பின்னும் அணிவகுத்து வர, ஊர்வலமாக அழைத்துவரப்பட்டார்.**





**விமானப் படை வீரர்கள் அளித்த அணிவகுப்பு மரியாதையை திரு. மோஹன்லால் சுகாதியா அவர்கள் ஏற்றுக் கொண்டார்.**

சுகாதியா அவர்களுக்கும் அறிமுகப்படுத்தப் பெற்றனர்.

சட்டப் பேரவைத் தலைவர், சட்ட மேலவைத் துணைத் தலைவர் ஆகியோரைத் தலைமைச் செயலாளர் அறிமுகப்படுத்தினார்.

உயர்நீதிமன்ற நீதிபதிகளைத் தலைமை நீதிபதி அறிமுகப்படுத்தினார்.

அதன் பின்னர், தலைமைச் செயலாளர், நாடாளுமன்ற உறுப்பினர்களையும், சட்டமேலவை உறுப்பினர்களையும், வருவாய் வாரிய உறுப்பினர்களையும், அரசுச் செயலாளர்களையும், சென்னை நகரிலுள்ள வெளிநாட்டு உதவித் தூதர்களையும், மற்றும், ஏனைய பெருமக்களையும் அறிமுகப்படுத்தினார்.

ஆளுநரும் குழுவினரும், இராஜாஜி மண்டப வெளிவாயில்வரை, விசை மிதிவண்டிக் காவலரும், குதிரை வீரர்களும் புடைசூழ, அரசு மரியாதையோடு மகிழ்வுந்தில் அழைத்துச் செல்லப்பெற்றனர். இராஜாஜி மண்டப வெளிவாயிலிலிருந்து ஆளுநரும், அவரது குழுவினரும் ஆதம்ஸ் சாலை, கடற்கரைச்சாலை வழியாக இராஜபவனத்திற்கு மகிழ்வுந்தில் சென்றார்கள். இராஜாஜி மண்டப வெளிவாயிலிலிருந்து செல்லும் ஆளுநரது மகிழ்வுந்தின் முன்னர், விசைமிதிவண்டியில் காவல் அலுவலர் ஒருவர் செல்ல, வழித்துணைக் காவலர் பின் தொடர்ந்தார்.

இவ்வாறு ஆளுநர் அவர்களின் பதவி ஏற்பு விழா இனிதே முடிந்தது.



**ரயில் நிலையத்தில், திரு மோகன்லால் சுகாதியா அவர்களுக்கு, அரசு அலுவலர்களை, தலைமைச் செயலர் அறிமுகம் செய்து வைக்கிறார்.**



# "உங்கள் ஒத்துழைப்பு ஊக்கம் தரும்!"

நண்பர்களே,

என் உளமார்ந்த நல்வாழ்த்துக்களையும் பெருமகிழ்ச்சியினையும் தமிழக மக்களுக்கு வழங்கவும் அவர்களின் ஒத்துழைப்பை விரும்பிப் பெறவுமே இன்று இந்த வானொலி உரையை ஆற்றுகிறேன். கடந்த காலத்தில் தமிழகத்தின் சில பகுதிகளைச் சுற்றிப்பார்க்கும் நல்வாய்ப்பு எனக்குக் கிடைத்தது. இந்நாட்டு மக்களின் அறிவாற்றலும், விருந்தோம்பும் பண்பும், பெருந்தன்மையான போக்கும் எப்போதுமே என்னைக் கவர்ந்துள்ளன. தமிழக மக்களிடையே பணியாற்றும் ஒரு நல்வாய்ப்பு இப்பொழுது எனக்குக் கிடைத்துள்ளதில் நான் பெருமகிழ்ச்சியடைகிறேன். என்னுடைய பணிகளை நிறைவேற்றுவதில் உங்கள் ஒத்துழைப்பு எனக்கு ஊக்கம் தரும் என்றும் உறுதியாக நம்புகிறேன்.

நமது பாரதப் பிரதமர் அறிவித்துள்ள 20 அம்சப் பொருளாதாரத் திட்டத்தை நல்ல முறையில் நடைமுறைக்குக் கொண்டு வருவதே நம்முன் நிற்கும் முதன்மையான—தலையாய கடமையாகும். போதிய வளர்ச்சியின்றிக் கிடக்கும் சில துறைகளுக்கு முதன்மை கொடுத்து, தனி அக்கறை செலுத்துவது இந்தத் திட்டத்தின் நோக்கம் என்பதை நாம் அனைவரும் அறிவோம். அதனால், முன்னேறத் துடிக்கும் மக்களின் பேரார்வத்திற்குப் பொருந்திய வகையில் சமுதாயப் பொது நீதியுடன் இணைந்த வளர்ச்சியை நோக்கி நாம் பீடுநடை போட வேண்டும் என்பதே நமது இலட்சியமாகும். பொதுவாகப் பின்தங்கிய வகுப்பினரின் பொருளாதார முன்னேற்றமும், நல்வாழ்வும் இத்திட்டத்தின் வழியாக ஏற்றம் பெற வேண்டும் என்னும்போதே தாழ்த்தப்பட்ட வகுப்பினரின் முன்னேற்றத்தில் இத்திட்டம் சிறப்பான நாட்டத்தைச் செலுத்துகிறது. இருபது அம்சப் பொருளாதாரத் திட்டத்தை நிறைவேற்றுவதில் நிருவாக இயந்திரத்தை விரைவாக முழுஅளவில் முடுக்குவதே எனது பெருமுயற்சியாக அமையும்.

**மேதகு தமிழ்நாடு ஆளுநர் மோகன்லால் சுகாதியா அவர்கள் 16.6.'76 அன்று இரவு 8 மணிக்குச் சென்னை வானொலியில் ஆற்றிய உரையின் தமிழாக்கம்.**

தமிழகத்தின் வருவாயில் நூற்றுக்கு நாற்பத்தாறு விழுக்காடு வேளாண்மையிலிருந்தே கிடைப்பதை நாம் அறிவோம். நமது நாட்டின் பொருளாதார வளர்ச்சி வேளாண்மை வளர்ச்சியுடன் பின்னிப் பிணைந்து கிடக்கிறது. எனவே, பாசன நீரைத் தக்க வகையில் பயன்படுத்த அதிக அக்கறை மேற்கொள்வதும், நிலத்தடி நீரை முழு அளவுக்கு வெளிக் கொணர்வதும், மேம்படுத்தப்பட்ட பயிரிடு முறைகளை வேளாண்மையில் செயலுக்குக் கொண்டு வருவதும், அவைகளின் விளைவாக விளைச்சலைப் பெருக்குவதுமே நமது உடனடித் தேவையாகும். பாசன வசதியுள்ள நிலங்களில் மட்டுமல்லாது, பாசன வசதியற்ற நிலங்களிலும் பெரும் விளைச்சலைக் காண்பதில் நாம் முக்கிய கவனம் செலுத்த வேண்டும். 1975- அக்டோபர்-டிசம்பர் காலத்தில் வடகிழக்குப் பருவக் காற்றினால் நமது மாநிலத்தில் சில பகுதிகளில் வழக்கம் போல் நல்ல மழை பெய்திருந்தும் திருநெல்வேலி, இராமநாதபுரம் மாவட்டங்களிலும், கோவை, மதுரை, சேலம், தருமபுரி மாவட்டங்களில் சில பகுதிகளிலும் போதுமான மழை பெய்யவில்லை. இந்த இடங்களில் எல்லாம் குடிதண்ணீர் கிடைக்காத கடும் வறட்சி நிலை உருவாயிற்று. இங்கெல்லாம் வறட்சியை நீக்குவதற்கான ஆக்கப்பணிகளை அரசு ஏற்கனவே மேற்கொண்டுள்ளது. வறட்சிப் பகுதிகளில் வாழும் மக்களுக்கு இயலுமான எல்லா விதமான உதவிகளையும் செய்ய வேண்டும் என்பதே நமது முயற்சியாகும்.

கிராமப் புறப் பகுதிகளில் வாழும் எளிய மக்களுக்கு நிலச் சீர்திருத்தத் திட்டங்கள் உயிர்நாடியாக அமைகின்றன. மிகக் குறுகிய காலத்துக்குள் நிலச் சீர்திருத்தங்கள் நிறைவேற்றப்படுவதில் அரசு தனி அக்கறை செலுத்தும்.

நம் சென்னை மாநகரம் இடப்பரப்பாலும் மக்கள் தொகையாலும் நாளுக்குநாள் அகன்று பெருகி வருவதால், அனைவருக்கும் குடிதண்ணீர் வழங்கும் பிரச்சினை அரசின் கவனத்தை எப்போதும் ஈர்த்து வந்துள்ளது. 1974 அக்டோபர் டிசம்பர் காலத்தில் வடகிழக்குப் பருவமழை பொய்த்ததால் சென்னை மாநகருக்கு ஏற்பட்ட குடிநீர்ப் பற்றாக்குறையும் அதனால் விளைந்த இன்னல்களும் நமது நெஞ்சில் இருந்து இன்னும் நீங்கவில்லை. ஆந்திர மாநிலமும், மகாராஷ்டிரமும், கருநாடக அரசும், கிருஷ்ணா ஆற்றிலிருந்து 1,500 கோடி கன அடி தண்ணீர் வழங்க முன்வந்திருப்பதால் நிலையான அடிப்படையில் நமது தலைநகரத்தில் குடிநீர்ப் பற்றாக்குறை தீரும் என நம்பலாம். இவ்வகையில் உடனடித் தீர்வு காணும் முறையில் நமது அரசு இவ்வகையில் விரைந்து செயல்படும் என்பதை நான் இந்த நேரத்தில் உறுதியாகச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

நமது நாடு விடுதலை அடைந்த பின்னர், பல்வேறு துறைகளில் நாம் பெற்ற முழுமையான வளர்ச்சியை, கட்டுக்கடங்காத மக்கட் தொகைப் பெருக்கின் காரணமாக நம்மால் உணர முடியாது போனதை நாமே நன்கறிவோம். குடும்ப நலத் திட்டத்தின் வெற்றியோடுதான் நமது நாட்டின் எதிர்காலம் இணைந்துள்ளது. உணர்ச்சி வயப்படாமல், அறிவு வழியில் ஆர அமர ஆராய்ந்து முடிவெடுப்பதில் தமிழகத்து மக்கள் வல்லவர்கள். எனவே, தமிழ்நாட்டில் உள்ள தொண்டு நிறுவனங்களும், மக்களும் தங்கள் ஒத்துழைப்பைத் தருவதன் மூலம் குடும்ப நலத் திட்டத்தினை நன்கு நிறைவேற்றி வெற்றி காண்பார்கள் என்பதில் எனக்கு ஐயமில்லை. வருங்காலத்தில் குடும்ப நலத் திட்டம் குறித்து அரசு தனிக் கவனம் செலுத்தும். தமிழக மக்கள் தொன்மையும், வளமும் வாய்ந்த இலக்கியப் பெருமை கொண்ட தமது தாய்மொழியின்பால் பெரும் பற்றுக் கொண்டவர்கள் என்பதை நான் அறிவேன். அதே நேரத்தில் புதிய தொழில் நுட்ப யுகத்தின் தேவைகளுக்கு ஈடு கொடுக்கும் ஆற்றலும் தமிழுக்கு உண்டு என்பதையும் நான் உணர்வேன். எல்லாச் செயல்களிலும் தமிழ் மொழியைப் பயன்படுத்துவதற்கு அரசு தொடர்ந்து ஊக்கமளித்து வரும்.

அரசு கொள்கைகளை மட்டும் வெளியிடுவதோ பல்வேறு திட்டங்களுக்குப் பண ஒதுக்கீடு செய்வதோ மட்டும் போதிய பயன் அளித்து விடாது என்பதை இந்த நேரத்தில் நான் சுட்டிக் காட்ட விரும்புகிறேன். அரசாங்கக் கொள்கைகளைத் தொடக்க நிலையிலிருந்தே திறம்படச் செயற்படுத்துவதும், ஒதுக்கிய நிதிவசதிகளைத் தக்க வகையில் செலவிடுவதுமே மிகப் பெரும் முக்கியத்துவம் வாய்ந்தவையாகும். எனவே, பல்வேறு திட்டங்கள், பணிமுறைகள் அடிப்படையிலிருந்தே உரிய முறையில் செயலுக்கு வருகின்றனவா என்பதை அவ்வப்போது ஆராய்வதோடு, எங்கெங்கு தொய்வுகள் விழுகின்றனவோ அங்கெல்லாம் அவற்றைக் கண்டு பிடித்துச் சரி செய்யவும் நாம் முயல்வோம்.

நிர்வாகப் பொறுப்பில் இருப்போர்களுக்கு நான் ஒன்று சொல்லிக் கொள்வேன். எதையும் முடிவெடுக்காமல் இருப்பதைவிட ஏதாவது ஒரு முடிவுக்கு வருவதையே நான் விரும்புகின்றவன். விரைந்து முடிவெடுக்கும் போது ஒரு சில தவறுகள் விளைந்தாலும், அத்தவறுகள் நல்லெண்ணத்தோடு பிறக்குமானால், அவற்றை நாம் பொருட்படுத்தத் தேவையில்லை.

பாரதத்தின் வாழ்விலும் வளர்ச்சியிலும் தமிழ்நாடு சிறப்பிடம் பெற்றுள்ளது. கடின உழைப்பினாலும், கட்டுப்பாட்டுஉணர்வினாலும் தமிழகத்து மக்கள் தமது மாநில வளர்ச்சிக்குத் தொண்டாற்றுவது இன்றியமையாததாகும். தமது மாநிலத்துக்கு தொண்டாற்றும் வகையிலேயே பாரதத்தின் தேசிய வளர்ச்சிக்கு தொடர்ந்து தங்கள் பங்கை அவர்கள் செலுத்தியவர்களாகிறார்கள். வளர்ச்சிப் பணிகளில் நாம் முனைப்போடு ஈடுபட வேண்டுமானால் அமைதி நிறைந்த சூழ்நிலை நமக்குப் பெரிதும் வேண்டும். வளர்ச்சிப் பணிகளில் அரசும் மக்களும் தம்மை ஈடுபடுத்திக் கொண்டு செயலாற்றுவதற்கு மக்கள் தொடர்ந்து அமைதி நிலையைக் காத்திட வேண்டுமென்று தமிழக மக்களை அன்போடு வேண்டிக் கொள்கிறேன். தமிழ்நாட்டு மக்களுக்கு என் உளமார்ந்த நல்வாழ்த்துக்களையும் மகிழ்ச்சியையும் மீண்டும் கூறி அமைகிறேன்.

ஜெய்ஹிந்த்!



**தமிழ்நாடு ஆளுநராக நியமிக்கப்பட்டு, 16.6.'76 அன்று காலை 6–30 மணிக்குச் சென்னை சென்ட்ரல் இரயில் நிலையம் வந்து சேர்ந்த, திரு. மோஹன்லால் சுகாதியா அவர்களை, ஆளுநர் ஆலோசகர்களும், தலைமைச் செயலாளரும் மற்றும் அலுவலர்களும் வரவேற்றனர்.**



தமிழ்நாட்டின் ஆளுநராக இருந்து பணியாற்றி, பதவி ஒய்வுபெற்ற திரு. கே. கே. ஷா அவர்களுக்குத் தமிழ் நாடு அரசின் சார்பில் 15.6.'76 அன்று மாலே 5.30 மணிக்கு, சென்னை இராஜாஜி மண்டபத்தின் பின்புறத்தி லுள்ள அரங்கில் வழியனுப்பு விழா நடைபெற்றது. அவ்விழாவில் தமிழ் நாடு அரசின் சார்பில் திரு. கே. கே. ஷா அவர்களுக்கு ஆளுநர் ஆலோசகர் திரு. பி. கே. தவே அவர்கள் நினை வுச் சின்னம் வழங்கினுர்.



கடந்த ஐந்து ஆண்டுக் காலமாக தமிழ்நாடு ஆளுநராகப் பதவி வகித்த திரு. கே. கே. ஷா அவர்கள், தமது பதவிக்காலம் முடிந்து 15.6.'76 அன்று இரவு 7.20 மணிக்குத் தமிழக மக்களிடமிருந்து விடைபெற்ருர்.



# உலக சுற்றுப்புறச் சூழ்நிலை நாள்!

ஒவ்வொரு ஆண்டும் ஜூன் 5-ஆம் தேதி உலகச் சுற்றுப்புறச் சூழ்நிலை நாளாக உலகம் முழுவதிலும் அனுசரிக்கப்படுகிறது. இந்த நாளில்தான் ஐ. நா. பொதுச்சபையின் உறுப்பு நாடுகள் முதலாவது தடவையாக 1972-ஜூன் மாதத்தில் 'ஸ்டாக்ஹோம்' நகரில், உலகத்தின் சுற்றுப்புறச் சூழ்நிலைக்கான காரணங்கள்மீது ஒற்றுமையுடன் தங்களின் கவனத்தைச் செலுத்தத்துவங்கின. உயிர் வாழ்வதற்கு மிகவும் இன்றியமையாத இந் நோக்கம் குறித்து, மிகுந்த கவலையை வெளிப் படுத்திய நாடு இந்தியா மட்டுமே! இந்த மாநாட்டில் இந்தியப் பிரதமர் **திருமதி இந்திரா காந்தி** அவர்கள் கலந்து கொண்டார்.

இந்த ஆண்டு உலகச் சுற்றுப்புறச் சூழ்நிலை நாளின் சிறப்புக் கருத்து, ''**தண்ணீர்-வாழ்வுக்கு இன்றியமையாத வளம்**'' என்பதாகும். தண்ணீர், மனித நடவடிக்கைகள் அனைத்துடனும் மிக நெருங்கிய தொடர்பு கொண்டிருப்பதால், இக்கருத்து சிறப்பு முக்கியத்துவம் பெற்றிருக்கிறது. தண்ணீரின் வளமும், தரமும் மனிதனின் சுற்றுப்புறச் சூழ்நிலையை மேம்படுத்துவதற்கு அவனுடைய திறனுடன் விடுவிக்க முடியாதபடி இணைந்துள்ளது. 1977-ல் ''**தண்ணீரும் பாலைநிலமாதலும்**'' என்பது பற்றிய மாநாடு ஒன்றை நடத்துவதற்கு ஐ. நா. திட்டமிட்டுள்ளது.

சுற்றுப்புறச் சூழ்நிலைப் பிரச்சினைகள் பற்றிய இந்தியாவின் கவலை பல ஆண்டுகளாக வளர்ந்து வந்துள்ளது.

**''மனிதன் ஏழ்மையில் இருக்கும்போது, சத்தற்ற உணவினாலும், நோயினாலும், பயமுறுத்தப்படுகிறான். பலவீனனாக இருக்கையில் போருக்கு அஞ்சுகிறான்; செல்வந்தனாக இருக்கையிலோ தனது சொந்த செல்வச் செழிப்பால் கொண்டுவரப்பட்ட அசுத்தத்தினால் அச்சுறுத்தப்படுகிறான்''** என்று பிரதம மந்திரி திருமதி **இந்திரா காந்தி** அவர்கள் 1972 ஜூன் 14-ஆம் தேதி ஸ்டாக்ஹோம் நகரில் நடைபெற்ற மனிதச் சுற்றுப்புறச் சூழல் பற்றிய ஐ. நா. மாநாட்டுக் கூட்டத்தில் முழக்கமிட்டார்.

வளரும் நாடுகளில் உள்ள சுற்றுப்புறச் சூழ்நிலைப் பிரச்சினைகள், போதிய அளவுக்கு மேம்பாடு அடையாத சூழ்நிலைகளினாலேயே ஏற்படுகின்றன என்ற உண்மையை ஐ. நா. மனிதச் சுற்றுப்புறச் சூழல் மாநாடு வலியுறுத்தியுள்ளது. குடிநீர் வசதி, வீட்டுச் சுகாதார வசதி, எரிபொருள், போக்குவரத்து, தொலைத் தொடர்புத்துறை, மருத்துவப் பாதுகாப்பு முதலியவை மிகக் குறைவாகக் கிடைப்பதனால், முக்கியமாக சுற்றுப்புறச் சூழல் பிரச்சினைகள் தோன்றுகின்றன. இப்பிரச்சினைகளைச் சமாளிப்பதற்கு மேம்பாடு ஓர் அத்தியாவசிய முன் தேவை என்பது தெளிவு. தொழில்நுட்ப உபயோகம் மற்றும் பொருளாதார வளர்ச்சிக்கான வழக்கமான முறை, இப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கல்லாமல், இத்தகைய சமூக சுற்றுப்புறச் சூழல் பிரச்சினைகளை எப்பொழுதும் தீவிரப்படுத்துவதற்கு வகை செய்வதாக உணரப்படுகிறது.

இந்தியாவில், புது டில்லியிலுள்ள விஞ்ஞான தொழில்நுட்பத் துறையின் சுற்றுப்புறச் சூழல் மற்றும் ஒருங்கிணைப்புக்கான தேசியக் குழு, மக்களுக்கு எவ்வகையில் சுத்தமான, ஆரோக்கியமான, சுற்றுப்புறச் சூழ்நிலையை அளிக்க முடியும் என்று தொழில் துறைக்கும், அரசாங்கத்துக்கும் ஆலோசனை கூறுகிறது.

மக்கள் தொகைக் கட்டுப்பாடு, பொதுவான சுற்றுப்புறச் சூழல் மேம்பாட்டுக்கு மிக முக்கியமானதாகும் என்று இக்குழு கருதுகிறது. காற்று, தண்ணீர், நிலம் ஆகியவற்றின் அசுத்தத்தைத் தடுப்பதற்காக—குறிப்பாக நகர்ப்புறப் பகுதிகளில் அதிகமான மனித குடியேற்ற மேம்பாட்டினை நிறுத்துவதற்கு—ஒருங்கிணைந்த முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும் என்றும் இக்குழு வேண்டுகோள் விடுத்துள்ளது.

# ஏற்றுமதியில் இந்தியா!



## தோல் பொருட்கள்

இந்தியா 200 கோடி ரூபாய்க்கு தோல், மற்றும் தோல் பொருட்களை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்கிறது. இவற்றில் பெரும்பாலானவை ஓரளவு பதம் செய்த தோல் வகைகளாகும். முற்றிலும் செய்து முடிக்கப்பட்ட தோல் மற்றும் தோல் பொருட்களை ஏற்றுமதி செய்தால் நாட்டிற்குச் சுமார் 600 கோடி ரூபாய்க்கு வெளிச் செலாவணி கிடைக்கும்.

ஓரளவு பதம் செய்த தோல் வகைகளை ஏற்றுமதி செய்வதன் மூலம் அதிக அளவுக்கு இலாபம் சம்பாதிக்கும் பொருட்டு, அண்மை மாதங்களில் இந்திய அரசு இத்தகைய பொருட்களுக்கான ஏற்றுமதித் தீர்வையை 5 சதவிகிதம் உயர்த்தியது. இந்தப் புதிய ஏற்றுமதித் தீர்வை உயர்வு மே மாதம் முதல் தேதியிலிருந்து அமல் செய்யப்பட்டு வருகிறது.

முற்றிலும் செய்து முடிக்கப்பட்ட தோல் பொருட்களை உற்பத்தி செய்யும் விதத்தில் தோல் தொழிற்சாலைகளை ஊக்குவிப்பதற்காக, மத்திய அரசு இத்தகைய தோல் ஏற்றுமதிக்கு, மானியம் அளிப்பதை 5 சதவிகிதத்திலிருந்து 10 சதவிகிதத்திற்கு உயர்த்தத் தீர்மானித்தது. இந்த ஊக்குவிப்பு முறையும் மே மாதம் முதல் தேதியிலிருந்து அமல் செய்யப்பட்டுள்ளது.

## பட்டுப் பொருள்கள்

நாட்டின் பட்டுத் தொழில் துறை, 1975-76-ஆம் ஆண்டுக்காக நிர்ணயிக்கப்பட்ட ஏற்றுமதிக் குறியளவை, அந்த ஆண்டின் முதல் 11 மாத காலத்திற்குள்ளாகவே அடைந்து விட்டது. 1975 ஏப்ரல் முதல் 1976 பிப்ரவரி வரையிலான காலத்தின் ஏற்றுமதி மதிப்பு 14 கோடியே 70 இலட்சம் ரூபாய். (ஆனால் நிர்ணயிக்கப்பட்ட குறியளவு 14 கோடியே 50 இலட்சம் ரூபாயாகும்) 1974-75 ஆம் ஆண்டின் இதே காலத்திய ஏற்றுமதி வருமானம் 11 கோடியே 20 இலட்சம் ரூபாய். ஆகையால் இந்த ஆண்டு ஏற்றுமதி வருமானம் பாராட்டத்தக்க வகையில் பெருகியுள்ளது.

மதிப்பு, அளவு ஆகிய இரண்டு வகைகளிலும் ஏற்றுமதி அதிகரித்துள்ளது. ஏற்றுமதிப் பொருட்களின் மதிப்பு 31 சதவிகிதமும், அளவு 9 சதவிகிதமும் அதிகமாகப் பெருகியுள்ளது.

இந்தியப் பட்டுப் பொருட்களை இங்கிலாந்து மிக அதிகமாக இறக்குமதி செய்தது. பிரான்ஸ், ஜெர்மனி, அமெரிக்கா, இத்தாலி சுவிட்சர்லாந்து ஆகிய நாடுகளும் ஊக்கமூட்டும் வகையில் இப்பொருட்களை இறக்குமதி செய்தன. அங்கெல்லாம் பட்டுத் துண்டுகளுக்கும் ஆடைப்பொருட்களுக்கும் அதிக வரவேற்பு உள்ளது.

## காபிக்கொட்டை

1975-76-ஆம் ஆண்டின் முதல் 11 மாதங்களில் இந்தியா ரூ. 53.90 கோடி மதிப்புள்ள 49,345 டன் காப்பிக் கொட்டையை ஏற்றுமதி செய்தது. அந்த ஆண்டில் இந்தியாவில் சுமார் 90,000 டன் காப்பிக் கொட்டை உற்பத்தி செய்யப்பட்டது என மதிப்பிடப்பட்டுள்ளது.

1976-77-இல் 77 கோடி ரூபாய் மதிப்புள்ள 55,000 டன் காப்பிக்கொட்டை ஏற்றுமதி செய்யப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

காப்பி வாரியம்தான் காப்பிக் கொட்டை ஏற்றுமதி அலுவலைக் கவனித்து வருகிறது.

அமெரிக்கா, ஈராக், கிழக்கு ஐரோப்பிய நாடுகள், போலந்து, ருமேனியா, செக்கோஸ்லோவாகியா, ஹங்கேரி ஆகிய நாடுகளுக்கு இந்தியக் காப்பிக் கொட்டை ஏற்றுமதி செய்யப்படுகிறது.

## வாழைப்பழம்

இந்தியாவிலிருந்து வாழைப் பழ ஏற்றுமதி, மூன்றாண்டுக்கால இடைவெளிக்குப் பின்னர், தற்போது மீண்டும் தொடங்கப்பட்டிருக்கிறது. மத்திய கிழக்கு, நாடுகளுக்கும், அரபுநாடுகளுக்கும் இந்திய வாழைப்பழங்கள் செல்கின்றன.

தமிழ் நாடு, குஜராத், மகாராஷ்டிரம் ஆகிய மாநிலங்களிலிருந்து வாழைப் பழங்கள் வெளிநாடுகளுக்குச் செல்கின்றன. குவைத், துபாய், ஈரான் ஆகிய நாடுகளுக்கு 500 டன் வீதம் வாழைப் பழங்கள் அண்மையில் அனுப்பப்பட்டுள்ளன. அவற்றின் மதிப்பு ரூ. 15 லட்சம் ஆகும்.

## பட்டாசு

தமிழ் நாட்டில் தயாரிக்கப்படும் பட்டாசுகளுக்குத் தற்போது அமெரிக்க நாட்டில் நல்ல வரவேற்பு இருக்கின்றது. முன்பு சீனா, தைவான் ஆகிய நாடுகளிலிருந்து பட்டாசு அமெரிக்காவுக்கு ஏற்றுமதியாகி வந்தது. தற்போது அமெரிக்க நாடு, இந்தியாவிலிருந்து பட்டாசுகளை இறக்குமதி செய்கின்றது. ரூ. 40 இலட்சம் மதிப்புள்ள பட்டாசுகளை இந்தியாவிலிருந்து வாங்குவதற்கு அமெரிக்கா முடிவு செய்திருக்கிறது.

## மல்லிகைப் பூ

'மதுரை மல்லி' என்று சொல்லப்படும் மல்லிகைப் பூ ரகம் தமிழ் நாட்டிலிருந்து, சிங்கப்பூருக்கு ஏற்றுமதியாகிறது. வெள்ளிக்கிழமை தோறும் 'மதுரை மல்லி' சிங்கப்பூரை நோக்கிப் பறக்கிறது. சிங்கப்பூரில் இதற்கு மிகுந்த வரவேற்பு இருப்பதால், மல்லிகையின் ஏற்றுமதி விரைவில் அதிகமாகலாம் என்றும், அதன் மூலம் ஒரு கணிசமான தொகை அந்நியச் செலாவணியாகக் கிடைக்கும் என்றும் தெரிகிறது.

# கிராமப்புறங்களில் வீடு கட்ட அரசின் புதிய திட்டம்!

தமிழகத்தின் ஊராட்சி ஒன்றியப் பகுதிகளில் உள்ள கிராமங்கள், வரைமுறையற்ற வகையில் வளர்வதைத் தடுத்து, ஒரு ஒழுங்குக்கு உட்பட்ட முறையில் வளர்ச்சியை ஏற்படுத்துவதற்காகவும், 'உதவிபெறுதல்—சுயஉதவி' அடிப்படையில் கிராம மக்கள் தங்களுடைய வாழ்க்கை நிலைமையை உயர்த்திக் கொள்வதை ஊக்குவிப்பதற்காகவும் தமிழ்நாடு அரசு கிராமிய வீட்டு வசதித் திட்டத்தை 1958—59 முதல் செயல்படுத்தி வருகிறது. இத்திட்டத்தின் கீழ், 3 சென்ட் நிலமுள்ள கிராம மக்களுக்கு, கட்டப்படவிருக்கும் வீட்டின் மதிப்பீட்டுச் செலவில் 80 சதத் தொகை—உயர்ந்த பட்சமாக ரூபாய் 5,000—என்ற அளவிலும் கடன் வழங்கப்பட்டு வந்தது. இத்திட்டம், நெடுஞ்சாலை கிராமப் பணித் துறையில், ஒரு மேற்பார்வைப் பொறியாளரின் தலைமையில் தனியாக இயங்கி வந்த 'ஊரக வீட்டு வசதி மையம்' என்ற பிரிவினால் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

இந்தத் திட்டத்திற்கு ஊக்கம் அளிக்கவும், நிதி நிறுவனங்களிலிருந்து போதுமான நிதியுதவி பெறுவதற்காகவும் 1.4.76 முதல் கிராமப் புற வீட்டு வசதித் திட்டத்தை ஊரக வீட்டு வசதி கூட்டுறவுச் சங்கங்களின் மூலம் செயல்படுத்துவதென அரசுமுடிவு செய்துள்ளது.

புதிய ஊரக வீட்டு வசதிக் கூட்டுறவுச் சங்கங்களின் சிறப்பு அம்சங்களாவன.

1. புதிய ஊரக வீட்டு வசதி சங்கங்கள் ஒரு வட்டத்தில் குறிப்பிட்ட அதிகார எல்லைக்குள் அமைக்கப்படும். இத்தகைய புதிய சங்கங்களை அமைப்பதில், தற்போதுள்ள இணைக்கப்பட்ட ஊரக வீட்டு வசதி கூட்டுறவுச் சங்கங்களின் எண்ணிக்கை குறைவாக உள்ள பகுதிகளுக்கு முன்னுரிமை அளிக்கப்படும்.

2. 1976 — 77-ல் பத்து ஊரக வீட்டு வசதிக் கூட்டுறவுச் சங்கங்கள் பத்து வட்டங்களில் வட்டத்திற்கு ஒன்று வீதம் அமைக்கப்படும். இந்தச் சங்கங்களின் உறுப்பினர்களின் எண்ணிக்கை வரையறுக்கப்படும். உண்மையிலேயே சொந்த வீடு கட்டுவதில் ஆர்வமுடையவர்களே இதில் உறுப்பினராகச் சேர்க்கப்படுவார்கள். சங்கம் நன்கு செயல்படுவதற்காக , ஒவ்வொரு சங்கத்திலும் உறுப்பினர்களின் எண்ணிக்கை 100 ஆக இருக்கும்.

3. ஒவ்வொரு உறுப்பினர்களுக்கும் பங்குத் தொகை செலுத்துவதற்காக வட்டியில்லா கடனாக ரூ. 400 அளிக்கப்படும். உறுப்பினர், தனது பங்குத் தொகையாக ரூ. 100 செலுத்திட வேண்டும். இதன் அடிப்படையில் ஒவ்வொரு உறுப்பினரும் சங்கத்திலிருந்து ரூ. 5,000 கடனைப் பெற முடியும். ஆரம்பச் சங்கங்கள் ரூ. 8,000 செலுத்திய பின்பு தலைமைச் சங்கத்துடன் இணைக்கப்படும்.

4. சங்கத்தில் பணிகள் உறுதிப்படுத்தும் வரை முதுநிலை கூட்டுறவு ஆய்வாளர் ஒருவர் சங்கத்தின் சிறப்பு அலுவலராக இருப்பார். அதன் பிறகு அரசு, இயக்குநர்கள் குழுவை அமைக்கும்.

5. முதல் இரண்டு ஆண்டுகளுக்குச் சங்கத்தின் சிறப்பு அலுவலராகப் பணி புரியும் முதுநிலைக் கூட்டுறவு ஆய்வாளரின் பணி இலவசமாகக் கிடைக்கும். மூன்றாம் ஆண்டில் முதுநிலைக் கூட்டுறவு ஆய்வாளரின் செலவுத் தொகையில் 20 சதத்தைச் சங்கம் ஏற்றுக்கொள்ள வேண்டும். அது போல் 4, 5 ஆண்டுகளில் முறையே 50 சதம், 75 சதம் செலவுத் தொகையினை ஏற்றுக் கொள்ள வேண்டும். 6-வது ஆண்டுக்குப் பிறகு, முதுநிலை ஆய்வாளரின் முழுச் செலவையும் ஏற்றுக் கொள்ள வேண்டும்.

6. கடன் அளிக்கப்படும் முறை, வட்டி விகிதம், கடன் வசூல் செய்யும் முறைகள் மற்றும் அன்றாடம் அனுசரிக்க வேண்டிய அலுவலக முறைகள் ஆகிய அனைத்தும் ஏற்கனவே செயல்பட்டு வரும் ஊரக வீட்டு வசதிக் கூட்டுறவுச் சங்கத்தினைப் போல் பின்பற்றப்படும்.

7. தற்சமயம் ஊரக வீட்டு வசதி பிரிவு மேற்பார்வை பொறியாளரின் அதிகாரத்திற்குக் கீழ் பணி புரிந்து வரும் தொழில் நுணுக்க அலுவலாளர்கள், இனி கூட்டுறவுச் சங்கங்கள் பதிவாளர் (வீட்டு வசதி) அதிகாரத்திற்குக் கீழ் பணி புரிவார்கள்.

8. தமிழ் நாடு வீட்டு வசதி கூட்டுறவு சங்கம் தனது நிதியிலிருந்து 25 சதத்தை அமைக்கப்பட்டிருக்கும் ஊரக வீட்டு வசதி கூட்டுறவு சங்கத்திற்கு நிதி ஒதுக்கீடு செய்ய வேண்டும்.

## புவியியல் ஆய்வுக்குப் புதிய பயிற்சிக் கழகம்

இந்தியப் புவியியல் ஆய்வுத் துறை இந்த ஆண்டில் தனக்குச் சொந்தமான பயிற்சிக் கழகம் ஒன்றை நிறுவ இருக்கிறது. இந்தத்துறையில் 125-வது ஆண்டு நிறைவு விழாக் கொண்டாட்டத்தின் ஒரு பகுதியாக இந்தப் பயிற்சிக்கழகம் நிறுவப்படும். இந்தியப் புவியியல் ஆய்வுத் துறையிடம் ஒப்படைக்கப்பட்டுள்ள அநேக பணிகளை மேற்கொள்வதற்கு இப்பொழுது ஏராளமான ஒழுங்குமுறைகள் தேவைப்படுவதால், இந்தப் பயிற்சிக்கழகத்தில் வசதி அவசியமாகும். இந்தியப் புவியியல் ஆய்வுத் துறை கனிப்பொருள் கண்டுபிடிப்புக் கார்ப்பொரேஷன் சுரங்கம் மற்றும் புவியியல் துறைக்கான மாநில இயக்குநர் அகங்கள், சுரங்கத் துறையுடன் சம்பந்தப்பட்டுள்ள அரசுத்துறை நிறுவனங்கள் ஆகியவற்றில் பணி புரியும் அதிகாரிகளுக்கு முக்கியமாக சேவைக் காலப் பயிற்சி வசதிகளை இந்தக் கழகம் அளிக்கும்.

பல்வேறு பல்கலைக் கழகங்களிலிருந்து வரும் பட்டதாரிகளுக்குச் சம்பந்தப்பட்ட துறைகளில் பயிற்சி அளிப்பதற்கும், நாட்டின் கனிவளத்தைக் கண்டுபிடித்து நிரூபிக்கும் ஆய்வுகளை மேற்கொள்வதற்குத் தேவையான திறமையுடன் அவர்களை உருவாக்குவதற்கும் இந்தப் பயிற்சிக் கழகம் உதவும்.

# இரட்டிப்பு இலாபம் பெற இரட்டை வாழை பயிரிடுவீர்!

முக்கனிகளில் ஒன்றான 'வாழை' அனைவராலும் விரும்பப்படுவதும் ஏழை எளியோர்க்கும் எளிதில் கிடைக்கக் கூடிய பழ வகையுமாகும். உலகம் முழுவதும் வெப்ப மண்டல பிரதேசங்களில் வாழை அதிக அளவில் பயிர் செய்யப்படுகின்றது. மேற்கத்திய நாடுகளான ஈகுவேடார், ஹோண்டுராஸ், பனாமா, கொலம்பியா, கோஸ்டாரிகா, ஜமெய்கா, கானரித்தீவுகள் மற்றும் ஆஸ்திரேலியா ஆகிய நாடுகளில் வாழை தனிப் பயிராகப் பயிர் செய்யப்பட்டு ஏனைய நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுகின்றது. இந்தியாவில், வாழை மாவிற்கு அடுத்த படியாக அதிகப்பரப்பில் பயிர் செய்யப்படுகிறது (1.86 இலட்சம் எக்டர்). எனினும் வாழை உற்பத்தியளவு நமது தேவைக்கே ஏறத்தாழ சரிப்பட்டு வருகிறது. வாழை உற்பத்தியை நாம் கணிசமான அளவில் அதிகரித்தோமானால், நாமும் மற்றமேற்கத்திய நாடுகளைப் போல அதிக அளவில் ஏனைய நாடுகளுக்கு ஏற்றுமதி செய்து அந்நியச் செலாவணியை மிகுதியாகப் பெறலாம். வாழை உற்பத்தியைப் பெருக்கி ஏற்றுமதி மூலம் அந்நியச் செலாவணியை ஈட்டபெரும் வாய்ப்புகள் நமக்கு உள்ளன.

நம் நாட்டில் தமிழ்நாடு, கேரளா, மகாராஷ்டிரா, அஸ்ஸாம், கர்நாடகா, ஆந்திரப் பிரதேசம் ஆகிய மாநிலங்களில் வாழை அதிகமாகப் பயிராகிறது. தற்பொழுது 'கேவண்டிஷ்' வகைகளுள் ஒன்றான குள்ள வாழையே (பச்சை வாழை) அதிக அளவில் பயிர் செய்யப்பட்டு வருகின்றது. குள்ள வாழையில் அநேகமாக ஒரு முறைதான் பலன் எடுக்க முடியும். மறு பயிர் விடப்படுவதில்லை. மறுவாழை இலாபகரமாக இருக்காது என்பதுதான் இதற்குக் காரணம். குள்ள வாழையிலிருந்து தோன்றிய **'ரொபஸ்டா'** என்ற எட்டடி வாழை குள்ள வாழையைக் காட்டிலும் அதிகப் பலன் தரவல்லது. மேலும் ஒரு குறிப்பிடத்தக்க தன்மை ரொபஸ்டா வாழைக்கு உண்டு. அதாவது ரொபஸ்டாவில் மறுபயிர், மிகுந்த பலனைக் கொடுக்கவல்லது என்பதே அதன் சிறப்பாகும். விரைவில் இரு முறை பலன் கொடுத்து வருவாய் பெருக்குகிறது. 'ரொபஸ்டா' வாழையிலிருந்து மேலும் அதிக அளவில் பலன் கிடைப்பதற்குரிய வழிமுறைகள், தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்தில் (கோயமுத்தூர்) ஆராயப்பட்டு வருகின்றன. 'ரொபஸ்டா' வாழையில் இரட்டை வாழைச் சாகுபடி முறையினால் மிகுந்த பலன் பெறலாம் என ஆய்வின் மூலம் கண்டறியப்பட்டுள்ளது.

பொதுவாக ரொபஸ்டா வாழை 1.8 X 1.8 மீட்டர் (6 அடி X 6 அடி) அல்லது 2.4 X1.8 மீட்டர் (8 அடிX6 அடி) என்ற இடைவெளியில் பயிர் செய்யப்படுகின்றது. இரட்டை வாழை சாகுபடி முறையில் 2.4 X 1.8 மீட்டர் இடைவெளியில் இரண்டு கன்றுகள் வீதம் நட வேண்டும். ஒரு கன்றிற்கும் மற்றொரு கன்றிற்கும் இடையே 30 செ. மீ. (ஒரு அடி) இடைவெளி விட்டு இரு குழிகளில் இரு கன்றுகள் நட வேண்டும். ஒரு கன்று நடவு முறையில் ஒரு எக்டேருக்கு 2,240 கன்றுகள் நடலாம். ஆனால் இரட்டை வாழை நடவு முறையில் எக்டேருக்கு 4,480 கன்றுகள் நடலாம். ஏனைய சாகுபடி முறைகளும், உரமிடும் முறையும் இரு சாகுபடி முறைகளுக்கும் பொதுவானதே. ஆனால் இரட்டை வாழை நடவு முறையில் அதிக கன்றுகள் நடுவதினால், உரத் தேவை இரு மடங்காக அதிகரிக்கிறது.

## குலைகளின் தரம்

ஒவ்வொரு குலையிலும் உற்பத்தியாகும் சீப்புகளின் எண்ணிக்





கையைக் கொண்டு அந்தக் குலைகளின் தரம் நிர்ணயிக்கப்படுகின்றது. இரட்டை வாழை சாகுபடியில் ஒரே அளவு நிலப்பரப்பில் இரு மடங்கு வாழை பயிர் செய்யப்பட்ட போதிலும் இம்முறையில் உண்டாகும் குலைகளின் தரம் பாதிக்கப்படுவதில்லை. மாறாக குலைகளில் உள்ள சீப்புகளின் எண்ணிக்கை கணிசமான அளவில் பெருகியிருக்கிறது. இதனால் குலைகளின் தரமும் 82.37 சதவீதம் உயர்ந்திருக்கிறது.

### மகசூல்

ஒரு வாழை நடவில் ஒரு குலை 21.42 கிலோ எடையிருந்தால், இரட்டை வாழை நடவில் ஒரு குலை 18.98 கிலோ எடைதான் இருக்கிறது. ஒரே இடத்தில் (4.32 சதுர மீட்டர்) இரு வாழைகள் பயிரிடப்படுவதினால் குலைகளின் எடை குறைகிறது. ஆனால் 4.32 சதுர மீட்டர் பரப்பில் உண்டாகும் இரு வாழைக் குலைகளும் சேர்ந்து 37.96 கிலோ எடை இருக்கிறது. இரட்டை வாழை நடவில் ஒரு எக்டேரில் 87.0 டன் மகசூல் கிடைக்கிறது. ஆனால் ஒரு வாழை நடவில் ஒரு எக்டேருக்கு 50.0 டன் மகசூல் தான் கிடைக்கிறது. இரட்டை வாழை நடவினால் 74.00 சதவீதம் அதிக பலன் கிடைக்கிறது. மேலே கூறியபடி இரட்டை வாழையில் ஒரு குறிப்பிட்ட பரப்பளவில் அதிக எண்ணிக்கை வாழை பயிரிடப்படுவதினால் வாழைக்கு வாழை போட்டி போட்டுக் கொண்டு நிலத்திலிருந்து ஊட்டச் சத்துக்களை கிரகிக்கின்றன. மேலும் வாழை இலைகளுக்குத் தேவையான சூரிய ஒளிக்கும் போட்டி. இதனாலேயே வாழையின் குலை ஈன்று பலன் தரும் காலம் சிறிது அதிகரிக்கிறது. இவ்வாறு இரட்டை வாழையில் ஒரு வாழை நடவைக் காட்டிலும், பயிர்க்காலம் 26.33 நாட்கள் அதிகரிக்கின்றது. பயிர்க் காலம் சிறிது அதிகரித்தாலும் இரட்டை வாழை தரும் மொத்தப் பலன் பாதிக்கப்படுவதில்லை. அதிக பலன் கிடைப்பதினால் பயிர்க்காலம் சிறிது அதிகரிப்பது ஒரு பொருட்டாகத் தோன்றுவதில்லை.

### அதிக லாபம்

இரட்டை வாழை நடவு முறையினால் வாழைக் கன்றுகளின் எண்ணிக்கை அதிகரிப்பதாலும், உரத்தின் அளவு அதிகரிப்பதாலும் ஒரு எக்டேரில் பயிர் செய்ய ஆகும் செலவும் அதிகமாகிறது! ஒரு வாழை நடவு முறையில் ஒரு எக்டேரில் 50 டன் வாழைக்காய் உற்பத்தியாவதினால் கிடைக்கும் மொத்த வருமானம் ரூ. 28,820. ஆனால் அதே ஒரு எக்டேரில் இரட்டை வாழை நடவு முறையினால் 87 டன் வாழைக்காயும் ரூ. 51,080 வருமானமும் கிடைக்கின்றன.

இரட்டை வாழை நடவு முறையினால் 80.40 சதவீதம் அதிக அளவில் இலாபம் பெறலாம் என்பது உறுதியாகிறது. ஒரு எக்டேரில் இந்த முறையினால் குறுகிய காலத்தில் (442 நாட்களுக்குள்) ரூ. 37,740 நிகர இலாபம் பெறலாம் என்பதே குறிப்பிடத்தக்கதாகும். இரட்டை வாழை சாகுபடி முறை, வாழை உற்பத்தியாளர்களுக்கு ஒரு வரப்பிரசாதமாக அமையும் என்பது உறுதி.

**இரட்டை வாழை நடவு முறையினால் ஒரு எக்டேரில் கிடைக்கும் நிகர இலாபம்**

| விவரம் | | ஒரு வாழை நடவு முறை | இரட்டை வாழை முறை |
|---|---|---|---|
| இடைவெளி (மீட்டர்) | | 2.4 X 1.8 | 2.4 X 1.8 |
| கன்றுகளின் எண்ணிக்கை | | 2,240 | 4,480 |
| ஒரு குலையிலுள்ள சீப்புகள் | | 8 | 8 |
| ஒரு குலையிலுள்ள பழங்கள் | | 135 | 135 |
| ஒரு குலையின் எடை (கிலோ) | | 21.42 | 18.98 |
| மகசூல் (டன்) | | 50 | 87 |
| உற்பத்தி செய்யச் செலவு | (ரூபாய்) | 7,900 | 13,340 |
| மொத்த வருவாய் | (ரூபாய்) | 28,820 | 51,080 |
| நிகரலாபம் . | (ரூபாய்) | 20,920 | 37,740 |
| அதிக லாபம் | (சதவீதம்) | ... | 80.40 |

**தகவல் : திருவாளர்கள்**
**இரா. செ. அழகிய மணவாளன்,**
**ர. பாலகிருஷ்ணன்,**
தோட்டக்கலைத் துறை,
தமிழ்நாடு வேளாண்மைப்
பல்கலைக் கழகம்,
கோயமுத்தூர்-641003.






# தூர் கிளைப்பதைத் தூண்டும் முறைகள்

'பயிர்களின் எண்ணிக்கையே பாதி மகசூல் !' என்பதற்கிணங்க, ஒரு நெற்பயிர் தரும் மொத்த மகசூலின் அளவு, அது விடும் மொத்தத் தூர்களின் எண்ணிக்கையைப் பொறுத்தே அமைவதாலும், தூர்களின் எண்ணிக்கையில் ஏற்படும் இழப்பை, பின்னால் ஈடுகட்டுவதற்கான வழிமுறைகள் இல்லாத காரணத்தினாலும், நெற்பயிரில் தூர்கள் பிடிப்பது சிறப்பாக இருக்க வழி செய்யும் வகையில், பின்வரும் சாகுபடி முறைகளைக் கவனமாகக் கடைப்பிடிக்க வேண்டியது இன்றியமையாததாகும்.

1. இளம் நாற்றுக்களை நடுவது.
2. நாற்றுக்களை நெருக்கமாக நடுவது.

3. மூன்று முதல் ஐந்து சென்டி மீட்டர் ஆழத்தில் நாற்றுக்களை மேலோட்டமாக நடுவது.

4. தூர்கட்டும் பருவத்தில், குறைந்த அளவு நீரைப்பாய்ச்சி அது மெல்லிய ஆடைபோல் மேற்பரப்பில் சீராகப் பரவி நிற்கும்படி பார்த்துக்கொள்ள வேண்டும். இத்தகைய பாசனம், தூர்ப் பிடிப்பைத் துரிதப் படுத்துகிறது.

5. நல்ல முறையில் தூர்கள் கிளைக்க உதவும் வகையில், மணிச்சத்து மற்றும் துத்தநாகச் சத்துக்களைப் போதிய அளவு அடியுரமாக இடுவது.

6. தழைச்சத்து உரங்களைத் தக்க காலத்தில் இடுவது.

இந்தச் சாகுபடி முறைகள் அனைத்தும் நெற்பயிரின் ஆரம்ப கால வளர்ச்சியைத் துடிப்பாக்கி, தூர்க்கட்டுதலை அதிகப்படுத்தப் பெரிதும் உதவுகின்றன. குறிப்பாக, பாதகமான பருவ நிலைகளிலும், குறைந்த அளவு உரங்களை உபயோகிக்க வேண்டிய சூழ்நிலைகளிலும் இந்தச் சாகுபடி முறைகள் சிறந்த பலன்களைத் தருகின்றன.

4 முதல் 6 இலைகளுடன் (ஐந்திலை நாற்றுகள் மிகவும் சிறந்தவைகள்) கூடிய, 25 முதல் 30 நாட்கள் வயதுடைய நாற்றுகள் நடவு வயலில் எளிதில் வேரூன்றி, விரைவில் பச்சை பிடிக்கும் ஆற்றல் நிறைந்தவை. ஆகவே, இத்தகைய இளம் நாற்றுகளை நடுவது நல்லது!

தூர்களாக வெளிவரும் பருக்கள், நாற்றின் அடிப்பாகத்தில் உள்ள கணுக்களில் அமைந்திருப்பதால், நாற்றுகளை 3 முதல் 5 சென்டி மீட்டர் ஆழத்தில் 'மேலோட்டமாக' நடுவது நல்லது. இதற்குமாறாக வழக்கம் போல் ஆழமாக அழுத்தி நடவு செய்தால், தூர் விடும் பருக்கள், சேற்றில் ஆழமாக அழுந்திவிடுமாதலால், தூர்கள் வெளிவருவது தடைபடும். இதனால் தூர்களின் எண்ணிக்கை பெரிதும் பாதிக்கப்படும்.

நாற்றுகளை 10 × 15 சென்டி மீட்டர் இடைவெளியில் நெருக்கமாக நடுவது நல்லது. இதனால் நடப்படும் செடிகளின் எண்ணிக்கை அதிகமாகிறது. ஆகவே வெளிவரும் தூர்களின் எண்ணிக்கையும் அதிகமாகிறது.

தூர்களின் எண்ணிக்கை அதிகமானால், மகசூலும் அதிகமாகும்!

வளங்குறைந்த வயல்களில் சாகுபடி செய்யும்போதும், குறைந்த அளவு உரங்களை உபயோகித்துச் சாகுபடி செய்ய வேண்டிய நிலைகளிலும், இந்த 10×15 சென்டி மீட்டர் இடைவெளி பெரிதும் விரும்பத்தக்கது. இதனால்தான் 'நெருக்க நட்டு நெல்லைப்பார்' என்கின்றோம். மேலும் 10×15 சென்டி மீட்டர் இடைவெளியில் நெருக்கமாக நடவு செய்கின்றபோது அதிகமான அளவு செடிகளின் வேர்கள், வயல் முழுவதும் சீராகப் பரவி, மண்ணிலுள்ள பயிர்ச் சத்துக்களை நல்லமுறையில், முழு அளவில் பயன்படுத்திக் கொள்கின்றன. இதன் காரணமாக நிலத்தில் இடப்படுகின்ற உரங்களின் சேதாரம் கணிசமாகக் குறைகிறது. மேலும் நிலத்திலுள்ள இயற்கை வளம் சிறப்பான முறையில் பயன்படுத்தப்படுகிறது. ஆகவே இளம் நாற்றுகளை நெருக்கமாகவும், மேலோட்டமாகவும் நட்டு, தழைச்சத்து உரங்களைத் தக்க காலத்தில் இடுவதே நிறையத் தூர்கள் கிளைப்பதற்குரிய வழியாகும்.


வளமான
வாழ்விற்கு....
சாமி
நாடு நலம் பெற
வீடு வளம் பெற
அரிய பெரிய திட்டங்கள்
அரசு நிதம் தீட்டுகிறது.
திட்டங்களின் இனிய பலன்
எட்டிடவே எல்லோர்க்கும்
அளவான குடும்பம்
அமைவதுதான் சிறப்பாகும்!
பிறந்ததைக் காப்போம்!
பிறப்பதைத் தவிர்ப்போம்!!
குடும்ப நலத் துறை
தமிழ்நாடு அரசு.



ஆடுதுறை-31 பூசா-33 ஐ. ஈ. டி-1722

# குறுவைப் பட்டத்திற்கு ஏற்ற குறுகிய கால நெல் ரகங்கள்!

குன்றென மகசூல் குவித்திட குறுவைப்பட்டமே சிறந்தது என்பது கடந்தகால அனுபவத்திலிருந்து தெரியவருகிறது. காலம் நமக்குக் கற்றுத் தந்த அனுபவத்தின் அடிப்படையில், குறுவை பட்டத்தில் அதிக மகசூல் தரக் கூடிய, குறுகியகால வயதுடைய ரகங்களைத் தேர்ந்தெடுத்துப் பயிரிடுவது உழவர் பெருமக்களின் கடமையாகும். ஏனெனில், அதிக மகசூல் தரும் குறுகிய கால ரகங்களைப் பயிரிடுவதால் அதிகத் தண்ணீர் தேவையில்லாமலும், பூச்சி-பூஞ்சாளங்களின் தாக்குதல் அதிகமில்லாமலும் சாகுபடி செய்ய இயலும்; அதே நேரத்தில் இரண்டாவது போக சாகுபடியைக் காலதாமதமின்றி துவக்கவும் முடியும். இந்த அடிப்படையில் சிந்தித்துப் பார்க்கும்பொழுது 'ஆடுதுறை-31', 'பூசா-33', 'ஐ. ஈ. டி. 1722' ஆகிய குறுகியகால வயதுடைய உயர் விளைச்சல் தரும் நெல் ரகங்களே குறுவைப் பட்டத்திற்கு மிகவும் ஏற்றவை என்பது தெளிவாகிறது எனவே, இம்மூன்று ரகங்களின் சிறப்புக் குணங்களையும், சாகுபடி முறைகளையும் **'தமிழரசு'** இதழ் சார்பாக தமிழக உழவர் பெருமக்களுக்குக் காணிக்கையாகப் படைத்துள்ளோம்.

## சிறப்புக் குணங்கள்

### ஆடுதுறை—31

அதிசயநெல் 'ஐ. ஆர். 8'-யும், '*வளர்ப்பு 340*' என்ற ரகத்தையும் கருஒட்டுச் சேர்ந்து ஆடுதுறை நெல் ஆராய்ச்சி நிலையத்தில் உருவாக்கப்பட்டதே 'ஆடுதுறை-31'. இது ஏக்கருக்குச் சராசரியாக 2.5 டன் மகசூல் கொடுக்கவல்லது. இந்த ரகம் திருநெல்வேலி மாவட்டத்தில் குறைந்த அளவு உரத்திலேயே, ஏக்கருக்கு 3,840 கிலோ-அதாவது மாவுக்கு ஏறத்தாழ 46 காலம்-மகசூல் கொடுத்துள்ளது. இந்த ரகம் 100 முதல் 105 நாட்களில் அறுவடைக்கு வந்துவிடும். இந்த ரகத்தின் அரிசி குட்டைப் பருமன் ரகத்தைச் சேர்ந்தது; வெண்மையானது. இந்த ரகத்தை அறைக்கும் போது அரிசி அதிகமாக இடிவதில்லை.

### பூசா-33

புதுடில்லியில் உள்ள இந்திய வேளாண்மை ஆராய்ச்சி நிலையத்தில் மேம்படுத்தப்பட்ட 'சபர்மதி' என்ற நெல் ரகத்தையும், 'ரத்னா' என்ற நெல் ரகத்தையும் கரு ஒட்டுச் சேர்த்து உருவாக்கப்பட்டதே 'பூசா-33'. 100 முதல் 105 நாட்களில் அறுவடைக்கு வந்து, ஏக்கருக்குச் சராசரியாக 2.5 டன் மகசூல் அளிக்கவல்லது. இந்த ரகத்தின் அரிசி மணமுடையது; வெண்மையானது; நீண்ட சன்னமானது.

### ஐ. ஈ. டி. 1722

'ஐ. ஆர். 8' நெல் ரகத்தையும், 'தாடுக்கன்' என்ற நெல் ரகத்தையும் கரு ஒட்டுச் சேர்த்து புதுடில்லியில் உள்ள இந்திய வேளாண்மை ஆராய்ச்சி நிலையத்தில் உருவாக்கப்பட்ட இந்த ரகம் 100 முதல் 104 நாட்களில் அறுவடைக்கு வந்துவிடும். இது சராசரியாக ஏக்கருக்கு 2,200 கிலோ மகசூல் தரவல்லது. இந்த ரகத்தின் அரிசி நீண்ட சன்ன ரகத்தைச் சேர்ந்தது; வெண்மையானது.

## இதர குணங்கள்

| விவரம் | ஆடுதுறை—31 | பூசா-33 | ஐ.ஈ.டி. 1722 |
|---|---|---|---|
| பயிர் உயரம் | 100 செ.மீ. | 95 செ.மீ. | நடுத்தர உயரம் |
| 1,000 மணியின் எடை | 22.6 கிராம் | 24.05 கிராம் | 24.9 கிராம் |
| அறைவைத் திறன் | 72.5 சதம் | 69.5 சதம் | 69.5 சதம் |
| புரதச் சத்து | 10.1 சதம் | 8.2 சதம் | 7.8 சதம் |

மேற்கூறிய 3 குறுகிய கால ரகங்களையும் பயிரிட்டு அதிக மகசூல் பெற்றிட பின்கண்ட சாகுபடி முறைகளை மேற்கொள்ளு மாறு பரிந்துரைக்கின்றோம்.

## சாகுபடி முறைகள்

| | |
|---|---|
| விதைக்கும் காலம் ... | ஜூன்-ஜூலை |
| விதை அளவு ... | ஏக்கருக்கு 25 கிலோ |
| நாற்றங்கால் ... | ஏக்கருக்கு 12 சென்ட் பரப்பு. |
| நாற்றங்காலுக்கு உரம்... | நாற்றங்காலில், 1 சென்ட் பரப்புக்கு 2 கிலோ 'டை-அமோனியம் பாஸ்பேட்' வீதம் இடவேண்டும். |
| விதையுடன் மருந்து ... | 1 கிலோவுக்கு 2 கிராம் 'அக்ரசான்' மருந்து வீதம் கலக்கவும். |
| விதைப்பு ... | முளைவிட்ட விதைகளை சென்டிற்கு 2 கிலோ வீதம் விதைப்பது சிறந்தது. |
| நாற்றங்காலில் பயிர்ப் பாதுகாப்பு | நாற்று பறிப்பதற்கு ஒரு வாரம் முன்பாக 'பாரத்தியான்' அல்லது 'என்டிரின்' தெளிக்கவும். |
| நாற்றின் வயது ... | 20 முதல் 25 நாட்கள் |
| நடவு வயல் ... | நன்கு உழுது சேறாக்கி, சமப்படுத்தவும். |
| அடியுரம் ... | ஏக்கருக்குத் தொழு எரு—12 வண்டி<br>தழைச்சத்து—15 கிலோ<br>மணிச்சத்து—15 கிலோ<br>சாம்பல்சத்து—15 கிலோ |
| நடவு இடைவெளி ... | 15 X 10 சென்டி மீட்டர் (6 X 4 அங்குலம்) |
| மேலுரம் ... | 15 கிலோ தழைச்சத்தை இரண்டாகப் பிரித்து, விதைத்த 40-வது நாளிலும் விதைத்த 55-வது நாளிலும் இடவும். |
| களை எடுத்தல் ... | விதைத்த 45-ஆம் நாள் களை எடுக்கவும். |
| பயிர்ப்பாதுகாப்பு ... | பூச்சிகள், பூஞ்சாளங்களின் தாக்குதலைத் தடுக்க வேளாண்மைத்துறையினர் பரிந்துரைக்கும் மருந்துகளை முன்கூட்டியே தெளிக்கவும். புகையான் தாக்குதல் காணப்படின் ஏக்கருக்கு 20 கிலோ 'பி.எச்.சி.' 10 சதம் மருந்து தூவவும். |

### வேண்டுகோள்

இந்திய மக்கள் அனைவருக்கும் இனிய வாழ்வு மலர நமது பிரதமர் திருமதி இந்திராகாந்தி அவர்கள் இருபது அம்சப் பொருளாதாரத் திட்டத்தைக் கொண்டு வந்து செயல்படுத்தி வருகிறார். அத்திட்டத்தின்படி முதல் அம்சத்தின் ஒரு கூறாக, உணவு உற்பத்தியைப் பெருக்க தமிழக வேளாண்மைத்துறை விரைந்து செயலாற்றி, உழவர் பெருமக்களுக்குத் தேவையான விதை, இரசாயன உரம், பூச்சிப் பூஞ்சாள மருந்துகள், கருவிகள் போன்றவற்றை வழங்கி வருகிறது. அது போல் தமிழ்நாடு கூட்டுறவுத் துறையும், நாட்டுடைமையாக்கப் பட்ட வங்கிகளும் உழவர் பெருமக்களுக்குத் தேவையான பயிர்க் கடன் வழங்கி வருகின்றன. இந்த நல்ல வாய்ப்பினைப் பயன்படுத்தி கொண்டு மேற்கூறிய வழியில் பயிரிட்டு, குறுவைப் பட்டத்தில் குன்றென மகசூல் பெருக்கி, உங்கள் வீட்டிற்கும், நாட்டிற்கும் நற்பணியாற்றுமாறு தமிழக உழவர் பெருமக்களை அன்புடன் வேண்டுகின்றோம்.

—ஆர். மாணிக்கம்.

## அறநிலைய ஊழல் புகார் விசாரணைக் குழு

அறநிலையங்களில் ஏற்பட்டுள்ள முறைகேடுகள், நிலங்களை விற்பதிலும், குத்தகைக்கு விட்டதிலும், வேலைகளைக் காண்டிராக்டுகளுக்கு விட்டதிலும் ஏற்பட்டுள்ள ஒழுங்கீனங்கள், ஆலய நிதிகளைப் பெருமளவில் பிற காரியங்களுக்குப் பயன்படுத்தியது ஆகியவை சம்பந்தப்பட்ட புகார்களை விசாரிப்பதற்காக அமைக்கப்பட்டுள்ள விசாரணைக் குழுவின் தலைவராக வருவாய் வாரிய கூடுதல் செயலாளரான திரு. ஆர். பத்மநாபன், ஐ.ஏ.எஸ். அவர்கள் நியமிக்கப்பட்டிருக்கிறார்.

இந்தக் குழுவில், சென்னை பொதுக் கணக்குத் தணிக்கை அலுவலகத்தைச் சார்ந்த முதுநிலைத்தணிக்கை அலுவலர் திரு. பி. கே. இராமசாமி அவர்களும், புதுக்கோட்டை பொதுப் பணித்துறை நிருவாகப் பொறியாளர் திரு. ஜி. விசுவநாதன் அவர்களும் உறுப்பினர்களாக நியமிக்கப் பட்டுள்ளனர்.

பொறுப்பேற்கும் தேதியிலிருந்து 4 மாதங்களுக்குள் அறிக்கை சமர்ப்பிக்குமாறு இந்தக் குழு கேட்டுக் கொள்ளப்பட்டிருக்கிறது.

# நமது சுற்றுப்புறச் சூழ்நிலையைப் பாதுகாப்போம்!

—டி. துரைராஜ்,
தனி அலுவலர்,
சுற்றுப்புறச் சுகாதாரம்,
தமிழ்நாடு அரசு.

மனித வாழ்வினில் குறிப்பிடத்தக்க விளைவினை உண்டாக்கக்கூடிய பௌதிக-இரசாயன-உயிரியல்-சமுதாய இயல் தொடர்பானவை அனைத்தும் சுற்றுப்புறச் சூழ்நிலைக்குத் துணை புரிவன எனலாம். இந்தச் சுற்றுப்புறச் சூழ்நிலை, உயிரினங்களுக்கும், உயிருள்ள-உயிரற்ற சுற்றுப்புறப் பகுதிகளுக்கும் இடையே ஒரு சிக்கல் மிகு பிணைப்பினை ஏற்படுத்தத் தக்க ஒன்றாகும். இந்தப் பிணைப்பு, மிகவும் சிக்கல் வாய்ந்த சூழ்நிலையிலும், சுற்றுப்புறச் சூழ்நிலையைச் சமநிலைப்படுத்த உதவுகிறது. தொழில்களைப் பெருக்கியும், நாட்டுப்புறத்தை நகரமாக்கியும், காடுகளை அழித்தும் தனது முன்னேற்றத்திற்காகப் பாடுபடும் மனிதனின் செயல் முறைகள், இயற்கையாக அமைந்த சூழ்நிலையை மாற்றி விடுகின்றன; கெடுத்து விடவும் செய்கின்றன.

இயற்கை வளத்தை அளவுக்கு மீறிப் பயன்படுத்துவதும், தொழில் நுட்ப வளர்ச்சியைச் சிந்திக்காமல் பயன்படுத்துவதும், மனித வாழ்விற்கும், திட்டங்கள் முறையாக நிறைவேறுவதற்கும் சுற்றுப்புறம் எவ்வளவு இன்றியமையாதது என்பதை உணராததுமே இச் சுற்றுப்புறச் சூழ்நிலை கெடுவதற்குக் காரணமாகும். சூழ்நிலை என்பது ஒன்றோடொன்று பின்னிப் பிணைந்து பல்வேறு கூறுகளைக் கொண்டது என்றாலும், சூழ்நிலை மாற்றத்தை அசுத்தமாக்குதல், நகர்ப்புறமாக்குதல், காடுகளை அழித்தல் என்று மூன்று வகையாகப் பிரிக்கலாம்.

### அசுத்தமாக்குதல்

நீர், நிலம், காற்று ஆகியவை அசுத்தமாக்கப் பெற்றுக் கெடுக்கப்படுவதுதான் சுற்றுப்புறச் சீரழிவிற்கு முக்கிய காரணம். அதை உடனடியாகக் கவனிக்க வேண்டும்.

### தண்ணீர்க் கலப்பு

தொழிற்சாலைகளாலும், நகர்ப்புறப் பகுதிகளாலும், விவசாய சம்பந்தப்பட்ட காரியங்களாலும் தண்ணீர் கெடுவதற்கு வாய்ப்பு ஏற்படுகிறது.

தொழிற்சாலைகளிலிருந்து வெளியாகும் கழிவுப் பொருட்களை அண்மையிலுள்ள ஒரு நீரோட்டத்துடன் முன்யோசனையின்றிக் கலக்கவிடுவதுதான், நமது மாநிலத்தில் பெரும்பாலும் தண்ணீர் கெடுவதற்குக் காரணமாக இருந்து வருகிறது. தமிழ்நாட்டில் 7 வடிசாலைகள், 430 தோல் பதனிடும் சாலைகள், 12 காகித ஆலைகள், 60 நெசவாலைகள், 21 சர்க்கரை ஆலைகள், 10 இரசாயன உரத் தொழிற்சாலைகள், 390 இரசாயனத் தொழிற்சாலைகள், 350 சவ்வரிசி தயாரிப்பு ஆலைகள் ஆகியவை இருக்கின்றன. இந்த ஆலைகள் அனைத்தும், கழிவுப் பொருட்களை அண்மையிலுள்ள நீரோட்டத்தில் நேரிடையாகவோ, மறைமுகமாகவோ கலந்து விட்டு விடுகின்றன. தமிழ்நாட்டிலுள்ள பாலாறு, காவேரி, பவானி, வைகை, தாமிரபரணி போன்றவைகளில் பெரும்பாலானவை தொழிற்சாலைகளின் கழிவுப்பொருட்கள் கலந்த நீரையே தாங்கி வருகின்றன. இதனால் ஆற்று நீர், குளத்து நீர் மட்டுமல்ல, நிலத்துக்கு அடியில் ஓடும் நீருங்கூட, கெடுக்கப்படுகிறது.

தமிழ்நாட்டின் நகரங்களில், ஒரு சில நகரங்களில்தான் கழிவுப் பொருளை வெளியேற்ற சாக்கடை வசதிகள் அமைக்கப்பட்டுள்ளன. அவைகளும் சரியாகக் கவனிக்கப்படுவதில்லை. கழிவுப் பொருட்கள் சரியாக வெளியேற்றப்படாததால், அவை நல்ல தண்ணீர் செல்லுமிடங்களிலும் நுழைந்து, நல்ல நீரையும் கெடுத்துவிடுகின்றன.



இமான்....

விவசாயத்தாலும் தண்ணீர் கெடுகிறது. உணவு உற்பத்தியைப் பெருக்கிடும் ஆர்வ மிகுதியால், விவசாயிகள் இரசாயன உரங்களையும், பூச்சி மருந்துகளையும் அதிகமாகப் பயன்படுத்துகிறார்கள். வீரியமுள்ள உரத்தையும், பூச்சி மருந்தையும் வயலில் அதிகமாகப் பயன்படுத்தி விட்டு வருகிற விவசாயி அந்த மருந்தை, பக்கத்தில் உள்ள நீரோட்டத்தில் கலந்து விடுகிறார். இரசாயன உரங்களிலுள்ள அதிகமான 'நைட்ரஜன்' 'பாஸ்பரஸ்' ஆகியவை மனிதனின் உடல் நலத்தை மிகவும் பாதிக்கின்றன. உலகிலேயே ஓர் இந்தியனின் உடலில், அதிக அளவு 'டி. டி. டி.' இருப்பதாகச் சொல்லப்படுகிறது. ஒரு ஏக்கருக்கு அதிக அளவு 'டி. டி. டி.' பயன்படுத்தப்படுவது ஜப்பானில் தான். (ஜப்பான் ஏக்கருக்கு 10,900 கிராம்; அமெரிக்கா 1,870 கிராம்; இந்தியா 180 கிராம்). ஆனால் இந்தியாவில் தான், மனிதனின் உடலில் 'டி. டி. டி.' அதிகமாக உள்ளது.



**காற்றுக் கலப்படம்**

பாஸ்பேட்டும், அம்மோனியாவும் கலந்து உரம் தயாரிக்கும் உரத் தொழிற்சாலைகள், பெட்ரோலியம் சுத்திகரிப்பு ஆலைகள், இரசாயனத் தொழிற்சாலைகள், அனல் மின் நிலையங்கள், சிமிண்ட் ஆலைகள் ஆகியவைதான் காற்றைக் கெடுப்பதில் முதலிடம் வகிக்கின்றன. இந்த ஆலைகளிலிருந்து வெளியாகும் 'சல்பர் ஆக்ஸைட்', 'ஹைட்ரஜன்' சல்பைட்,' கார்பன் மானாக்ஸைட்', 'நைட்ரஜன் ஆக்ஸைட்', 'அம்மோனியா' போன்றவைச் சுற்றுப்புறத்தைக் கெடுக்கின்றன. காற்று எந்த அளவுக்குக் கெடுக்கப்பட்டுள்ளது என்பதை ஆராய்ந்ததில், சென்னையிலும், மதுரையிலும் மிகவும் அதிக அளவில் பாதிக்கப்பட்டிருக்கிறது என்பது தெரியவந்துள்ளது. இது பற்றி மிகவும் அக்கறை காட்ட வேண்டும்.

தொழிற்சாலைகளுக்கு அடுத்தபடியாகக் காற்றைக் கெடுப்பது போக்குவரத்து வாகனங்கள்: அதிலும் சரியாகப் பாதுகாக்கப்படாமல் பழுதடைந்த வாகனங்கள் அதிகமாகக் காற்றைக் கெடுக்கின்றன. 'நைட்ரஜன் ஆக்ஸைட்', 'கார்பன் மானாக்ஸைட்', 'சல்பர் ஆக்ஸைட்' ஆகியவற்றையெல்லாம் இவ்வாகனங்கள் புகையாக வெளியேற்றிக் காற்றில் கலக்கச் செய்கின்றன.

**மண்ணைக் கெடுத்தல்**

கழிவுப் பொருட்களை நகராட்சியும், தொழிற்சாலையும் கண்ட இடங்களில் கொட்

டிக் குவித்து விடுவதால் மண்ணும் கெடுகிறது. குப்பைக் கழிவுகளைச் சேர்ப்பதும் அகற்றுவதும் நகராட்சிகளுக்குப் பெரும் சிக்கலாக இருக்கிறது. சென்னை நகரத்தில் மட்டும் நாள் ஒன்றுக்கு 1,250 டன் குப்பை குவிகிறது. தாறுமாறாகக் குப்பைகளைக் குவிப்பதால், ஈ, கொசு, எலிகள் ஆகியவை பெருகுகின்றன. நகரமே நாற்றமெடுக்கும்; காணவும் சகிக்காது! தொழிற்சாலைகளின் குப்பையில் சில இரசாயன நச்சுப் பொருட்களும் கலந்திருக்கும். மழைக்காலத்தில் அவை கரைந்து ஆற்று நீரையோ, குழாயடி நீரையோகூடக்கெடுத்து விடக் கூடும்.



**இரைச்சல்**

ஒலிகள் பெருகி, இரைச்சல் மிகுதியால் வரும் கேடுகளும் மிக அதிகம். சிலரது காதுகளைக் கெடுத்துச் செவிடாக்கி விடுகிறது. மூளை நரம்பு நோய்களையும், இரத்த அழுத்த நோய்களையும், இருதய நோய்களையும் பேரிரைச்சல் பெரிதும் உருவாக்கி விடுகின்றது. பேருந்துகள், லாரிகள், ரயில் எஞ்சின்கள், தற்கால விமானங்கள் போன்றவை ஒலியை எழுப்பி, இரைச்சலை ஏற்படுத்துகின்றன. இவை தவிர, நமது நகரங்களில் இரவு பின்நேரத்திலும், அதிகாலையிலும் ஒலி பெருக்கிகளின் இரைச்சல் அதிகமாக உள்ளது. அண்மையில் நடைபெற்ற ஒரு மதிப்பீட்டின்படி, சென்னை மாநகர் இந்த இரைச்சலுக்கு உள்ளாகி அதிகமாக அல்லற்படுகிறது என்பது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

## நகரங்களின் வளர்ச்சியும், மக்கள் தொகைப் பெருக்கமும்

தமிழ்நாட்டில் 1906 ஆம் ஆண்டில் 205 இலட்சமாக இருந்த மக்கள் தொகை, 1971-இல் 410 இலட்சம் என இரு மடங்காகப் பெருகியுள்ளது! மக்கள் தொகைப் பெருக்கம், நகர்ப்புற நிலங்களைச் சரியாகப் பயன்படுத்தாதது, தவறான நகரமைப்புத் திட்டம், குறிப்பிட்ட ஒரு சில இடங்களில் மட்டுமே தொழிற்சாலைகளை அமைப்பது ஆகியவைதான் நகரங்கள் தோன்றுவதற்குக் காரணம். சென்னை நகரத்தில் ஏற்கனவே இருக்கிற மக்களின் தொகை பெருகுவதுடன், வேலை தேடி வந்து குவியும் மக்களும் நகரையே முற்றுகையிடுகின்றார்கள். இதனால் குடிசைகள் பெருகுகின்றன! தண்ணீர், போக்குவரத்து, சாக்கடை வசதி, உணவுப் பண்டம் வழங்குதல் போன்ற மக்களின் தேவைகளை நிறைவேற்ற எடுக்கும் முயற்சிகளை முழுமையாகச் செயல்படுத்த முடியவில்லை. சென்னை நகரின் மக்கள் தொகையில் 30 சதவிகிதம் குடிசைகளில்தான் வாழ்வதாகக் கணக்கிடப்படுகிறது. நகரங்கள் பெருகுவதால் மக்கள் தொகை நெருக்கடி, சுகாதாரக் கேடு, குடிசைகள் பெருக்கம், தண்ணீர், சாக்கடை வசதி, போக்குவரத்து வசதிகளை மேலும் அதிகரிக்க வேண்டிய அவசியம் ஆகிய சிக்கல்கள் பெருகி விடுகின்றன.

நீரும் காற்றும் கெடுவது, நகர வளர்ச்சி, மக்கட் தொகை பெருக்கம் ஆகியவற்றுடன் காடுகளை அழித்தல், அதனையொட்டிச் சில அரிய விலங்குகளும், பறவைகளும் மறைந்து படுதல் போன்ற சுற்றுப்புறப் பிரச்சினைகளும் உள்ளன. காடுகளை அழிப்பதால் மழை பெய்வது குறையும்; சில வகை நல்ல மண்ணும், மண் சரிவுகளும் அரிப்புக்குள்ளாகி அழிந்து விடும்; இயற்கையான தட்பவெப்ப நிலையும் பாதிக்கப்படும். சில விலங்கினங்களும், பறவையினங்களும் அழிந்துபடுவதால், உயிரினங்களின் வளர்ச்சியில் உள்ள சமநிலை பாதிக்கப்படும். கடந்த 300 ஆண்டுகளில் 350 வகை உயிரினங்கள் அழிந்துள்ளன என்று கணக்கிடப்பட்டுள்ளது. அதாவது, ஓர் ஆண்டுக்கு ஓர் உயிரினம் மறைந்து கொண்டே வந்திருக்கிறது எனலாம்!

## நமது பொறுப்பு

நமது சுற்றுப்புறச் சூழ்நிலை பற்றி உலகம் கொண்டுள்ள அக்கறையை நினைவூட்டும் வகையில் ஆண்டுதோறும் ஜூன் திங்கள் 5-ஆம் நாள், 'அனைத்துலகச் சுற்றுப்புறச் சூழ்நிலைநாள்' கொண்டாடப்படுகிறது. எழில் மங்கி வரும் சுற்றுப்புறத்தை எழிலூட்டி வண்ணந் தீட்டவும், வருகின்ற அழிவைத் தடுத்து நிறுத்தவும் அரசு, உள்ளாட்சிகள், தொழில் நிறுவனங்கள் எல்லாவற்றுக்கும் மேலாகப் பொதுமக்கள் ஆகிய அனைவருடைய ஒத்துழைப்பும் தேவை.



நமது சுற்றுப்புறச் சுகாதாரத்தைக் காக்க, பல்வேறு சட்டங்கள் தேவை. மத்திய அரசு, 1972-ஆம் ஆண்டில் வனப் பாதுகாப்புச் சட்டத்தையும், 1974-ஆம் ஆண்டில் தண்ணீர்ப் பாதுகாப்புச் (தண்ணீர்க் கலப்படத் தடுப்பு) சட்டத்தையும் இயற்றியது. காற்றைக் கெடுக்காமல் இருக்கவும் ஒரு தடுப்புச் சட்டம் பரிசீலனையில் இருக்கிறது. நீர், நிலம், காற்று ஆகிய எல்லாவற்றையும் உள்ளடக்கி அவற்றை அசுத்தத்திலிருந்து பாதுகாக்கச்

சட்டம் இயற்றுவது பற்றித் தமிழ்நாடு அரசு பரிசீலித்து வருகிறது. ஏற்கனவே பல மாநிலங்கள் நகர்ப்புற வளர்ச்சியை முறைப்படுத்த நகர வளர்ச்சித் திட்டத்திற்கான சட்டங்கள் இயற்றியுள்ளன. சில பூச்சி மருந்துகளைப் பயன்படுத்துவதையும் மத்திய அரசு முறைப்படுத்தியுள்ளது. மக்கள் தொகை வளர்ச்சி பற்றியும் தனது திட்டங்களை மத்திய அரசு அறிவித்துள்ளது. சுற்றுப்புறச் சூழ்நிலையைப் பாதுகாப்பதன் இன்றியமையாமையை உணர்ந்து, சுற்றுப்புறத்தைக் காப்பதற்குத் தக்க நடைமுறைகளையும் ஆலோசனைகளையும் வகுத்து வழங்கிட 'தமிழ்நாடு சுற்றுப்புறச்



சூழ்நிலைக் காப்புக் கழகம்' ஒன்றைத் தமிழக அரசு உருவாக்கியுள்ளது.

சுற்றுப்புறச் சூழ்நிலையைப் பாதுகாப்பதில் அரசு மட்டுமல்லாமல் உள்ளாட்சிகளும் பெரும் பங்கு கொள்ள வேண்டும். பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கவும், சாக்கடை வசதிகளை அமைக்கவும் உள்ளாட்சிகள் தக்க வழிவகைகளைக் காண வேண்டும். குப்பைகளைச் சேர்த்து அப்புறப்படுத்துவதில் அதிக கவனம் செலுத்தியாக வேண்டும். கழிவுப் பொருட்களைக் கொண்டு 'கம்போஸ்ட் எரு' தயாரிப்பதில் விஞ்ஞான முறைகளைக் கடைப்பிடிக்க வேண்டும். தெருக்களையும், பொது இடங்களையும் தூய்மையாக வைத்திருக்க வேண்டும்.

நீரையும், காற்றையும் கெடுப்பதில் முதலிடம் வகிக்கின்ற தொழில் நிறுவனங்கள், தமது சமுதாயக் கடமையை உணர்ந்து கழிவுப் பொருட்களை முறையாக அப்புறப்படுத்த முன் வர வேண்டும். கழிவுப் பொருட்களை வெளியேற்றவும், ஒதுக்கவும் சரியான இடத்தினை அமைத்திடுதல், சில சமயங்களில் மூலப் பொருட்களையும், தொழில் முறைகளையும் மாற்றிக் கொள்ளுதல், ஆலைகளுக்குள்ளேயே சுகாதாரத்தைப் பாதுகாத்தல் ஆகியவற்றின் மூலம் அக்கேடுகளைத் தொழில் நிறுவனங்களே களையலாம். கழிவுப் பொருட்களை வெளியேற்றுவது பற்றி, தொழிலுக்குரிய திட்டத்தின் ஆரம்பத்திலேயே சிந்தித்து, தொழிலின் ஓர் இன்றியமையாப் பகுதியாக இதனையும் கருதிச் செயல்பட வேண்டும். இதற்காகும் செலவினால் இலாபம் இல்லையே என்று ஒதுக்கிவிடாமல் இதை முதன்மையாகக் கருத வேண்டும்.

எல்லாவற்றுக்கும் மேலாக, சுற்றுப்புறத்தைக் காக்க வேண்டிய பெரும் பொறுப்பு பொதுமக்களிடையே உள்ளது. நமது சுற்றுப்புறத்தைக் காப்பாற்ற வேண்டியதன் அவசியத்தினை நாம் முழுக்க உணர்ந்து கொள்ள வேண்டும். தவறினால், அதன் பின்னர் ஏற்படும் கேடுகளையும் மனத்தில் கொள்ள வேண்டும். நமது சுற்றுப்புறத்தையும், பொது இடங்களையும் தூய்மையாக வைத்துக் கொள்ளுவோமென்றும், சுற்றுப்புறத்தைக் கெடுக்கும் எந்தச் செயலையும் செய்யமாட்டோம் என்றும் நாம் ஒவ்வொருவரும் உறுதி கொள்வோமாக!



# பப்பாளியில் பலவகைப் பதார்த்தங்கள்

மகளிர் அரங்கம்



நம் நாட்டு மக்களின் அன்றாட உணவில் பழங்கள் போதுமான அளவில் இல்லை என்பது நாம் அனைவரும் அறிந்ததே. ஒவ்வொரு ஆண்டும் இந்தியாவில் சுமார் 20 மில்லியன் டன் காய்கறிகளும் பழங்களும் விளைகின்றன. இவைகளை நாம் அன்றாட உணவில் சேர்த்துக் கொள்ள வேண்டும். ஏனென்றால் இதன் மூலம் தான் நம் உடலுக்கு வேண்டிய தாது உப்புக்களும், வைட்டமின் சத்துக்களும் கிடைக்கின்றன. ஒரு நாளைக்கு சுமார் 75—100 கிராம் வரை பழங்களை சாப்பிடுவது நல்லது. நம்மில் பலர் பழங்களை உணவில் சேர்த்துக் கொள்ளாமல் இருப்பதன் காரணம் (1) அதன் முக்கியத்துவம் தெரியாமல் இருப்பதும் (2) அவைகளை சேர்த்துக்கொள்ளும் அளவிற்கு நம் பொருளாதாரம் இல்லாமல் இருப்பதும் ஆகும். இந்நிலையில் விலை குறைந்த அதிக ஊட்டச் சத்துள்ள பப்பாளி நம் மக்கள் அனைவருக்கும் ஒரு வரப்பிரசாதமாக உள்ளது. இதைப் பயிர் செய்வதும் மிக எளிது. மேலும் பயிர் செய்த முதல் ஆண்டிலேயே பலனும் கிடைக்கிறது. பப்பாளியில் முக்கியமானவைகள் 'கோ.1' 'கோ.2' 'சோமலா', 'பெரடீனியா', 'செலக்ஷன்-7', 'பிலிப்பைன்ஸ்' 'கூர்க்ஹனி டியூ' (Coorge Honey Dew) 'தாய்லண்டு' போன்றவைகள் ஆகும். இவைகளில் 'கோ.1' 'கோ.2', 'சோமலா', வகைகளில் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்தில் ஆராய்ச்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. பப்பாளியில் ஒவ்வொரு 100 கிராமிலும் 1110 வைட்டமின் 'ஏ' அலகும் (International unit) 57 மில்லி கிராம் வைட்டமின் 'சி' யும் சுண்ணம்பு, இரும்பு போன்ற தாது உப்புச் சத்துக்களும் இருக்கின்றன.

ஊட்டச் சத்து மிகுந்த பப்பாளிப் பழத்தில் மருந்துக் குணங்களும் வியக்கத்தக்க அளவில் உள்ளன. ஜீரண மண்டலத்தில் ஏற்படும் பல்வேறு வியாதிகளுக்கும் பப்பாளி, மருந்தாகப் பயன்படுகிறது. மேலும் பப்பைன் (papain) எனப்படும் பப்பாளிப் பாலிலிருந்து எடுக்கப்படும் 'என்ஸைம் பௌடர்' மருத்துவத்துறையிலும் அழகுச் சாதனங்கள் தயாரிப்புத் துறையிலும் வெகுவாகப் பயன்படுகிறது.

பப்பாளிப் பழத்தை நம் அன்றாட உணவுடன் எவ்வாறு எல்லாம் சேர்த்துக் கொள்ளலாம் என்பதைச் சற்று நோக்குவோம். நன்கு முதிர்ந்த பப்பாளிக் காயைக் காய்கறியாக நம்மில் சிலரும், பழுத்த பழத்தைப் பெரும்பாலோரும் உபயோகிக்கின்றனர்.

நன்கு முதிர்ந்த பச்சைக் காயைக் கொண்டு பச்சடி, ஊறுகாய் போன்றவற்றைத் தயார் செய்யலாம்.

**பப்பாளிப் பச்சடி**

| | |
|---|---|
| பப்பாளிக் காய் | 1 |
| பச்சைப் பயறு | 50 கிராம் |
| பச்சை மிளகாய் (பொடியாக வெட்டியது) | 5 |
| உப்பு, கடுகு, எண்ணெய், கறிவேப்பிலை, இஞ்சி | தேவையான அளவு |
| தயிர் | 1 கப். |

நன்கு முதிர்ந்த பப்பாளிக் காயை, கழுவி விட்டுத் தோலையும் கொட்டைகளையும் நீக்கி தேங்காய் துருவியால் துருவிக் கொள்ளவும். பச்சைப்பயறுகளைப் போதுமான அளவு தண்ணீர்விட்டு வேக வைக்கவும். வெந்தவுடன் இறக்கிக் குளிர வைக்க வேண்டும். துருவிய பப்பாளியை கொதிக்கும் தண்ணீரில் 5 நிமிடம் வேக வைக்க வேண்டும். (blanching) வேக வைத்த பச்சைப் பயறுடன் வேக வைத்த பப்பாளி, தயிர், தேவையான உப்பு, பச்சை மிளகாய், கறிவேப்பிலை, இஞ்சி ஆகியவற்றை சேர்த்துக் கொண்டு, தாளிக்கவும்,. இதை

பிரியாணி போன்றவற்றுடன் சேர்த்து சாப்பிடலாம்.

முளை கட்டிய பச்சைப் பயறுகளை வேக வைக்காமல் உபயோகித்தால் வைட்டமின் 'சி' சத்து அதிகமாகக் கிடைக்கும். பச்சைப் பயறு சேர்த்துக் கொள்ளாமல் பப்பாளிக் காயுடன் பெரிய வெங்காயத்தை நறுக்கி, கலந்து கொண்டால் வெள்ளரிக் காய் பச்சடிபோல இருக்கும்.

**பப்பாளிப் பொரியல்.**

| | |
|---|---|
| பப்பாளிக் காய் | 1 |
| தேங்காய்ப் பூ | 50 கிராம் |
| பச்சைமிளகாய் | 5-7 |
| உப்பு, கடுகு, மஞ்சள்பொடி எண்ணெய் | தேவையான அளவு |

பப்பாளிக்காயின் தோலையும், விதைகளையும் நீக்கிய பின்பு சிறுசிறு துண்டுகளாக வெட்டிக் கொள்ளவும். பின்பு போதுமான அளவு நீருடன் வேக வைக்க வேண்டும். வெந்தவுடன் இறக்கிக் கொள்ளவும். அடுப்பில் வாணலி வைத்து எண்ணெய் ஊற்ற வேண்டும். எண்ணெய் காய்ந்ததும் கடுகைப் போட்டு, வெடித்ததும், வெந்த காயைகொட்டி உப்பு, மஞ்சள் பொடி, தேங்காய்ப் பூ முதலிய வற்றைச் சேர்த்துக் கிளற வேண்டும். இவ்வாறு 5 நிமிடம் கிளறிய பிறகு இறக்கி உணவுடன் கலந்து சாப்பிடச் சுவையாக இருக்கும்.

**பப்பாளி ஊறுகாய்.**

| | |
|---|---|
| பப்பாளிக் காய் | 1 |
| உப்பு | 20 கிராம்/100 கிராம் |
| காடி அல்லது வினிகர் | 100-150 மில்லி லிட்டர் |
| பொடி செய்த கடுகு | 1 மேசைக் கரண்டி |
| மஞ்சள் பொடி | 1 தேக்கரண்டி |
| பச்சைமிளகாய் | 50 கிராம் |
| மாங்காய் இஞ்சி | 1 துண்டு |

பப்பாளிக் காயின் தோலை நீக்கிவிட்டு சிறு சிறு துண்டுகளாக வெட்டிக் கொள்ளவும். வெட்டிய துண்டுகளை கொதிக்கும் தண்ணீரில் 5 நிமிடம் போடவும். சுத்தமான ஜாடியில் இந்தக் காயைப் போடவும். அதனுடன் வினிகர், உப்பு, பொடி செய்த கடுகு, மஞ்சள்தூள் நறுக்கிய பச்சைமிளகாய், இஞ்சி சேர்த்து காற்றுப் புகாமல் மூடி வைக்கவும். ஒரு நாளைக்கு ஒருமுறை இக்கலவையைக்குலுக்கி வைக்கவும். இரண்டு வாரத்தில், உண்ணுவதற்குத் தகுந்த சுவையும் மணமும் மிக்க ஊறுகாய் கிடைக்கும். இஞ்சியும், பச்சை மிளகாயும் சேர்த்துக் கொள்ளாமலும், வினிகருக்குப்பதில் எலுமிச்சைப் பழத்தின் சாறு சேர்த்தும் ஊறுகாய் போடலாம்.

**பப்பாளிப்பழ ஜாம்.**

| | |
|---|---|
| பப்பாளிப் பழம் | 200 கிராம் |
| சர்க்கரை | 200 கிராம் |
| 'சிட்ரிக்' அமிலம் | 2 கிராம் |



நன்கு பழுத்த பழத்தை எடுத்துக் கழுவி தூசிகளை அகற்றிச் சுத்தப்படுத்தவும். எவர் சில்வர் கத்திகொண்டு தோலைச் சீவி பழங்களை இரண்டு துண்டங்களாக வெட்டியபின் விதைகளையும் நார்போன்ற பகுதிகளையும் நீக்கிய பின் சிறு சிறு துண்டுகளாக நறுக்கவும். பின்னர் எவர்சில்வர் பாத்திரத்தில் பழத்துண்டுகளைப் போட்டு ஒரே மாதிரியான கூழாகும் வரை நசுக்கவும். இதனுடன் சர்க்கரையும், சிட்ரிக் அமிலமும் கலந்து அடுப்பில் வைத்துக் காய்ச்ச வேண்டும். தொடர்ந்து கிளறிக் கொண்டே இருக்க வேண்டும். இல்லாவிட்டால் அடிபிடித்துவிடும். இவ்வாறு காய்ச்சிக் கொண்டு இருக்கும்போது ஒரு ஸ்பூனைவிட்டு கலவையை எடுத்தால், அது தட்டுத் தட்டாக விழ வேண்டும். இந்தப் பதம் வந்தவுடன் கொதிநீரில் (Sterilised) கொதிக்க வைத்த பாட்டில்களில் காற்றுப்புகாவண்ணம் அடைத்து, பின்னர் குளிர்ச்சியான ஈரமற்ற இடத்தில் வைக்கவும். இதை, சிறியவரும் பெரியவரும் ரொட்டி, சப்பாத்தி மற்ற பலகாரங்கள் முதலியவற்றுடன் சேர்த்து விரும்பி சாப்பிடுவார்கள்.

**பலவகைப் பழங்களுடன் பப்பாளி ஜாம்.**

மாம்பழம், அன்னாசிப்பழம் போன்றவற்றுடனும் சேர்த்துப் பப்பாளிப்பழ ஜாம் செய்யலாம்.

| | |
|---|---|
| கூழாக்கப்பட்ட பப்பாளி | 1 பாகம் |
| அன்னாசிப் பழச் சாறு | 1 பாகம் |
| கூழாக்கப்பட்ட மாம்பழம் | 1 பாகம் |
| சர்க்கரை | 3 பாகம் |
| 'சிட்ரிக்' அமிலம் | 1 சதவிகிதம் |

என்ற முறையில் எடுத்துக் கொள்ள வேண்டும்.

**பப்பாளி புளி ஜாம்.**

இதற்கு, புளியை அப்படியே சேர்த்துக் கொள்ள முடியாது. புளியிலிருந்து புளிநீர் முதலில் தயார் செய்ய வேண்டும். 40 கிராம் புளியை எடுத்துக் கொண்டு 200 மில்லி லிட்டர் தண்ணீரில் சுமார் 30 நிமிடம் ஊற வைக்கவும். பின்னர் புளியை நன்றாகக் கரைத்து மெல்லிய துணியினால் வடிகட்டிக் கொள்ளவும்.

| | |
|---|---|
| புளிநீர் | 1 பாகம் |
| பப்பாளிப் பழம் | 2 பாகம் |
| சர்க்கரை | 3 பாகம் |
| சர்க்கரை | 3 பாகம் |

என்ற விகிதத்தில் கலந்து கொண்டு மேலே சொன்னதுபோல் தயார் செய்யவும். இது சாப்பிட மாம்பழ ஜாம் போல் இருக்கும்.

**பப்பாளிப்பழ நெக்டர் (Papaya Nectar)**

| | |
|---|---|
| பப்பாளிப்பழம் | 1 கிலோ |
| தண்ணீர் | 1.5 லிட்டர் |
| சர்க்கரை | 400 கிராம் |
| 'சிட்ரிக்' அமிலம் | 1.25 கிராம் |

நன்கு பழுத்த பழத்தைக் கழுவிக் கொள்ளவும். கத்தியினுல் தோலை நீக்கிவிட்டு பழத்தை இரண்டாக வெட்டி விதைகளை நீக்கிவிடவும். சிறுசிறு துண்டுகளாகப் பழத்தை நறுக்கவும். ஒரே மாதிரியான கலவையாக்கி ஒரு மஸ்லின் துணியில் வடிகட்டி, நாரு போன்ற சதைப்பகுதியை அகற்றவும். இத்துடன் தேவையான அளவு தண்ணீர், சர்க்கரை, 'சிட்ரிக்' அமிலம் சேர்த்துக் கலக்கிக் கொள்ளவும். பின்னர் அடுப்பில் வைத்து, கலக்கிக் கொண்டே காய்ச்சவும். நன்ருகக் கொதிக்க ஆரம்பித்ததும் 10 நிமிடங்கள் கழித்து அடுப்பிலிருந்து இறக்கி, சுத்தம் செய்த பாட்டில்களில் ஊற்றி வைக்கவும். தேவையான போது உபயோகித்துக் கொள்ளவும். (குளிர்சாதனப் பெட்டியில் வைத்தால் நீண்ட நாட்கள் வைத்துக் கொள்ளலாம்.)

**பப்பாளி ஷீர் (Papaya Sheer)**

| | |
|---|---|
| பப்பாளிப் பழக் குழம்பு | 250 கிராம் |
| சர்க்கரை | 500 கிராம் |
| பால் | 1 லிட்டர் |

பப்பாளிக் குழம்பு தயார் (மேலே கூறியது போல்) செய்தவுடன் மஸ்லின் துணியால் வடிகட்டிக் கொள்ளவும். இதனுடன் தேவையான சர்க்கரை சேர்த்துக் கொள்ளவும், பாலைத் தனியாகக் காய்ச்சி, குளிரச் செய்ய வேண்டும். பின்னர் பழக்குழம்புடன் சேர்த்து உடனே சாப்பிடுவது நல்லது. இதை நீண்ட நாட்கள் கெடாமல் வைத்திருக்க முடியாது. குளிர்சாதனப் பெட்டி இருந்தால் சாப்பிடுவதற்கு முன்பு நன்ருக, குளிரச் செய்து சாப்பிடலாம். அவ்வாறு செய்து சாப்பிட்டால் பாதாம் ஷீர்போல் இருக்கும்.

**பப்பாளிப்பழ லெதர் (Papaya Leather)**

பழங்களைச் சுத்தம் செய்து மேலே சொன்னதுபோலக்கூழாக்கிக் கொண்டு மெல்லிய துணியினுல் வடிகட்டிக் கொள்ளவும். இவ்வாறு எடுத்த பழக்குழம்பை வெண்ணெய் தடவிய எவர்சில்வர் தட்டில் இலேசாகப் பரப்ப வேண்டும். இந்தத் தட்டுக்களைச் சல்லடைத் துணியினுல் மூடிச் சூரிய ஒளியில் வைக்க வேண்டும். ரசம் நன்கு காய்ந்தபின் மேலும் ஒருமுறை பப்பாளிக் குழம்பை ஊற்றிக் காய வைக்க வேண்டும். இப்படியே பல தடவைகள் செய்து அவற்றின் கனமானது சுமார் 1.25 செ.மீ. வரும்வரை செய்ய வேண்டும். இதைச் சிறு சிறு துண்டுகளாக வெட்டி வெண்ணெய்க் காகிதத்தில் சுற்றிப் பாட்டில்களில் போட்டுக் காற்றுப் புகாமல் அடைக்க வேண்டும்.

**பப்பாளி மிட்டாய் (Papaya Toffee)**

| | |
|---|---|
| பப்பாளிப்பழம் | 1000 கிராம் |
| சர்க்கரை | 600 கிராம் |
| குளுகோஸ் | 100 மி.கிராம் |
| பால்பவுடர் | 160 மி.கிராம் |
| வனஸ்பதி | 160 மி.கிராம் |

நன்கு பழுத்த பழத்திலிருந்து பழக்கூழ் தயார் செய்து கொள்ள வேண்டும். இப்படிக் கூழ் மூன்றில் ஒருபாகம் ஆகும்வரை காய்ச்ச வேண்டும். பின்னர் சர்க்கரை, குளுகோஸ், வனஸ்பதி முதலியவற்றைச் சேர்த்துச் சிறிது தண்ணீரில் பால்பவுடரையும் கலக்கி சேர்க்கவும். பின்னர் தொடர்ந்து கிளறிக்கொண்டே காய்ச்ச வேண்டும். மிட்டாய் பதம்வந்தவுடன் வெண்ணெய் தடவிய தட்டில் ஊற்றி குளிர வைக்கவும். குளிர்ந்தவுடன் சதுரமாக வெட்டி எடுத்து காற்றுப் புகாத கண்ணுடி ஜாடியில் வைக்கவும். குழந்தைகள் இதை மிகவும் விரும்பி உண்ணுகிறுர்கள்.

மற்ற பழவர்க்கத்தின் விலையை நோக்கும் இடத்து, பப்பாளி மிகவும் மலிவு. ஆனுல் ஊட்டச்சத்து மிகுந்தது. எனவே, மேற்கூறியவாறு பதார்த்தங்களைச் செய்து சுவைத்து இன்புறலாம்.

—செல்வி ஜி. மணிமேகலை,
உணவு நுண்ணியல்துறை,
தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகம்,
கோயமுத்தூர்-3.



# படமும் செய்தியும்




கோவைப் பேருந்து நிலையத்தில் 26-5-'76 அன்று ஆளுநர் ஆலோசகர் திரு பி. கே. தவே அவர்கள் அவினாசிலிங்கம் மனையியல் கல்லூரியினரால் நடத்தப்பெறும் ஜனதா உணவகத்தை, அவினாசிலிங்கம் கல்வி நிலையங்களின் நிறுவனர் திரு. தி. சு. அவினாசிலிங்கம் அவர்கள் தலைமையில் தொடங்கி வைத்தார்கள். மாவட்ட ஆட்சித் தலைவர் திரு எஸ். நரசிம்மன் விற்பனையைத் தொடங்கி வைத்தார். இந்தியாவிலேயே, ஒரு கல்லூரியினரால், அதன் ஆசிரியைகளாலும், மாணவிகளாலும் நடத்தப்படுகிற முதல் ஜனதா உணவகம் இது என்பது குறிப்பிடத்தக்கது.



சோழவரத்தில் உள்ள விமான தளத்தில், இரவும் பகலும் இடையறாது உணவு தானியங்களைச் சேமித்து வைக்கும் பணியைத் தமிழ் நாடு அரசின் தலைமைச் செயலாளர் அவர்கள் 4-6-'76-ல் துவக்கி வைத்தார்.





சென்னைத் துறைமுகத்தில் கப்பல்களில் இருந்து இரசாயன உரங்களை இறக்கி, மூட்டைகளாகச் செய்யும் பணியை 4-6-'76-ல் மத்திய கப்பல் மற்றும் போக்கு வரத்துத் துறை அமைச்சர் திரு ஜி. எஸ். தில்லான் அவர்கள் தலைமையில், மத்திய அரசின் ராஜாங்க வேளாண்மை அமைச்சர் திரு. அன்னா சாகிப் பி. ஷிண்டே அவர்கள் துவக்கி வைத்தார். ↑

தமிழ்நாடு கிராம சேவகர்கள் சங்கத்தின் சார்பாக 20 அம்சப் பொருளாதாரத் திட்டக் கருத்தரங்கு காந்தி கிராமத்தில் நடைபெற்றது. 4-6-'76-ல் தமிழ்நாடு ஆளுநர் அவர்கள் அக்கருத்தரங்கின் நிறைவு விழா உரையாற்றினார். ↓




சென்னை எடப்பாளையத்தில் 6-6-'76-ல் வரதட்சிணை எதிர்ப்பு மாநாடு நடைபெற்றது. தமிழ்நாடு ஆளுநர் திரு கே. கே. ஷா அவர்கள் அம்மாநாட்டிற்குத் தலைமை தாங்கினார். அம்மாநாட்டில் நடிகர் திலகம் திரு. சிவாஜி கணேசன் அவர்களும் கலந்து கொண்டார். அம்மாநாட்டில் பல இளைஞர்கள் ''வரதட்சிணை வாங்க மாட்டோம்'' என்று உறுதி கூறினார்கள். →








சென்னை எழும்பூரில் உள்ள குழந்தைகள் நல்வாழ்வு மற்றும் மருத்துவமனையில் 4-6-'76 அன்று ''சமுதாயத்தில் குழந்தைகள் நல்வாழ்வை ஊக்குவிப்பதற்காக, குழந்தைகள் மருத்துவமனைக் கல்வி திட்டத்தை'' தமிழ்நாடு ஆளுநர் அவர்களின் ஆலோசகர் திரு ஆர். வி. சுப்பிரமணியன் அவர்கள் துவக்கி வைத்தார். ↑



←

எழும்பூரில் உள்ள போக்குவரத்து ஆணையாளர் அலுவலகத்தில் 'கில்டு ஆஃப் ஸர்வீஸ்' சார்பில் ஏற்படுத்தப்பட்டுள்ள 'ஜனதா காண்டீன்' 7-6-'76-ல் சென்னை நகர காவல் துறை ஆணையாளர் திரு கே. செந்தாமரை அவர்கள், திறந்து வைத்தார்.



வட ஆர்க்காடு மாவட்ட 20 அம்சத் திட்ட விளக்கவிழாவினை 9-6-'76 அன்று வேலூரில் சென்னை வானொலி நிலைய இயக்குநர் திரு எம். எஸ். கோபால் அவர்கள் துவக்கி வைத்தார். அவ்விழாவிற்கு வட ஆர்க்காடு மாவட்ட ஆட்சித் தலைவர் திரு மு. பரமசிவம் அவர்கள் தலைமை வகித்தார். அவ்விழாவினையொட்டி அமைக்கப்பட்டிருந்த கண்காட்சியினை மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களும், சென்னை வானொலி நிலைய இயக்குநர் அவர்களும் பார்வையிட்டனர். →



# மத்திய அரசு உதவியுடன் தமிழ்நாட்டில் தேசிய நெடுஞ்சாலை வளர்ச்சி

இ. சி. சந்திர சேகரன்,
தலைமைப் பொறியாளர்,
தேசிய நெடுஞ்சாலைத்துறை,
தமிழ்நாடு.

ஒரு நாட்டினுடைய பொருளாதார வளர்ச்சிக்கும், சமுதாய ஒருமைப் பாட்டிற்கும், அந்த நாட்டில் உள்ள சாலை அமைப்பே அடித்தளமாக அமைகிறது. பண்டங்களின் நெடுந்தொலைப் போக்குவரத்து, ரெயில்கள் மூலமாகவும், ஆகாய மார்க்கமாகவும், கடல் வழியிலும் கணிசமான அளவு நடைபெற்றாலும், நல்லதோர் சாலை அமைப்பின்றி அது நிறைவு பெற இயலாது. இதனைக் கருத்தில் கொண்டு, நமது பாரதப் பிரதமர் இந்திரா காந்தி அவர்கள் உருவாக்கிய 20 அம்சங்கள் கொண்ட இணைந்ததோர் பொருளாதாரத் திட்டத்திலே, தடை ஏதுமின்றி பல மாநிலங்களில் இயங்கும் வண்ணம் ''தேசீய சாலைப் போக்குவரத்துக்கு உரிமம் வழங்குதல்'' (National Permit System) இன்றியமையாததோர் இடம் பெற்றுள்ளது. புதுமை சால் வளர்ச்சித் திட்டத்தின் இந்தப் போக்குவரத்து அம்சம் பொலிவுடன் நிறைவேற, தேசீய நெடுஞ்சாலை அமைப்பு எவ்வாறு தகுதி பெற்று வருகிறது என்பதைக் காண்போம்.

**தேசீய நெடுஞ்சாலை என்றால் என்ன ?**

இந்திய சாலைகள் காங்கிரஸ் (Indian Road Congress) நமது நாட்டின் சாலைகளை, அவற்றின் முக்கியத்துவமும், தரமும் கருதி, ஐவகையாய்ப் பிரித்துள்ளது. அவற்றில் முதலாவதாக விளங்கும் தேசீய நெடுஞ்சாலைகள், மத்தியத் தலைநகரிலிருந்து மாநிலங்களின் தலைநகர்களை அடையும் வண்ணமும், முக்கியத் துறைமுகங்களை மற்றப் பெருநகர்களுடன் சேர்க்கும் வண்ணமும், நாட்டின் குறுக்கிலும் நெடுகிலும் சென்று, அண்டை நாடுகளின் எல்லை வரையில் பரந்துள்ளவையாகும்.

நம் நாட்டில் மொத்தமுள்ள சாலைகளில் 7 சதவிகித அளவே தேசீய நெடுஞ்சாலைகளாக அமைந்திருப்பினும், மொத்த சாலைப்போக்குவரத்தில் 35 முதல் 40 சதவிகிதம் வரை இவற்றின் மூலமே நடைபெறுகிறது.

ஆகவே பண்டங்கள் மற்றும் பயணிகளின் போக்குவரத்துக்கு மட்டுமன்றி, தேசப் பாதுகாப்பிற்கும், உள் நாட்டில் அமைதி காக்கவும் பயன்படும் தேசீய நெடுஞ்சாலைகளை, ''நாட்டின் உயிர் நாடிகள்'' என்றே கூறலாம்.

1947-ஆம் ஆண்டிலிருந்து, தேசீய நெடுஞ்சாலைகளைப் பராமரிக்கவும், அவற்றின் வளர்ச்சிப் பணிகளை மேற்கொள்ளவும், இந்திய அரசு பொறுப்பேற்று 1956-ஆம் ஆண்டில் அதற்குச் சட்ட உருவம் அளித்தது. இருப்பினும், மாநில அரசுகளே அச்சாலைகளை பராமரிக்கவும், வளர்ச்சிப் பணிகளை மேற்கொள்ளவும், சில செயல்முறைப் பொறுப்புகளைப் பகிர்ந்து அளித்துள்ளது. அதன்படி தமிழ்நாட்டில் மாநில நெடுஞ்சாலைத் துறையே இப்பொறுப்பை ஏற்றுள்ளது.

**தமிழ்நாட்டில் தேசீய நெடுஞ்சாலைகள் :**

தமிழ்நாட்டின் தேசீய நெடுஞ்சாலைகள், தலைநகராம் சென்னையை மூன்று அண்டை மாநிலங்களுடன் இணைப்பதோடு, தஞ்சை தவிர்த்த மற்ற எல்லா மாவட்டத் தலைநகரங்களோடும், இராமேஸ்வரம் போன்ற பெருங்கோயில் தலங்களோடும், தொடர்பு கொள்ளவும் வழி வகுக்கின்றன. மேலும், 'கங்கை நதிப்புறத்துக் கோதுமைப் பண்டம், காவிரி

வெற்றிலைக்கு மாறு கொள்ளுவோம்' என்று சுதந்தர இந்தியாவிற்காக மகா கவி பாரதி திட்டமிட்ட வாணிப மறுமலர்ச்சியை உருவாக்கும் வகையில், வடக்கையும் தெற்கையும் வளமுறப் பிணைக்கும் வாரணாசி—கன்னியாகுமரிச் சாலையும், தமிழ்நாட்டில் ஒரு மத்திய ரேகை போல் ஊடுருவிச் செல்கிறது. இவற்றோடு, அண்மையில் தூத்துக்குடித் துறைமுகத் தொழில் நகரை திருநெல்வேலியொடு இணைக்கும் சாலையும் தேசிய நெடுஞ்சாலையாக உயர்த்தப்பட்டுள்ளது.

இவ்வாறாக, நமது பாரத தேசத்தில் மொத்தமுள்ள 28,870 கி.மீ. நீள தேசிய நெடுஞ்சாலை அமைப்பில் 1,852 கி.மீ. நீளமுள்ள பகுதி தமிழ்நாட்டில் செல்கிறது.

**சுதந்திர இந்தியாவில் திட்டமிட்ட வளர்ச்சி :**

1951-ஆம் ஆண்டு, நாட்டின் ஐந்தாண்டு வளர்ச்சித் திட்டங்களைத் துவக்கும் வரையில், தேசிய நெடுஞ்சாலையில் ஒரு சில மேம்பாட்டுப் பணிகள் மிக அவசியமான இடங்களில் மட்டும் ஆங்காங்கே செயல்படுத்தப்பட்டன. அது வரை மொத்தசாலைப் போக்குவரத்தில், மாட்டு வண்டிகளின் பங்கு அதிகமாகவும் மோட்டார் வண்டிகளின் பங்கு குறைவாகவும் இருந்தது. அதற்கு முன் பெரும்பாலும் கருங்கல் கப்பித் தளம் கொண்டிருந்த சாலைகள் (Water Bound Roads) வேக வாகனங்களின் தேவைக்கேற்ப, முதல் இரண்டு ஐந்தாண்டுத் திட்டக் காலங்களில் தார்ச் சாலைகளாக (Black Tapped Roads) மாற்றி அமைக்கப்பட்டன. மற்றும், நம் சாலைப் போக்கில் பல இடங்களில் குறுக்கிடும் ஆறுகளைக் கடக்க என இருந்த தரைப் பாலங்களும், தளமில்லா வண்டிப் பாதைகளும், எல்லாக் காலத்துக்கும் ஏற்ற வகையில் மேம்பாலங்களாக மாற்றிக்கட்டப்பட்டன. அவற்றில் பூதலூர் காவிரிஆற்றுப் பாலமும், ராணிப்பேட்டை பாலாற்றுப் பாலமும், விழுப்புரம் பெண்ணையாற்றுப் பாலமும் முக்கியமானவை.

மேலும், செங்கற்பட்டு அருகில் பாலாற்றில் முன் வலுவேற்றப்பட்ட கம்பி கொண்ட சிமிட்டிக் கலவை முறை என்னும் ( Prestressed Concrete ) ஒரு புதுமையான தொழில் நுட்ப உத்தியை, நமது நாட்டிலேயே முதன் முதலாக சாலைப் பால அமைப்பில் கையாண்டது நமது பொறியாளர்களின் சாதனையாகும்.

திட்டமிட்ட வளர்ச்சியின் காரணமாக, நாட்டின் தொழில் வளமும், விவசாயப் பொருள் உற்பத்தியும், வாணிபமும் பெருகின. சாலை வாகனங்கள் எண்ணிக்கையிலும், எடையிலும், உருவிலும், பல மடங்கு விரிவடைந்தன. இந்நிலையில் 1959-ஆம் ஆண்டு பம்பாயில், நமது நாட்டின் திறமைசாலிப் பொறிஞர்கள் ஒன்று கூடி, சாலை மேம்பாட்டு வளர்ச்சி இன்றியமையாமையை உணர்ந்து, தொலைநோக்குடன் 1960-ஆம் ஆண்டு முதல் செயலாற்ற ஓர் 20 ஆண்டு ''அனைத்துச் சாலை வளர்ச்சித் திட்டத்தை'' உருவாக்கினார்கள். இது ''பம்பாய்த் திட்டம்'' எனப் பிறகு வழங்கியது.

இத்திட்டத்திற்கேற்ப, தமிழ்நாட்டில் 1969-ஆம் ஆண்டுவரையிலான மூன்று ஐந்தாண்டுத் திட்டங்களில், தேசிய நெடுஞ்சாலைகளின் மேம்பாட்டிற்காகவும் புதிய பாலங்கள் அமைக்கவும், பராமரிப்பிற்காகவும், மொத்தம் சுமார் 14 கோடி ரூபாய் செலவிடப்பட்டது. நான்காவது ஐந்தாண்டுத்திட்ட காலத்தில் தேசிய மேம்பாட்டுப் பராமரிப்புப் பணிகள் கணிசமான அளவு விரிவாக்கப்பட்டு ரூ. 22 கோடி அளவில்



செயல்படுத்தப்பட்டன. அவ்வாறே, ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் முதலிரண்டு ஆண்டுகளில், ஆண்டொன்றுக்கு ஐந்து கோடி ரூபாய்க்கு மேற்பட்ட அளவில் செலவழிக்கப்பட்டுள்ளது.

**மேம்பாட்டு இனங்களும், பயனும் :**

முன் கூறிய கணிசமான செலவு தொகை, பயனுறு வகையில் நாட்டின் முன் வரிசைத் தேவைக்கே சென்றுள்ளதா என்பதைச் சற்று நோக்குவோம். நமது தேசிய நெடுஞ்சாலைகளில், நாம் மேற்கொண்டுள்ள பணிகளை பாலங்களை மாற்றி அமைத்தல், சாலைத் தடத்தை அகலமாக்குதல், சாலைத்தளத்தை வலுவாக்குதல், செங்குத்தான ஏற்ற இறக்கங்களைச் சரியாக்குதல், குறுகலான வளைவுகளை நேராக்குதல், நெரிசல் மிகுந்த நகர்களோடு செல்லும் பாதைகளுக்கு நகர்ப் புறத்தே மாற்றுப் பாதைகள் (By Pass Roads) அமைத்தல், இருப்புப் பாதை கடவுகளில் மேம்பாலம் அமைத்தல், என இனம் வகுக்கலாம். இவையனைத்தும், வளர்ந்து வரும் சாலை வேக வாகனங்கள் மணிக்கு 100 கிலோ மீட்டர் அளவில் தங்கு தடையின்றி, எரிபொருள் சிக்கனமாய் கையாண்டு விபத்துக்களின்றி, ஆட் சேதம், பொருட் சேதம், நேரத்தில் சேதம் தவிர்த்துச் செயல்படவும், தொழிற்சாலைகளுக்கான பிரம்மாண்டமான பளு மிக்க இயந்திரங்களைக் கொண்டு செல்லவும், மிக இன்றியமையாத தேவைகளாதலால், இவற்றின் முதலீட்டைப் போல் பன்மடங்குப் பயனை நாட்டின் பொருளாதாரத்திற்குத் திருப்பித்தர வல்லவையாகும்.

**பாலம் அமைப்பில் பொறியியல் திறமை :**

தேசிய நெடுஞ்சாலை வளர்ச்சிப் பணிகளாக, மொத்தம் 530 பாலங்கள் மற்றும் சாலை மேம்பாட்டுப் பணிகளுக்கு ஒப்புதல் அளிக்கப்பட்டன. இவற்றில் 14 பெரும் பாலங்கள் உள்ளிட்ட 290 பணிகள் இதுகாறும் முடிக்கப்பட்டுள்ளன. மற்றைய பணிகள் யாவும் பல்வேறு நிலைகளில் நடைபெற்று வருகின்றன. அவற்றில் பவானி அருகில் கட்டப்படும் காவிரியாற்றுப் பாலமும், திருச்சி அருகே கொள்ளிடத்தின் மேலுள்ள பழைய வலு விழந்த இரும்பு உத்திரப் பாலத்திற்குப் பதிலாக, விரைவில் கட்டப்பட விருக்கும் நவீன முறைப் பாலமும் முக்கியமானவையாகும்.

**தேசிய ஒற்றுமை வளர்க்கும் இராமேஸ்வரம் கடல் பாலம் :**

மற்றுமோர் நினைவில் கொள்ளத்தக்க முக்கிய இனம், அனைத்திந்திய முக்கியத்துவம் வாய்ந்த ஆலயத்தினைக் கொண்ட இராமேஸ்வரம் தீவினை தமிழகத்தின் முக்கிய நிலப்பரப்புடன் இணைத்திடும் வண்ணம் பாம்பன் நீர்ச் சந்தியின் குறுக்காக அமைக்கப்படும் பாங்குறு சாலைப் பாலம் ஆகும். ''சிங்களத் தீவினுக்கோர் பாலம் அமைப்போம், சேதுவை மேடுறுத்தி வீதி சமைப்போம்' என அன்று மகாகவி பாரதி கற்பனைப் பாலம் அமைத்தார். 1973-ம் ஆண்டு, பெருமதிப்பிற்குரிய நமது பாரதப் பிரதமர் அவர்கள் உண்மையான பாலம் அமைப்பதற்கான அடிக்கல் நாட்டினார்கள். இப்பாலம் அமைப்பதற்கான உத்தேச மதிப்பீடு 7 கோடி ரூபாய் ஆகும். இப்பாலம் தான் இந்தியத் துணைக் கண்டத்திலேயே, கடலின் நடுவே அமைக்கப்படும் முதற் பாலம் ஆகும். இப்பாலம் அமைக்கும் பணி பாரதப் பொறிஞர்களின் திறமைக்குச் சான்றாக அமைந்துள்ளது. 1978-ஆம் ஆண்டின் இறுதியில், இந்தப் பாலம் கட்டி முடிக்கப்பட்ட பின், நம் நாட்டின் தேசிய ஒற்றுமைக்கு மட்டுமன்றி அண்டை நாடாம் இலங்கையுடன் உறவை வளப்படுத்தவும் நிச்சயம் இது உதவும்.

**சாலை மேம்பாடு :**

சாலைப் பணிகளைப் பொறுத்த மட்டில், பல தரப்பட்ட 1,113 கிலோ மீட்டர் நீளச் சாலையில் மேம்பாட்டுப் பணிகள் பல மேற்கொள்ளப்பட்டு, 490 கிலோ மீட்டர் தூரத்திற்கு இது வரை முடிவடைந்துள்ளன.

**மாற்றுப் பாதைகள் :**

மக்கள் நெருக்கம் அதிகம் கொண்ட சிறு நகர்கள், பெரிய நகர்கள் இவைகளில் நேரடிப் போக்குவரத்து வாகனங்கள் நுழைந்து வெளி வருவதில் உள்ள இடையூறுகளைத் தவிர்க்கும் வகையில், நகர்ப்புறத்தே மாற்றுச் சாலையின் அமைக்க வேண்டியது அவசியமாகும். இப்படி அமைக்கப்பட்டவற்றில் காவிரிப் பாலம் உள்ளிட்ட திருச்சி மாற்றுப் பாதையும், வைகைப் பாலம் இணைந்த மதுரை மாற்றுப் பாதையும் முக்கியமானவை.

நான்காவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் 156 இலட்ச ரூபாய் மதிப்பில் மாற்றுச் சாலை அமைக்கும் பணி பெருமளவில்



மேற்கொள்ளப்பட்டு, பல்வேறு சாலைகளில் 13 ஊர்களில் முடிவடைந்துள்ளது. மற்றும் ஆறு ஊர்களில் பணி நடைபெற்று வருகிறது.

**சாலை — ரயில் குறுக்கீட்டில் மேம்பாலம் :**

போக்குவரத்து நேரத்தை மிச்சப்படுத்தி, எரி பொருள் செலவில் சிக்கனம் செய்ய, தற்போதுள்ள இருப்புப் பாதைக் கடவுகளுக்குப் (Level Crossing) பதிலாக மேம்பாலம் அமைக்கும் பணி அவசியமான தொன்றாகும். இவ்வகையில் சென்னை—திருச்சி தேசிய நெடுஞ்சாலையில், தாம்பரம் அருகில் அமைக்கப்பட்ட ரயில் மேம்பாலமும், செங்கல்பட்டு—பரனூர் அருகில் கட்டி முடித்து நம் பாரதப் பிரதமர் திருமதி இந்திராகாந்தி அவர்களால் 1974-ஆம் ஆண்டு திறந்து வைக்கப்பட்ட மேம்பாலமும் முக்கியமானவையாகும். மேலும், நான்கு ரயில் மேம்பாலங்கள் இதே நெடுஞ்சாலையில் தொழுப்பேடு, முண்டியம்பாக்கம் மற்றும் கந்தம்பாக்கம், திருச்சியை அடுத்த பிச்சாண்டார் கோயில் ஆகிய இடங்களில் அமைக்கப்பட்டு வருகின்றன. இப்பணிகளின் உத்தேச மதிப்பீடு 1 கோடியே 22 இலட்ச ரூபாய் ஆகும்.

**சாலை அமைப்பு இயந்திரங்கள் :**

பெருஞ் செலவில் மேற்கொள்ளப்படும் தேசிய நெடுஞ்சாலைப் பணிகள் நெடிது நாள் நிலைத்து நின்று பயன் நல்க இவற்றின் தரம் காத்தல் மிகவும் அவசியம். இவ்வகையில் தேவையான, புதுமையான, இயந்திரக் கருவிகளை வாங்குமளவிற்கு நமது மாநிலத்திற்கு உதவ முன் வந்த மத்திய அரசு, ரூபாய் 1 கோடி வரை

ஒதுக்கியது. இதன் மூலம் கொதி கலவை கருவியும் (Hot Mix Plant) தளம் உருவாக்கும் கருவியும் (Paver Finisher) மற்றும் சாலை உருளைகள் (Road Roller) போன்ற கருவிகளும் வாங்கப்பட்டன.

மேலும் மத்திய அரசு, சுமார் 1 கோடி ரூபாய் மதிப்புக்கு வெளி நாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட பளு தூக்கிகள் (Mobile Cranes) மேடு திருத்தும் கருவிகள் (Bull Dozers) போன்ற பல நவீன இயந்திரக் கருவிகளை நமது மாநிலத்திற்கு அளித்திட இசைந்துள்ளது.

**மத்திய அரசு உதவும் மற்றைய சாலைத் திட்டங்கள்:**

தேசிய நெடுஞ்சாலைப் பணி களன்னியில், பொருளாதார மற்றும் பல மாநில முக்கியத்துவம் வாய்ந்த திட்டத்தின் (Economic & Inter State Importance Scheme) கீழ் தமிழ் நாட்டிற்கு பாரத அரசு 2 கோடியே 61 இலட்சம் ரூபாய் அளித்து 'சேது ரஸ்தா' எனப்படும் கிழக்கடற்கரைச்சாலையில், 40 பாலங்களை அமைத்து கடலடுத்த நம் மாநில நெய்தல் பகுதியினைப் பல்வகையிலும் வளப்படுத்த உதவியுள்ளது.

மற்றும், ''மத்திய சாலை நிதி'' யிலிருந்து தமிழ் நாடு இது வரை சுமார் 12 கோடி ரூபாய் பெற்று பள்ளிப் பாளையம் காவிரிப்பாலம் திருவையாறு கொள்ளிடப்பாலம் போன்ற பல பாலங்கள் அமைத்துள்ளது. மேலும், சிறப்பான பணி ஆற்றி வரும் கிண்டியில் உள்ள நெடுஞ்சாலை ஆராய்ச்சி நிலையம் (Highways Research Station) 18 இலட்ச ரூபாய் மதிப்பில் இந்நிதியிலிருந்து தான் அமைக்கப்பட்டது.

மதுரை மாவட்டத்தில் 2 கோடி மதிப்பீட்டில் தற்போது நடைபெற்று வரும் சுற்றுலா முக்கியத்துவம் வாய்ந்த கோடையையும்—பழனியையும் கூட்டுவிக்கும் மலைச் சாலையும், மற்றுமிரு வணிகப் பயிர் வளம் பெருக்கும் மலைச் சாலைகளும் இந்நிதியிலிருந்து மேற்கொள்ளப்பட்டது ஒரு சிறப்பு அம்சம்.

இப்பணிகள் அனைத்தும் விரைவில் முடிவடைந்து நமது பொருளாதாரத்தை மேம்படுத்திக் ''காட்டுவழிகளிலே, மலைக்காட்சியிலே, புனல் வீழ்ச்சியிலே'' செல்வத் திருமகள் வாசம் செய்கிறாள் என்ற பாரதி வாக்கியத்தை நிச்சயம் மெய்ப்பிக்கும் என நம்புவோமாக!

## சுற்றுலாப் பகுதியாக இராமேஸ்வரம் மேம்படுத்தப்படும்!




இராமேஸ்வரம் கடற்கரைப் பகுதிகளை ஓய்வு நேரச் சுற்றுலா இடமாக மேம்படுத்துவது பற்றிய யோசனைகளைத் தமிழ்நாடு அரசு பரிசீலித்து வருகிறது. அக்கடற்கரைப் பகுதி முழுமையாக மேம்படுத்தப்பட்டால், உலகிலுள்ள மிகப் பெரிய சுற்றுலாப் பகுதிகளில் ஒன்றாக அது விளங்கும். ஸ்ரீலங்கா மிகவும் அருகாமையில் இருப்பதால், இந்த இடத்திற்குச் சுற்றுலா வருவோரின் எண்ணிக்கையும் அதிகரிக்கும்.

இராமநாதஸ்வாமி கோவில் இருப்பதால், இந்தியாவிலுள்ள முக்கியமான யாத்திரைத் தலங்களில் ஒன்றாக இராமேஸ்வரம் கருதப்படுகிறது. இராமாயணக் காவியத்தோடும் இந்த இடம் சம்பந்தப்பட்டுள்ளது.

இராமேஸ்வரம் தீவில் தென்னைமரத் தோப்புகள் நிறைய உள்ளன. பவழப் பாறைகளும் இருக்கின்றன. இத்தீவுக்கு அருகில் உள்ள பல்வேறு தீவுகளையும் சுற்றுலாப் பகுதிகளாக மேம்படுத்த கடலில் நீச்சல், படகு ஓட்டுவது போன்ற நடவடிக்கைகளிலும் சுற்றுலா செல்வோர் ஈடுபடும் விதத்தில் அப்பகுதியை மேம்பாடு செய்யலாம்.

## மாமல்லபுரம் அனைத்து நாட்டுச் சுற்றுலாப் பகுதியாக ஆக்கப்படும்!



அனைத்து நாட்டுச் சுற்றுலாப் பகுதியாக மாமல்லபுரத்தை மேம்படுத்தும் திட்டம் ஒன்றும் தமிழ்நாடு அரசின் பரிசீலனையில் உள்ளது: 1972-ஆம் ஆண்டில் மாமல்லபுரத்திற்குச் சென்ற ஐ. நா. அபிவிருத்தித் திட்ட நிறுவனக் குழுவின் பரிந்துரைகளின் அடிப்படையில் இத்திட்டம் அமைந்துள்ளது. இத்திட்டத்தின்படி புராதனச் சின்னங்கள் உள்ள இப்பகுதி, அழகுபடுத்தப்படும். சென்னைக்கும் மாமல்லபுரத்துக்குமிடையே உள்ள கடற்கரையோரப் பகுதியும், பக்கிங்ஹாம் கால்வாயின் கிழக்குப் பகுதியும், தேசியப் பூங்காப் பகுதியாகப் பாதுகாக்கப்பட்டு கிராம வளர்ச்சி அலுவல்கள், மீன்பிடி தொழில் ஆகியவை ஊக்குவிக்கப்படும். ஆகையால் இப்பகுதிகளில் புதிதாகக் கட்டிடங்கள் கட்டுவதற்கோ அல்லது ஏற்கெனவே உள்ள கட்டிடங்களை மேம்படுத்துவதற்கோ மாநில அரசு தடைவிதித்துள்ளது.



# பசுக்களைப் பராமரிக்கும் முறைகள்

—டாக்டர் பி. எஸ். கிருஷ்ணமூர்த்தி
ரீடர், பால் இயல்துறை,
கால்நடை மருத்துவக் கல்லூரி,
சென்னை.

பால் பண்ணைகள் இலாபகரமாக இயங்குவதற்குப் பால் மாடுகள் அதிகப் பால் கறப்பவையாக இருத்தல் அவசியம். மேலும் பால் மாடுகள் குறித்த காலத்திற்குள் பருவத்திற்கு வர வேண்டும். கன்றுகள் பிறப்பதற்கான இடைவெளி 12 மாதத்திற்கு மேல் போகக் கூடாது. ஆகவே, பசுக்களைச் சினைப் பருவத்தில் காளைகளுடன் உடனடியாகச் சேர்க்க வேண்டும். சாதரணமாகப் பசுக்கள், சினைக்கு 21 நாட்களுக்கு ஒரு முறை ஒழுங்காக வரும். பசுக்கள் சினைக்கு விடும் பருவங்களை ஒழுங்காக முறைப்படுத்தினால், ஆண்டு முழுவதும் ஒழுங்கான முறையில், தடையில்லாமல், பால் உற்பத்தி செய்ய முடியும். வெய்யிற் காலங்களில், பால் உற்பத்தி மிகவும் குறைவாகக் காணப்படுகிறது. அதே சமயத்தில் பாலுக்கு மிகவும் கிராக்கியும் இருக்கிறது. பசுக்கள் சினைக்கு விடும் பருவத்தை ஒழுங்காக முறைப்படுத்தினால், வெயிற் காலங்களிலும் பால் உற்பத்தியைத் தடையில்லாமல் அதிகப் படுத்த முடியும்.

எனவே, முக்கியமாகப் பசுக்களை குறித்த காலத்தில் சினைக்கு விடுவதும் பால் உற்பத்தி சம்மந்தமான பதிவேடுகளை ஒழுங்காக வைப்பதும் இன்றியமையாதது ஆகும்.

## பசுக்களைத் தக்க சினைப் பருவத்தில் காளைகளுடன் சேர்க்க வேண்டும்

கன்று போட்ட 75—90 நாட்களுக்குள் பசுக்களை காளைகளுடன் சேர்க்க வேண்டும். அப்பொழுது தான் ஆண்டிற்கு ஒரு முறை கன்று போடும். பால் பண்ணையில் 1/3க்கு மேல் பால் வற்றிய பசுக்கள் இருப்பது சிக்கனமானது அல்ல. பசுக்கள் கன்று போட்ட பின், இரண்டாவது முறையாகச் சினைக்கு வரும் பருவத்தில் காளைகளுடன் சேர்த்தல் நல்லது.

இளம் கிடாரிக் கன்றுகளைச் சினைக்கு விடும் வயது 18 மாதத்திற்குக் குறைவாக இல்லாமலும், அதே சமயத்தில் அதன் எடை 200 கிலோ கிராமுக்குக் குறையாமலும் இருத்தல் வேண்டும். வயதை விட எடையே முக்கியம். உதாரணமாக, கால்நடை கல்லூரியில் வளர்ந்த ஜெர்சி சிந்தி கலப்பின மாடு எண். 20, அதன் வயது 10 மாதமாக இருக்கும் பொழுதே சினைக்குவிடப்பட்டது. ஆனால் அதன் எடை 200 கிலோவாக இருந்தது. அது கன்று போடும்போது அதன் வயது $1\frac{1}{2}$ வருடம் தான். மேற்படி பசு, முதல் கன்று ஈன்ற பின் 1,921 கிலோ கிராம் பால் உற்பத்தி (375 நாட்கள் பால் கறந்தது) செய்தது. இரண்டாவது கன்று ஈன்ற பின் அதன் பால் உற்பத்தி 2,189 கிலோ கிராம் (338 நாட்கள் பால் கறந்தது) என உயர்ந்தது ; மூன்றாவது கன்று ஈன்ற பின் அதன் பால் உற்பத்தி 1,928 கிலோ கிராம் (254 நாட்கள் பால் கறந்தது) அளவில் இருந்தது. இந்த உதாரணம் பசுவின் வயதை விட எடையே முக்கியம் என்பதைக் காட்டுகிறது.

## தகுந்த பருவத்தில் சினைக்கு விட வேண்டும்

பசுக்கள் சினைக்கு வரும்போது, அமைதியில்லாமல் தொழுவத்தை சுற்றிச் சுற்றி வரும். அடிக்கடிக் கத்தும். மேலும் வேறொரு மாட்டின் மீது அடிக்கடி ஏறும். அல்லது வேறு மாடுகள் தன்மீது ஏறும்போது ஓடாமல் அங்கேயே நிற்கும். அறை சற்று வீக்கமாகக் காணப்படும். மேலும் அறையிலிருந்து வெள்ளை வெளிப்படும். அப்போது உடனடியாகப் பசுவைச் சினைக்கு விட வேண்டும்.

செயற்கைக் கருத்தரிக்கும் முறையைப் பயன்படுத்தல் வேண்டும். இம்முறை இளம் கிடாரிகளுக்கு மிகவும் ஏற்றது. ஏன் எனில், பெரிய அதிக எடையுள்ள காளைகளை, சிறிய இளம் கிடாரிகளுடன் சேர்த்தல் இயலாது.

பசுக்கள் சினைக்கு வந்தவுடன், மேற்படி பசுக்களைத் தனியாகப் பிரித்து, தனிக் கொட்டிலில் அடைத்தல் நல்லது. மேலும் சினைக்கு வந்த பசுக்களை அதே நாளில் இரு முறையாவது சினைக்கு விட வேண்டும். பசுக்களைச் சினைக்கு விட்டவுடன், மூன்று மாதத்திற்குள், சினைப் பரிசோதனை செய்ய வேண்டும். மேலும், பசுக்களைச் சினைக்கு விட்ட மூன்றாவது வாரத்தில் மறுபடியும் சினைக்கு வருகிறதா என்று பார்த்தல் வேண்டும்.

பால் பண்ணையிலிருக்கும், குறைந்த பால் கறவையான மாடுகளை உடனடியாகக் கழித்துவிடல் வேண்டும். எந்த ஒரு மாடும் அது சாப்பிடும் தீவனம், ஆள் பராமரிப்பு ஆகியவைகளுக்காக ஆகும் செலவை விட, குறைவாக மதிப்புள்ள அளவில் பால் கறந்தால், அந்த மாட்டை கழித்து விட வேண்டும். ஆகவே, மேற்படி மாடுகளைச் சரியான முறையில் கண்டுபிடிக்க பால் உற்பத்தி சம்மந்தமான பதிவேடுகளைச் சரிவர எழுதி வருவது மிகவும் அவசியம்.

பசுக்கள் பால் கொடுக்கும் அளவானது, அதன் கன்று அப்பசுவுடன் பால் குடித்த அளவு, அதன்பின் அப் பசுவிடம் கறந்த பால் ஆகிய இவ்விரண்டின் கூட்டுத் தொகையாகும். ஆகவே, வாரத்திற்கு ஒரு தடவையாவது, கன்றுகளுக்குப் பால் விடாமல், முழுக்கக் கறந்து அதை எடை போட வேண்டும். இந்தப் பாலின் எடையை ஏழால் பெருக்கி, அந்த வாரத்தின் மொத்தம் கறந்த பால் அளவையாக ஏற்றுக் கொள்ளவேண்டும். மேலும், அதே நாளில் ஒவ்வொரு மாட்டினுடைய பாலிலும் உள்ள கொழுப்பு அளவையும் கண்டறிதல் வேண்டும்.

இம்மாதிரி ஒவ்வொரு மாட்டுப் பாலின் கொழுப்பு அளவையும் கண்டுபிடித்த பின், மேற்படி மாட்டின் பால் கறந்த அளவையும் எடுத்து, பால் பதிவேடுகளை ஒழுங்கு படுத்தல் வேண்டும். இந்த முறையின் மூலமாக, ஒரே அளவில் பால் கறக்கும் இரு வகைப் பசுக்களை, அதன் பால் கொழுப்புச் சத்து மூலம், அப் பசுக்களின் பால் கொடுக்கும் திறமையை ஒழுங்காக முறைப் படுத்த இயலும்.

# குழந்தைக்குத் தேவை சத்தான உணவு
# பயிருக்குத் தேவை விஜய்

குழந்தையின் ஆரோக்கியமான வளர்ச்சிக்கு உதவும் சத்துணவைப்போலவே பயிர்களும் நன்கு வளர்ந்து முழுப் பலனையும் தர தழை, மணி, சாம்பல் சத்துக்கள் அவசியம்.

ஆனால் நெற்பயிருக்கு தழைச்சத்தைத்தரும் யூரியாவை மட்டும் இட்டால போதுமானது எனக் கருதக்கூடும். அவ்வாறு யூரியாமட்டும் இட்டால் பயிர்கள் பூச்சிகளால தாக்கப்படும். வறட்சியைத் தாங்காது. மேலும் நாளடைவில் மண்ணின் தன்மைகெட்டு விளைச்சலும் குறையும்.

தழைச்சத்துடன் மணி, சாம்பல் சத்துக்களை இடுவதுதான் லாபகரமானது என ஆராய்ச்சிகள் நிரூபித்துள்ளன:—

நெல் (ஏக்கருக்கு)

| உரம் | சாகுபடி செலவு ரூ. | விளைச்சல் (மூட்டை 75 கிலோ) | வருவாய் (1 மூட்டை 60 ரூ. விகிதம்) |
|---|---|---|---|
| 40 கிலோ தழைச்சத்து மட்டும் | 1040 | 18 | 1080 |
| 40 கிலோ தழைச்சத்துடன் 20 கிலோ மணிச்சத்து | 1180 | 23 | 1380 |
| 40 கிலோ தழைச்சத்துடன் 20 கிலோ மணிச்சத்து 20 கிலோ சாம்பல்சத்து | 1215 | 30 | 1800 |

இவ்வாறு மூன்று சத்துக்களையும் இடும் போது கூடுதல் செலவு ரூ. 175க்கு அதிக வருவாய் ரூ. 720 கிடைக்கிறது.

அதிக வருவாய் தரும் தழை, மணி, சாம்பல் சத்துக்களை சமச்சீர் அளவில் கொண்டது விஜய் 17-17-17. இத்துடன் விஜய் யூரியாவையும்.உங்கள் நெற்பயிருக்கு உபயோகித்து அதிகப்பயன் பெறுங்கள்.

VIJAY
MADRAS FERTILIZERS

மேலும் விவரங்களுக்கு கீழ்கண்ட முகவரிக்கு எழுதுங்கள்:
ஏரியா மானேஜர்
மதராஸ் பெர்டிலைசர்ஸ் லிமிடெட்
5/1 ராமச்சந்திரபுரம், திருச்சி 620 017






MFL-1162

# மாணவப் பருவத்திலே !

மாணவர் அரங்கம்

மாணவப் பருவம் ஈடு இணையில்லாதது; உயர்வானது; கிடைத்தற்கரிய இந்தப் பருவத்தை மாணவர்கள் தக்க வகையிலே பயன்படுத்தித் தமக்கும், தாய்நாட்டுக்கும் பெருமையைத் தேட வேண்டும்; இதனை உணர்த்துவதற்காக நமது நாட்டுப் பெருமக்கள் சிலர், மாணவப் பருவத்தினராக இருந்தபோது அவர்கள் உருவாக்கிய புகழ்மிகு நிகழ்ச்சிகள் இங்கே தொகுத்துத் தரப் பெற்றுள்ளன; இன்றைய மாணவச் செல்வங்கள் இவற்றைப் படித்து, நமது முன்னோர்களை வழிகாட்டிகளாகக் கொண்டு, பேராற்றலும் பெருமதிப்பும் பெற்றுத் திகழ்ந்திட வேண்டுகிறோம்.

**இராஜாராம் மோகன்ராய்**

வங்க மாநிலத்தில் ராதா நகர் என்னும் கிராமத்தில் பிறந்த இராஜாராம் மோகன் ராய், மாணவராக இருந்த காலத்திலேயே சிறப்புற்றுத் திகழ்ந்திருந்தார். தமது பதினாறாவது வயதிற்குள்ளாகவே அவர் வங்காளி, உருது, பாரசீகம், சமஸ்கிருதம் ஆகிய மொழிகளில் மிகுந்த தேர்ச்சி பெற்றிருந்தார். படிக்கத் துவங்கிவிட்டால், சாப்பாட்டைப் பற்றிய எண்ணமே அவருக்குத் தோன்றாது. ஒருநாள் காலைக் கடன்களை முடித்துக் கொண்டு வால்மீகி இராமாயணத்தைப் படிக்க அமர்ந்தவர், ஏழு காண்டங்களையும் படித்து முடித்த பின்னர் தான் தன் இருப்பிடத்தைவிட்டு எழுந்தார்!

**ஈசுவர சந்திர வித்யாசாகரர்**

வங்க மாநிலத்தில் மேதினிபூர் மாவட்டத்தைச் சார்ந்த வீரசிம்மம் என்ற கிராமத்தில் தோன்றிய ஈசுவர சந்திரர் கல்வியில் சிறந்து விளங்கினார். தமது பதினோராவது வயதிலேயே இலக்கணத் தேர்வில் வெற்றி பெற்று இலக்கிய வகுப்பில் பயிலத் துவங்கினார். அவ்வகுப்பு மாணவர்களில் முதல்வராகத் திகழ்ந்தார். பதினாறாவது வயதில் அலங்கார சாத்திரத்தில் தேறினார். அதன் பின்னர், வேதாந்தம், தரும சாத்திரம், தத்துவ சாத்திரம் முதலியவற்றில் தேர்ச்சி பெற்றுப் பரிசுகளும் பெற்றார்.

அவரது கல்விச் சிறப்பையும், பெரும் புலமையையும் கண்டு அவருக்கு ''வித்தியாசாகரர்'' (கல்விக் கடல்) என்னும் பட்டத்தை அறிஞர்கள் சூட்டினர். அதன் பின்னர் அவர் ஈசுவர சந்திர வித்தியாசாகரர் என்று வழங்கப் பெற்றார்.



**தாதாபாய் நௌரோஜி**

இந்திய வரலாற்றில் குறிப்பிடத்தக்க இடம் பெற்றுள்ள தாதாபாய் நௌரோஜி, மாணவப் பருவத்தில் கணக்கில் மிகவும் வல்லவராக விளங்கினார்.

ஒரு சமயம், கணக்கில் தனக்குத் தான் பரிசு கிடைக்கும் என்று அவர் மிகுந்த நம்பிக்கையுடன் எதிர்பார்த்திருந்தபோது, அவருடன் பயின்ற வேறொரு மாணவனுக்குப் பரிசு கிடைத்துவிட்டது. அந்த மாணவன், வாய்ப்பாடுகளை எல்லாம் நன்கு மனப்பாடம் செய்து வந்து, ஒப்புவித்துப் பரிசு பெற்றுவிட்டான். ஆனால் பரிசு வழங்கப்படும் தருணம் வந்தபோது, புத்தகத்தில் இல்லாத வினாக்கள் அவனிடம் கேட்கப்பட்டன. உருப்போட்டது இங்கே பயன்படவில்லை! பாவம்! பதில் சொல்ல முடியாமல் அவன் திணறினான். ஆனால், தாதாபாய் உடனே, அந்த வினாக்களுக்குத் தகுந்த விடையளித்து அனைவரது பாராட்டுக்களையும் பெற்றார்!

வகுப்பில் ஆசிரியர்களின் வினாக்களுக்கு அவர் உடனடியாகப் பதில் அளித்து வந்ததால், ஆசிரியர்களுக்கு அவரிடத்தில் மிகுந்த மதிப்பும், நம்பிக்கையும் ஏற்பட்டன. ''வருங்கால இந்தியாவின் நம்பிக்கை'' என அவரை அழைத்தனர். பிற்காலத்தில் அவர் அதனை மெய்ப்பித்தார்.

**முத்துசுவாமி அய்யர்**

ஆங்கிலேயர்கள் இந்தியாவை ஆட்சி செய்த காலத்தில் எல்லா உயர் பதவிகளும் ஆங்கிலேயர்களுக்கே கொடுக்கப்பட்டு வந்தன. அந்தச் சூழ்நிலையில் சென்னை உயர்நீதி மன்ற நீதிபதியாகப் பணியாற்றும் வாய்ப்பைப் பெற்றவர் திரு. முத்துசுவாமி அய்யர். திருவள்ளூரைச் சேர்ந்த இவர், குடும்பச் சூழ்நிலையின் காரணமாக, சிறு வயதிலேயே வேலை பார்க்கத் தொடங்கி விட்டார். ஒரு தாசில்தாரின் உதவியால் கல்வியைத் தொடர்ந்தார். தமது அறிவாற்றலாலும், புத்தி கூர்மையினாலும், உழைப்பாலும் ஆசிரியர்களை வியப்பெய்தச் செய்தார். கல்விக் கழகம் (Council of Education) என்ற நிறுவனம் உயர்ந்த ஆங்கிலக் கட்டுரைக்கு வழங்கி வந்த 50 ரூபாய் பரிசை இவர் பெற்றார். ஆங்கிலக் கவிஞர் ஆலிவர் கோல்டு ஸ்மித்தின் கவிதைகளில் உள்ளம் பறிகொடுத்தவர் இவர்.

**பால கங்காதர திலகர்**

மகாராஷ்டிர மாநிலத்தில் உதித்த பால கங்காதர திலகர் மாணவப் பருவத்தினராக இருந்தபோது, ஆசிரியர்கள் பொறாமைப்படும் அளவுக்குக் கல்வி, கேள்விகளில் சிறந்திருந்தார். ஆசிரியர்கள் வீட்டுக் கணக்குகள் கொடுத்தால், அவர், அங்கேயே வாய்க் கணக்காகவே விடைகளைச் சொல்லி விடுவார். இவ்வாறு



உடனுக்குடன் விடையளித்தது காரணமாகத் திலகருக்கும் ஓர் ஆசிரியருக்கும் மனத்தாங்கல் ஏற்பட்டது. ஏனைய ஆசிரியர்கள் அனைவரும் திலகரை ''அறிவாளி'' என்று போற்றிக் கொண்டாடினார்கள். எதையும் பயில்வதில் திலகர் தனி ஆற்றல் பெற்றிருந்தார். எந்த விஷயத்தைக் கற்பதானாலும் அதை அவர் நுணுக்கமாக ஆய்ந்து, முழு மூச்சுடன் பயின்று வந்தார்.

**லால் பகதூர் சாஸ்திரி**

உத்தரப் பிரதேசத்தில் பிறந்து ஒப்பற்ற புகழ் எய்தி தாஷ்கண்ட் ஒப்பந்த வீரர் என்று பெருமை பெற்ற லால் பகதூர் சாஸ்திரி அவர்கள், மாணவராக இருந்த காலத்தில் பள்ளி இன்ஸ்பெக்டரின் பாராட்டைப் பெற்றிருக்கிறார்.

சிறு வயதிலேயே அழகாக ஆங்லத்தை உச்சரித்து வந்தவர் லால் பகதூர். அவரது உச்சரிப்பைக் கேட்டு ஆசிரியர்களே வியப்படைந்து வந்தார்கள்.

ஒருமுறை பள்ளியைப் பார்வையிட வந்த பள்ளிக்கூட இன்ஸ்பெக்டரிடம், லால் பகதூரின் ஆங்கில உச்சரிப்புத் திறமையை எடுத்துரைத்தார் ஆசிரியர். உடனே அந்த இன்ஸ்பெக்டர், பாடப் புத்தகத்தை லால் பகதூரிடம் கொடுத்து அதனைப் படிக்கச் சொன்னார். லால் பகதூர் தயக்கமின்றியும், அச்சமின்றியும், புதிய ஆங்கிலப் புத்தகத்தை மடமடவென்றும், அழகான உச்சரிப்புடனும் படிக்கத் தொடங்கினார். அவரது அழகு உச்சரிப்பை வியந்தவாறு கேட்ட பள்ளிக்கூட இன்ஸ்பெக்டர் தாம் அமர்ந்து இருந்த நாற்காலியை விட்டு எழுந்து, அவர் அருகில் சென்று, அவரது முதுகில் அன்புடன் தட்டிக் கொடுத்துப் பாராட்டினார்.



**இராஜேந்திர பிரசாத்**

பீகார் மாநிலத்தில் தோன்றி அதற்குப் பெருமை தேடித் தந்தவர் நமது இந்தியக் குடியரசின் முதல் தலைவரான பாபு இராஜேந்திரப் பிரசாத். இவர் மாணவப் பருவத்தில் படிப்பில் 'புலி'யாக இருந்தார்:- சமஸ்கிருதம், இந்தி, ஆங்கிலம் ஆகிய மொழிகளில் பெரும் திறமை பெற்றிருந்தார். இவரது அறிவுக் கூர்மையைக் கண்டு மகிழ்ந்த ஆசிரியர்கள், ஆண்டுக்கு இரு வகுப்புகளாய் (Double Promotion) உயர்த்தினார்கள். ஆனால், பிரசாத்தின் தந்தையார் அதற்கு ஒப்புக் கொள்ளவில்லை. தமது மகனின் படிப்பு, வளம் குன்றிவிடும் என்று பயந்து, இரு வகுப்புகளாக உயர்த்த வேண்டாம் என்று ஆசிரியர்களைக் கேட்டுக் கொண்டார்.

**கவிமணி தேசிக விநாயகம்பிள்ளை**

கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை அவர்கள், தமது மாணவப் பருவத்தில் மணியென விளங்கியிருக்கிறார். நாஞ்சில் மாவட்டத்தில் பிறந்த அவர். அங்கிருந்த திருவாவடுதுறை மடத்தில் தமிழ் கற்று வந்தார். ஒரு நாள் அவரது ஆசிரியர், அவரையும், ஏனைய மாணவர்களையும் அழைத்து ஒரு தேவாரப் பாடலைக் கூறினார். அப்பாடலைக் கேட்டு, எந்த மாணவர் பிழையில்லாமல் திரும்பச் சொல்கின்றாரோ அவருக்கு அப்பமும், வடையும் வழங்கப்படும் என்று தெரிவித்தார். பல மாணவர்கள் முயன்றார்கள்; தோற்றார்கள். ஆனால் கவிமணி ஒருவர் தான் பாடலைப் பிழையின்றி ஒப்பித்து அப்பம், வடை பரிசு பெற்றார்; பெற்ற பரிசைத் தானே எடுத்துக் கொள்ளாமல் உடன் பயின்ற மாணவர்கள் அனைவருக்கும் வழங்கினார் கவிமணி.



**கணித மேதை இராமானுஜம்**

கணித மேதை எனப் புகழ் பெற்ற இராமானுஜம் கும்பகோணத்தில் நகர உயர்நிலைப் பள்ளியில் பயின்று வந்தார். அந்தக் காலத்தில் துவக்கப் பள்ளிப் பிரிவும் உயர்நிலைப் பள்ளியிலேயே இருந்தது. துவக்கப் பள்ளித் தேர்வுஒன்றுஅரசினரால்நடத்தப்பட்டது. அத்தேர்வு, மாவட்ட அளவில் நடத்தப்பட்டது. தஞ்சை மாவட்ட அளவில் அந்த ஆண்டில் தேர்வு எழுதிய மாணவர்களில் முதல்வராகத் தேர்ச்சி பெற்றார் இராமானுஜம். இந்த வெற்றி அவருக்குச் சம்பளச் சலுகையைத் தேடித் தந்தது. அதாவது பாதிக் கட்டணம் செலுத்திக் கல்வி கற்கும் வாய்ப்புப் பெற்றார் இராமானுஜம்.

—எஸ். சண்முகசுந்தரம்.




# மலிவான விலையில் தரமான உணவுகளையே விற்க வேண்டும்!

தமிழ்நாட்டில் குடியரசுத் தலைவரின் ஆட்சி ஏற்பட்டபின், அன்றாட வாழ்வுக்குத் தேவைப்படும் இன்றியமையாப் பொருள்களின் விலைகள் மளமளவென்று குறையத் தொடங்கின; இவ்வாறு விலை குறைந்த பின்பும், தமிழ்நாட்டில் உள்ள ஓட்டல்களிலும், உணவு வழங்கும் நிறுவனங்களிலும் வழங்கப்பட்டு வந்த பொதுவான உணவு வகைகளின் விலைகள் குறைக்கப்படாமல் விற்பனை செய்யப்பட்டு வந்தன. ஓட்டல்களிலும், உணவு வழங்கும் நிறுவனங்களிலும் வழங்கப்படும் பொதுவான உணவு வகைகளின் விலையைக் குறைக்க ஆவன செய்ய வேண்டுமென்று தமிழ்நாடு அரசுக்குப் பொது மக்கள் பலர் வேண்டுகோள் விடுத்து வந்தனர். இவ்வேண்டுகோளை மிகுந்த கவனத்துடன் பரிசீலனை செய்து, 1971-ஆம் ஆண்டின் இந்தியப் பாதுகாப்புச் சட்டத்தின் 114-வது விதியின்படி, ''தமிழ்நாடு உணவு வழங்கும் நிறுவனங்கள் (உணவு வகைகளுக்கு விலை நிர்ணயித்தல் மற்றும் விலை விவர அட்டவணையைப் பார்வைக்கு வைத்தல்) ஆணை, 1976'' என்ற சட்டப்படி தேவைப்படுகிற ஆணையைத் (Statutory order) தமிழ்நாடு அரசு பிறப்பித்தது. இந்த ஆணையின் அட்டவணையில், பொதுவான உணவு வகைகளுக்கு பின்கண்டவாறு குறைந்த பட்ச எடையும், உயர்ந்த பட்ச விலையும் நிர்ணயிக்கப்பட்டுள்ளது :

**உணவு வகைகளின் எடை மற்றும் விலை பற்றிய அட்டவணை:**

| உணவு வகையின் பெயர் | குறைந்தபட்ச எடை | உயர்ந்த பட்ச விலை |
|---|---|---|
| இட்லி- * | 2 இட்லி—100 கிராம் | 20 பைசா |
| சாதா தோசை * | 80 கிராம் | 30 ,, |
| பூரி, உருளைக்கிழங்கு மசாலா | 2 பூரி—40 கிராம்; உருளைக் கிழங்குமசாலா—80கிராம் | 35 ,, |
| ரவா உப்புமா * | 150 கிராம் | 35 ,, |
| அரிசிப் பொங்கல் * | 130 கிராம் | 35 ,, |
| மெதுவடை * | 30 கிராம் | 20 ,, |
| மைசூர் போண்டா * | 2 போண்டா—60 கிராம் | 40 ,, |
| காபி | 140 மி.லிட். | 30 ,, |
| டீ | 140 மி.லிட். | 25 ,, |
| ஜனதா சாப்பாடு | சோறு-500கி. காய்கறி, பொரியல் ஒன்று, சாம்பார், ரசம், மோர், ஊறுகாய் | 1 ரூபாய் |

(குறிப்பு: * சாம்பார், சட்னியுடன்)

எந்த ஒரு உணவு வழங்கும் நிறுவன உரிமையாளரும், மேற்கண்டுள்ள குறைந்த பட்ச எடைக்கும், உயர்ந்த பட்ச விலைக்கும் மாறாக உணவு வகைகளை விற்கக் கூடாது. இந்த ஆணையின்படி உணவு வகைகளின் விலை விவரப் பட்டியலைப் பொது மக்களின் பார்வைக்கு வைப்பதும் அவசியமாகும்.

இந்த ஆணை தமிழ்நாட்டில் எல்லா மாநகராட்சிகளிலும், நகராட்சிகளிலும், பேரூராட்சிகளிலும், நகரியங்களிலும் 13—4—'76 முதல் செயல்பட்டு வருகிறது.

இவ்வாணை ஓட்டல்கள், ரெஸ்டாரெண்ட், சாப்பாட்டு விடுதிகள், கபே, டீ கடை, காப்பிக் கடை, உணவு வழங்கும் நிலையம், கிளப், காண்டீன், ரயில்வே சிற்றுண்டிச்சாலை, மற்றும் பொது மக்களுக்கு உணவு வழங்குகிற எல்லா இதர இடங்களையும் கட்டுப்படுத்தும். ஆனால் நட்சத்திர ஓட்டல்களுக்கும், கூவி விற்பனை செய்பவர், தெருவில் விற்போர் ஆகியோர்களுக்கு இந்த ஆணையிலிருந்து விதி விலக்கு உண்டு.

எனவே, மேற்கூறிய ஆணைக்கு ஏற்ப உணவு வகைகளை எடை குறைக்காமலும், விலை உயர்த்தாமலும், தரமான நிலையில் வழங்கும்படி தமிழக உணவு வழங்கும் நிறுவன உரிமையாளர் அனைவரையும் வேண்டுகின்றோம்.

# அஞ்சலக வங்கியின்
# மாபெரும் பரிசுத் திட்டம்

ஆண்டுக்கு இருமுறை

குலுக்கல்கள் **ஜனவரியிலும் ஜூலையிலும்** நடைபெறும்

ரூ. 20½ இலட்சத்திற்கு

11,116 பரிசுகள்

*ஒவ்வொரு குலுக்கலுக்கும் ரூ. 20½ இலட்சத்திற்குக் கீழ்க்கண்ட 11,116 பரிசுகள் உண்டு.*

| | | | |
|---|---|---|---|
| | முதல் பரிசு (ஒரு லட்சம்) ஒன்று | ... | ரூ. 1,00,000 |
| 5 | இரண்டாம் பரிசுகள் ஒவ்வொன்றும் | ... | ரூ. 50,000 |
| 10 | மூன்றும் பரிசுகள் ஒவ்வொன்றும் | ... | ரூ. 20,000 |
| 100 | நான்காம் பரிசுகள் ஒவ்வொன்றும் | ... | ரூ. 5,000 |
| 1,000 | ஐந்தாம் பரிசுகள் ஒவ்வொன்றும் | ... | ரூ. 500 |
| 10,000 | ஆறும் பரிசுகள் ஒவ்வொன்றும் | ... | ரூ. 50 |

*ஏப்ரல் அல்லது அக்டோபர் முதல் தேதியிலிருந்து ஆறு மாதத்திற்கு உங்களது அஞ்சலக சேமிப்புக் கணக்கில் ரூ. 200/-க்குக் குறையாமல் இருந்தால் உங்கள் எண் பரிசு குலுக்கலில் சேர்த்துக் கொள்ளப்படும். ஆண்டு முழுவதும் உங்கள் கணக்கில் ரூ. 200/-க்குக் குறையாமல் வைத்திருந்தால் இரண்டு குலுக்கல்களிலும் கலந்து கொண்டு பரிசு பெற வாய்ப்புண்டு.*

*உங்கள் சேமிப்புத் தொகைக்கு 5% வட்டி, பரிசு பெற்றவர்க்கும், பெறாதவர்க்கும் அளிக்கப்படும்.*

*விபரங்களுக்கு அருகிலுள்ள தபால் நிலையத்தோடு உடன் தொடர்பு கொள்ளுங்கள்.*

**இயக்குநர்,**

தமிழ்நாடு அரசு சிறுசேமிப்புத்துறை,

சென்னை-600 002.

'ஒ'ன்றுபட்டால் உண்டு வாழ்வு', 'கூடி வாழ்ந்தால் கோடி நன்மை', 'ஊர் கூடித் தேர் இழுத்தல்', 'ஒருகையால் ஓசை எழுப்ப முடியுமா?' என்ற பழமொழிகளும், சொற்றொடர்களும், சேர்ந்து வாழ்ந்தால் சேரும் நன்மைகளைப் பற்றியும், இணைந்து, ஒன்றுபட்டு வாழவேண்டிய அவசியத்தையும் வலியுறுத்த, இன்றல்ல நேற்றல்ல, காலகாலமாய் நம்மிடையே நிலவி வருபவையாகும்.

கூடி வாழவேண்டிய அவசியமும், சேர்ந்து செயல்பட வேண்டிய நிலையும் மற்ற எத்துறைக்குப் பொருந்துமோ இல்லையோ, கைத்தறித்துறைக்கு அதுதான் உயிர்நாடி!

நெல்லிக்கனிகளைப் போல் சிதறிக்கிடக்காமல், தேன்கூட்டைப் போல் ஒட்டி வாழ்வது கூட்டுறவில் பணியாற்றும் நெசவாளிக்கு நல்ல பலனைத் தருகிறது. நூல் வேண்டுமே, சாயம் கிடைக்குமா? நெய்த துணி நல்ல விலைக்குப் போகுமா என்ற கவலை, சிந்தனை கூட்டுறவில் பணியாற்றும் நெசவாளிக்கு நிச்சயமாக இல்லை! காரணம், அந்தக் கூட்டுறவு

நாட்டின் பொருளாதாரத்தில் கைத்தறிக்குள்ள முக்கிய இடத்தை மனத்தில் கொண்டு, மத்திய, மாநில அரசுகள் இத்தொழில் வாழவும், வளரவும், பெருகவும், செழிக்கவும் பல்வேறு அபிவிருத்தித் திட்டங்களை வகுத்துக் கூட்டுறவில் செயல்படும் கைத்தறி நெசவாளர் நல்வாழ்வு காணத்தக்க வகையில் சிறப்புடன் செயல்பட்டு வருகின்றன.

நாட்டின் முன்னேற்றத்திற்காக வகுக்கப்பட்ட ஐந்தாண்டுத் திட்டங்களில் கணிசமான தொகையினை ஒதுக்கிக் கைத்தறித் துறை செழிக்க நல்லுதவி செய்யப்பட்டு வருகிறது.

தமிழ்நாட்டில் செயல்படும் கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களின் தாய்ச் சங்கமாகத் தமிழ்நாடு கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கம் பணியாற்றி வருகிறது. தன்னுடன் இணைந்திருக்கும் தமிழ்நாட்டிலுள்ள பிரதம நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களின் உற்பத்தியில், பெரும் பகுதியை விற்பதற்குரிய பெரும் பணி—தலையாய பணி—இச்சங்கத்தைச் சார்ந்ததாகும். நாடு நெடுகிலும்,



# கைத்தறித் தொழிலின் முன்னேற்றத்தில் கூட்டுறவின் பங்கு....

—எம். எஸ். இராமகிருஷ்ணன்,
தலைமை விற்பனை அலுவலர்,
கோ—ஆப் டெக்ஸ்.

நெசவாளிக்கு வேண்டிய கச்சாப் பொருள் அனைத்தையும் அவர் சார்ந்திருக்கும் கூட்டுறவுச் சங்கமே அளித்து, அவர் நெய்த துணியை, அந்தச் சங்கமே, தனது தாய்ச் சங்கம் மூலம் விற்பனை செய்ய ஏற்பாடு செய்கிறது. இடைத்தரகருக்கு அங்கே வேலையே இல்லை. எனவே, முதல் அடிப்படைக் கவலையே அவரை விட்டு விலகிவிடுகிறது.

கைத்தறித் தொழில் நம்நாட்டில் விவசாயத்திற்கு அடுத்த மிகப் பெரிய குடிசைத் தொழிலாகும். நாட்டின் துணித் தேவையில் மூன்றில் ஒரு பங்கை ஈடு செய்து வரும் சிறப்புக்குரிய தொழிலாகும், இக்கைத்தறித் தொழில்.

தமிழ்நாட்டைப் பொறுத்தவரை 5.5 இலட்சம் கைத்தறிகள் உள்ளன. அவற்றில் ஒன்றே முக்கால் இலட்சம் தறிகள் கூட்டுறவின் கீழ் செயல்பட்டு வருகின்றன. தமிழ்நாட்டிலுள்ள 770 கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களிலுள்ள, ஒன்றே முக்கால் இலட்சம் தறிகளில் உற்பத்தியாகும் கைத்தறித் துணிகளை விற்பதற்குரிய பெரும் பொறுப்பை, ''கோ-ஆப் டெக்ஸ்'' என்று சுருக்கமாக அழைக்கப்படும், தமிழ்நாடு கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கம், ஏற்றுச் சிறப்புடன் செயல்பட்டு வருகிறது.

அமைக்கப்பட்டுள்ள 'கோ-ஆப்டெக்ஸ்' விற்பனை நிலையங்கள் மூலம் கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களில் உற்பத்தியாகும் கைத்தறித் துணிகள் விற்பனை செய்யப்பட்டு வருகின்றன. கடும் போட்டிக்கிடையே, கூட்டுறவுச் சங்கங்களில் சார்ந்துள்ள நெசவாளர்களின் நல்வாழ்வு ஒன்றினையே குறிக்கோளாகக் கொண்டு செயல்பட்டு வரும் 'கோ-ஆப்டெக்ஸின் கைத்தறித்துணி விற்பனை, ஆண்டுக்காண்டு பெருகி வந்துள்ளது. 1966-67-இல் ரூபாய் 414 இலட்சமாக இருந்த கைத்தறித் துணி விற்பனை, பல்கிப் பெருகி, 1975-76 மார்ச்சு மாதம் முடிய ரூபாய் 1,502 இலட்சமாக வளர்ந்துள்ளதைக் காணும் போது, கூட்டுறவில் சேர்ந்து பணியாற்றும் கைத்தறியாளர்கள், எந்த அளவிற்குப் பலனடைந்து, வாழ்வும் வளர்ச்சியும் பெற்றிருப்பார்கள் என்பதை நான் இங்கே எடுத்துச் சொல்ல வேண்டியதில்லை.

நாட்டை அவ்வப்போது பாதிக்கும் சங்கடங்கள், சிரமங்கள் கைத்தறி நெசவாளர்களையும் பாதிக்காமல் விட்டதில்லை.

ஒருபோது நூல் பற்றுக்குறை, ஒரு சமயம் நூல் விலையேற்றம்; ஒரு சமயம், நெய்வதற்கு நேரமில்லை என்று சொல்லத்தக்க வகையில் உள்நாட்டு, வெளிநாட்டு ஆர்டர்கள்;




Grant.18.TM (K2)

வேலையே இல்லை என்ற அவல நிலை ஒரு சமயம். இதுவே, கூட்டுறவுக்கு வெளியே இருக்கும் ஒரு நெசவாளிக்கு ஏற்பட்டால் அவனை ஆற்றுவாரோ, தேற்றுவாரோ நிச்சயம் கிடையாது.

ஆனால் கூட்டுறவில் பணியாற்றும் ஒரு கைத்தறி நெசவாளிக்கு இப்படிப்பட்ட ஒரு நிலை - சிரமம் - ஏற்படும்போதெல்லாம் மத்திய அரசு, மாநில அரசு என்னும் இருகரங்கள், நெசவாளியின் கண்ணீரைத் துடைக்கவும், அவனுக்குத் தேவையான உதவியினை வேண்டிய சமயத்தில் செய்து, தக்க வழிகாட்டவும் விரைந்து செயல்படுகின்றன.

அண்மையில் அப்படிப்பட்ட ஒரு நெருக்கடியைச் சமாளிக்க மொத்தம் 3.5 கோடிக்கு மேல் மத்திய, மாநில அரசுகள் உதவி புரிந்தன. இது ஏன்? இதற்குக் காரணம்தான் என்ன? கூட்டுறவின் கீழ் நெசவாளர்கள் இருப்பதால்தானே ? கூட்டுறவில் நெசவாளர்கள் இல்லையென்றால் இந்த உதவி-'உடுக்கை இழந்தவனுக்குக் கிடைக்கும் உதவிபோல்'—கிடைத்திருக்குமா? இங்கே தான் கூடி வாழ வேண்டியதன் அவசியமும், சேர்ந்து செயல்படவேண்டியதன் தேவையும் மிகத் தெளிவாக நமக்கு விளங்குகின்றன.

**இழையோடும் தசைநார்கள் உடம்பில் பின்ன**
**இரவு பகல் பாராது தறியில் நெய்து**
**எழில் வண்ணத் துணிகள் படைக்கும் நல்லோர்**
**எரிமலையாய்க் குமுறுவது சரியா ?**

இந்தக் கேள்வி எங்கே பிரதிபலித்தது? நம் பாரதப் பெருந்தலைவியாம் பிரதமர் இந்திரா காந்தி அவர்களின் நெஞ்சத்தில் இது பிரதிபலித்தது. நாட்டின் பொருளாதாரம் செழிக்கவும், நாட்டு மக்கள் வாட்டம் நீங்கவும், நம் பெரு மதிப்பிற்குரிய பிரதமர் அவர்கள் அறிவித்த 20 அம்சத் திட்டத்தில், கூட்டுறவில் இடம் பெற்ற, கைத்தறிக்குரிய இடத்தை, அவர்கள் தந்தது ஒன்றே, நம் பிரதமர் அவர்கள் எந்த அளவிற்கு இத் தொழிலின்பால் ஆர்வமும், அக்கறையும் கொண்டிருக்கிறார்கள் என்பதற்கு அரிய எடுத்துக்காட்டாகும்.

1. ஐந்தாவது திட்ட முடிவில், கூட்டுறவுத் துறையில், கைத்தறி நெசவாளர்களின் எண்ணிக்கை, 30 சதவிகிதத்திலிருந்து 60 சதவிகிதத்திற்கு உயர்த்தப்படும்.

2. செயல்முறைக்கேற்ற உபகரணங்களை, நிலையாக விநியோகிக்கவும், கைத்தறிகளில் நவீன முறைகளைப் புகுத்தவும், கைத்தறிகளில் உற்பத்தி செய்யப்பட்ட துணிகளின் விற்பனைக்கு, வழிவகை செய்யவும், தீவிர அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் ஈரோடு, காஞ்சிபுரம் பகுதிகளில் 10 ஆயிரம் தறிகள் அமைக்கப்படும்.

3. கைத்தறி நெசவாளர்களுக்கு நியாயமான விலையில் நூல் கிடைக்க வழி வகை செய்வதோடு, வங்கி மூலம், தடையின்றி நிதியுதவி கிடைக்கவும் ஏற்பாடு செய்யப்படும்.



4. கைத்தறிக்கென்று ஒதுக்கப்பட்ட இரகங்களை, உற்பத்தி செய்வதில் தீவிர நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

5. கைத்தறித் துணி ஏற்றுமதிக்கான, உற்பத்தி இரகங்களின் தரத்தையும், அளவையும் உயர்த்துவதற்காக, ஏற்றுமதித் திட்டத்தின் கீழ், கரூர் மற்றும் சில பகுதிகளில் 1,000 தறிகள் வீதம் அமைக்கப்படும்.

இவைதாம் நம் பிரதமர் அவர்கள் அறிவித்துள்ள அரிய திட்டங்களாகும். 1975-76-ஆம் ஆண்டில் கூட்டுறவில் செயல்படும் கைத்தறி நெசவாளர்களுக்காக ''சேமிப்பும்—பாதுகாப்பும்'' என்ற திட்டம் அமல்படுத்தப்பட்டுச் செயல்பட்டு வருகிறது. அத்துடன் ''சேமிப்பு நிதி'' என்னும் திட்டமும், ''குருப் இன்ஷ்யூரன்ஸ்'' திட்டமும் செயல்பட்டு வருகின்றன. ஆரம்பக் கட்டமாக, 40 ஆயிரம் கைத்தறி நெசவாளர்கள் இத்திட்டத்தின் கீழ் கொண்டு வரப்பட்டுள்ளனர். பிறகு கூட்டுறவுத் துறையில் செயல்படும் அனைத்து நெசவாளர்களும், விரைவில் இத்திட்டத்தின் கீழ் கொண்டு வரப்படுவார்கள்.

இப்படிப் பல்வேறுபட்ட திட்டங்களை, மத்திய, மாநில அரசுகள் கொண்டு வரவேண்டியதன் அவசியம் என்ன? தேவைதான் என்ன? நாட்டின் துணித்தேவையைக் கணிசமான அளவிற்கு ஈடுகட்டும் நெசவாளர்கள், கூட்டுறவு நெசவாளர்கள், துன்பப்படக் கூடாது, அவர்கள் வாழ்வில் இருள் சூழக் கூடாது, அவர்கள் அல்லல் படக்கூடாது என்ற அடிப்படைதான், இதற்குக் காரணம்.

''பட்டினில் ஆடையும் பஞ்சினில் உடையும் பண்ணி மலைகளென வீதி குவிப்போம்'' என்றார் மகாகவி பாரதியார். அப்படி உற்பத்தியான கைத்தறித் துணிகளை விற்றுக் குவித்துக் கூட்டுறவில் செயல்படும் கைத்தறி நெசவாளர்களுக்கு நல்வாழ்வு நல்கும் பெரும் பொறுப்பு — தலையாய பணி — கோ-ஆப்டெக்ஸுக்கு உரியதாகும். இதற்குக் காரணம் கூட்டுறவில் செயல்படும் கைத்தறி நெசவாளர்களின் தாய்ச் சங்கம் கோ-ஆப் டெக்ஸ் ஆகும்.

எனவே, இதுவரை கூட்டுறவில் வராத நெசவாளர்களை விரைவில் கூட்டுறவுக்குள் கொண்டுவரப் பாடுபடுவோம்; ஒன்றுபட்டு வாழ்வோம்; ஒருகோடி நன்மை பெறுவோம்!

இது கூட்டுறவு நெசவாளர்களுக்கு மட்டுமல்ல, நம்நாட்டு மக்கள் அனைவருக்கும் நன்மையளிப்பதாகும்.



## வெய்யிலின் வெம்மை
## வியர்வையின் வேதனை
## இவற்றிலிருந்து பாதுகாக்க
## குளுமையான கதர் அணியுங்கள்.

கதர் ஆடைகள் கோடையின்
கொடுமையைக் குறைக்கும்.



தமிழ் நாட்டில் தயாராகும் கதர் பருத்தி
ஆடைகளுக்கு இப்போது தள்ளுபடியோ
**20** சதவீதம்.
எல்லா காதி கிராப்ட்களிலும் கிடைக்கும்.

கதர் கிராமத் தொழில் வாரியம்,
குறளகம், சென்னை-600 001



# காலணிகள்

கிராமியக் கைத் தொழில்
வினைஞர் தயாரித்தவை.
கோடை காலத்திற்கேற்ற
தினுசுகள், நயமான விலைகளில்—
தரமானவை — உறுதியானவை.
உழைப்பில் உயர்ந்தவை.
நீங்கள் வாங்கும் ஒவ்வொரு
பொருளும் கிராமத் தொழிலாளரின்
வருமானத்தைப் பெருக்கும்.
எல்லா காதி கிராப்ட்களிலும்
இப்போது கிடைக்கின்றன.



கதர் கிராமத் தொழில் வாரியம்,
குறளகம், சென்னை-600 001




# "இழிவு கொண்ட மனிதரென்பர் இந்தியாவில் இல்லையே!"

**சி. என். கிருஷ்ணபாரதி,**
துணை இயக்குநர்,
உள்(செய்தி,மக்கள்தொடர்புத்)துறை,
தமிழ்நாடு.

மனிதரை மனிதர் ஆடுமாடுகளைப் போன்று—விலைப் பொருட்களாகக்கூட மதிக்காது—அடிமையாக்கியிருக்கும் கொடுமை நம் நாட்டில் பல பகுதிகளில் நிலவி வந்தது. கொத்தடிமைகள், தாங்கள் பெற்ற கடனுக்கு அடிமையாக வாழவில்லை; கடன் தொகைக்குத் தர வேண்டிய வட்டிக்காக அடிமை வாழ்வு வாழ்ந்தனர். கடன் தொகை குறைவதற்குப் பதில் வளர்ந்து கொண்டே போகும்;அடிமை வாழ்வும் பரம்பரையாகிவிடும்.

விடுதலை பெற்ற இந்தியாவில், இந்த அவல நிலைக்கெல்லாம் முற்றுப் புள்ளி வைக்கும் வகையில் **பிரதமர் அவர்களின் இருபது அம்சப் பொருளாதாரத் திட்டம்** வழிவகுத்தது.

இந்தியாவின் பல்வேறு மாநிலங்களிலும், குறிப்பாகத் தமிழ்நாட்டிலும் இந்தக் கொத்தடிமை நிலை இருந்து வந்தது.

எனவே, இத்தகைய கொடுமையான முறையினை-கொத்தடிமைத் தொழில் முறையை—அறவே ஒழித்திடச் சட்டமியற்றிச் செயல்படத் துவங்கியது அரசு.

பிரதமர் அவர்களின் இருபது அம்சப் பொருளாதாரத் திட்டத்தினை அரசும், அரசு சார்ந்த நிறுவனங்களும் எத்தகைய முறையில் நிறைவேற்றி வருகின்றன-எந்த அளவிற்கு இதனால் மக்கள் நலம் பெறுகின்றனர் என்பன போன்றவைகளை நேரில் கண்டறிவதற்கெனத் தமிழ்நாடு அரசின் செய்தி-மக்கள் தொடர்புத் துறை, பத்திரிகைகளின் செய்தியாளர்களை கோவை-நீலகிரி மாவட்டங்களுக்கு அழைத்துச் சென்றது.

மே திங்கள் 20-ஆம் நாள் முதல் 23-ஆம் நாள் வரை நான்கு நாட்கள், இம் மாவட்டங்களில் இருபது அம்சப் பொருளாதாரத் திட்டத்தின்கீழ் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்ற பல்வேறு திட்டங்களின் செயல்முறைகளையும், அவற்றின் மூலம் பயன்பெறுகின்ற மக்களையும் காணுகின்ற வாய்ப்பு அனைத்துச் செய்தியாளர்களுக்கும் கிட்டியது. இவைகளில் முக்கியமானதாகவும் குறிப்பிடத்தகுந்ததாகவும் கருதபடுகின்ற ஒன்று கொத்தடிமைத் தொழில் முறையாகும்.

கோயம்புத்தூர் மாவட்டத்தில், சத்தியமங்கலம், பவானி போன்ற வட்டங்களில் இம்முறை இருந்து வந்தது. கடனைப் பெற்ற தொகையைத் தங்களால் திருப்பித் தர இயலாத நிலைமையாலும், ஏழ்மையான நிலையில் வாழ்ந்து வந்ததாலும், இவர்கள் அடிமைத் தொழில் புரிந்து வந்தனர். இந்த வட்டங்களைச் சார்ந்த வட்டாட்சியாளர்கள், கோபிச் செட்டிப்பாளையம் கோட்டாட்சியாளர் ஆகியோரின் தீவிர முயற்சியால் இத்தொழில் நடத்திய எஜமானர்களும், அவர்கள் தொழிலாளர்களிடம் பெற்றிருந்த கடன் பத்திரங்களும் தெரிய வந்தன. தகுந்த நடவடிக்கைகள் மூலம் கடன் பத்திரங்கள் அனைத்தும் பறிமுதல் செய்யப்பட்டு, அடிமை ஊழியர்கள் விடுதலை செய்யப்பட்டனர். அவர்களுக்கு தகுந்ததொரு வாழ்வினை அமைத்துத் தர முனைப்பான முயற்சிகளையும் மேற்கொண்டு வருகின்றனர்.

சத்தியமங்கலம் வட்டத்தில் தாளவாடி பிர்க்காவில்தான் இம்முறை பரந்த அளவில் காணப்பட்டது. தாளவாடி வட்டாரம் மலைப்பகுதியின் அடிவாரத்திலும் கர்நாடக மாநிலத்தின் எல்லையோரத்திலும் அமைந்துள்ளது. பெரும்பாலும் இப்பகுதிகளில் வாழ்பவர்களுக்குச் சீரான போக்குவரத்து, நவீன சாதனங்கள், கல்வி, தகுந்த பொருளாதாரம் போன்ற வசதிகள் குறைவு. எனவே, இவர்களிடம் அறியாமை எளிதில் குடிபுகுந்துவிட்டது! பொருளாதாரத்தில் பின்தங்கிய நிலையாலும், ஏழ்மையையே சொத்தாகக் கொண்டிருந்த காரணத்தாலும் இவர்கள் எளிதில் இத்தொழிலில் ஈடுபட வாய்ப்பு ஏற்பட்டு விட்டது.

கொத்தடிமைத் தொழிலாளர்களில் பெரும்பாலோர் அரிசன இனத்தவர்கள். தவிர, சோழகர், ஊராலி கவுண்டர் போன்ற பிற இனத்தவர்களும் இத்தொழில் புரிந்து வந்தனர். இங்கு இத்தொழில் புரிபவர்கள் 'ஜீத்' என அழைக்கப்பட்டனர். 'ஜீத்' என்றால் கன்னடத்தில் 'கொத்த

# டி ஐ ஐ ஸியின் சாதனைகள்— ஒரு கண்ணோட்டம்






**20 அம்ச திட்டம் அளித்துள்ள புத்துணர்வு எங்களையும் ஊக்கி விட்டது.**

அதன் காரணமாக இவ்வாண்டில் மேலும் பல சாதனைகளைப் புரிந்துள்ளோம். சிறிய மற்றும் நடுத்தர தொழிற்சாலைகளுக்கு அதிக அளவில் பொருளுதவி அளித்துள்ளோம். அதன் மூலமாக மேலும் அதிக வேலை வாய்ப்புகள் ஏற்பட்டுள்ளன. பிற்பட்ட பகுதிகளுக்கு முன்னேற வாய்ப்புகளும் உண்டாகியுள்ளன.

1974 மார்ச் முடிய 12 மாதங்களில் அளித்த நிதி உதவி ரூ. 664 லட்சம்தான். ஆனால், 1976 மார்ச்சுடன் முடிந்த 12 மாதங்களில் ரூ. 2,135 லட்சம் உதவி அளித்திருக்கிறோம்.

கீழ்க்கண்ட புள்ளி விவரங்கள் எங்கள் சாதனையை விளக்கமாகக் கூறிடும்.

(ரூ. லட்சங்களில்)

| விவரங்கள் | 31-3-74 முடிய | 31-3-75 முடிய | 31-3-76* முடிய | 1974 ல் இருந்து 1976வரை வளர்ச்சியின் சதவிகிதம் |
|---|---|---|---|---|
| **மொத்த நிலை:** | | | | |
| ஒப்புதல் அளிக்கப்பட்ட மனுக்கள் | 165 | 486 | 613 | 272 |
| ஒப்புதல் அளிக்கப்பட்ட தொகை (மொத்தம்) | 664 | 1823 | 2135 | 222 |
| விநியோகிக்கப்பட்ட தொகை | 403 | 824 | 1302 | 223 |
| வரவேண்டிய தொகை | 3141 | 3767 | 5026 | — |
| **பிற்பட்ட பகுதிகளுக்கு அளிக்கப்பட்ட உதவி:** | | | | |
| ஒப்புதல் அளிக்கப்பட்ட மனுக்கள் | 68 | 184 | 291 | 328 |
| ஒப்புதல் அளிக்கப்பட்ட தொகை (மொத்தம்) | 329 | 912 | 1174 | 257 |
| மொத்த ஒப்புதல் அளிக்கப்பட்ட தொகையில் சதவிகிதம் | 50 | 50 | 55 | — |
| **சிறு தொழில்களுக்கு உதவி:** | | | | |
| ஒப்புதல் அளிக்கப்பட்ட மனுக்கள் | 124 | 393 | 505 | 307 |
| ஒப்புதல் அளிக்கப்பட்ட மொத்த மனுக்களின் சதவிகிதம் | 75 | 81 | 82 | — |
| ஒப்புதல் அளிக்கப்பட்ட தொகை (மொத்தம்) | 243 | 668 | 715 | 194 |
| மொத்த ஒப்புதல் அளிக்கப்பட்ட தொகையில் சதவிகிதம் | 27 | 37 | 34 | — |
| **இதர விவரங்கள்:** | | | | |
| ஐடிஏ (IDA) வகை கடனுதவித் தொகை | 91 | 296 | 374 | — |
| உதவி பெற்றதில் புதிதாக தொழில் புரிவோரின் எண்ணிக்கை | 92 | 319 | 454 | — |
| உதவி பெற்றதில் தொழில் வினைஞர்கள் | 82 | 275 | 418 | — |

* தணிக்கைக்கு உட்பட்டது

**ஒப்புதல் அளிக்கப்பட்ட உதவியில் மேலும் சில முக்கிய விவரங்கள்**

| விவரங்கள் : | அளவு | 1973-74 | 1974-75 | 1975-76 |
|---|---|---|---|---|
| திட்டங்களின் மொத்த மதிப்பு | ரூ. லட்சங்களில் | 1855 | 4333 | 3662 |
| டிஐஐஸி அளித்திட்ட உதவி | சதவிகிதம் | 36 | 41 | 58 |
| தொழிலகங்கள் திரட்டிய இதர தொகைகள் | ரூ. லட்சங்களில் | 1191 | 2510 | 1526 |
| மொத்தம் எதிர்பார்க்கப்படுகிற உற்பத்தி மதிப்பு | ,, | 4295 | 11738 | 12252 |
| ஏற்படக்கூடிய வேலைவாய்ப்பு | எண் | 3900 | 10930 | 12700 |

மேற்கொண்டு விவரங்களுக்கு நிர்வாக இயக்குனரை அணுகுங்கள்

## தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகம்

"அருள்மனை"
26, ஒயிட்ஸ் ரோடு,
சென்னை-600 014

கிளைகள்:
தஞ்சாவூர், மதுரை,
கோயமுத்தூர்,
சேலம், வேலூர்
மற்றும்
திருநெல்வேலி.

டிஐஐஸி
இதய பூர்வமான
நிதியுதவி அளிக்கும்
நிறுவனம்.

டிமைத் தொழிலாளர்' எனப் பொருள்.

குடும்பத்தின் தலைவர் நிலச் சுவான்தார் ஒருவரிடம் தனது குடும்பத்தின் செலவிற்கோ அல்லது பிற அவசரச் செலவிற்கோ பணத்தைக் கடனாகப் பெற்றால், கடன் தொகையைத் திருப்பித் தருகின்ற வரையில் தனது குடும்பத்திலுள்ள ஆண் நபர் ஒருவரை நிலச்சுவான்தாரின் பண்ணையில் பணியாற்ற அனுப்ப வேண்டும். சில சமயம் பெண்களும் சேர்ந்து வேலைக்கு அனுப்பப்படுவர். இவர்களுக்கு ஆண்டுக்கு இத்தனை மூட்டை கேழ்வரகு என்று கூலி தரப்படும். சிலருக்கு மூன்று வேளை உணவு மட்டும் வழங்கப்படும். கடன்தொகையைத் தந்தவுடன் இவர்கள் விடுதலை செய்யப்படுகின்றனர். திருப்பித் தர இயலாத நிலையில் பத்திரங்கள் புதுப்பிக்கப் பெற்றுத் தொடர்ந்து பணியாற்ற வேண்டிய சூழ்நிலையும் உருவாகிறது. பெரும்பாலான பத்திரங்களில் எழுதியுள்ளபடி, கூலியுடன் ஆண்டுக்கு ரூ. 30 அல்லது ரூ. 40 கடன் தொகைக்காகக் கழிக்கப்பட வேண்டும். ஆனால் தொழிலாளி ஒரு நாளைக்கு வேலைக்கு வரவில்லையென்றால் ஒரு ரூபாய் பிடிக்கப்பட வேண்டும். ஆனால் வராத நாட்களுக்கு 5 ரூபாய் வரை பிடிக்கப்படுகிறது. இந்தக் கணக்கின்படி கடன் தொகை கழிக்கப்படுவதற்குப் பதில், குறிப்பிட்ட தொகை கூட்டப்படும் கொடுமையை காண முடிகிறது.

பிரதமரின் இருபது அம்சப் பொருளாதாரத் திட்டத்தில் ''கொத்தடிமை முறை எங்கெங்கு காணப்பட்டாலும் அறவே ஒழிக்கப்பட வேண்டும்'' என வலியுறுத்தப்பட்டதால் நாட்டில் பல்வேறு பகுதிகளில் சட்டங்கள் மூலம் கொத்தடிமைகள் விடுவிக்கப்பட்டனர். தமிழகத்தில் ஜனாதிபதி ஆட்சி அமலுக்கு வந்த பின்னர்தான் சட்டம் தீவிரமாக்கப் பெற்று அடிமைகள் மீட்கப்பட்டனர். தொடர்ந்து மீட்கப்பட்டு வருகின்றனர்.

கோவை மாவட்டத்தில் மட்டும் மார்ச், ஏப்ரல் ஆகிய இரு திங்களில் ஏறத்தாழ 475 கொத்தடிமைகள் கண்டுபிடிக்கப் பெற்று விடுவிக்கப் பெற்றுள்ளனர். சத்தியமங்கலம் வட்டத்தில் பனகபள்ளி கிராமத்தில், 19 எஜமானர்களிடம் பணியாற்றி வந்த 26 கொத்தடிமைகள் 31.3.1976-ல் மீட்கப்பட்டுள்ளனர். மேலும் தாளவாடி, திகனரை, காளவாடி கும்டாபுரம் கிராமங்களில் விசாரணையின் மூலம் 35 எஜமானர்களிடம் 52 பேர் அடிமைத் தொழில் புரிந்து வந்தது தெரிய வந்தது. இவர்கள் அனைவரும் 1-4-76 மற்றும் 2-4-76 ஆகிய இரு நாட்களில் விடுவிக்கப்பட்டனர்.

தவிர, சத்திய மங்கலத்திற்கு வடக்கேயுள்ள மலைப்பகுதிகளான குதியாலத்தூர், கூத்தம்பாளையம், குந்திரி போன்ற கிராமங்களில் போக்குவரத்து வசதி சரியில்லாத நிலைமையிலும் ஏப்ரல் திங்களில் 123 தொழிலாளர்கள் மீட்கப்பட்டனர். தாளவாடி பிர்க்காவைச் சார்ந்த மெட்டல்வாடி, மல்லன்குள்ளி, சோத்தன்புரம், சிம்டஹள்ளி போன்ற கிராமங்களில் 65 பேர் விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

தாளவாடியின் ஒரு பகுதியைச் சார்ந்த கிராமங்களாக கீர்மாளம், திங்களூர் ஆகியவை அமைந்திருந்த போதிலும், இவைகள் முற்றிலும் காடுகள் அடர்ந்த பகுதிகளாக விளங்குகின்றன. இங்கே யானை, சிறுத்தை, கரடி, காட்டெருமை போன்ற கொடிய வனவிலங்குகள் வாழ்கின்றன. இத்தகைய இடர்ப்பாடுகள் இருந்த பொழுதும் வட்டாட்சி அலுவலர்களின் விடாமுயற்சியாலும், கடின உழைப்பாலும் 75 கொத்தடிமைத் தொழிலாளர்கள் மீட்கப்பட்டுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. இவ்வட்டத்தில் கொத்தடிமைத் தொழில் நடத்தி வந்த எஜமானர்கள் சுமார் 219 பேர்கள் ஆவர். இவர்கள் அனைவரிடமும் இருந்த அடிமை ஒப்பந்தப் பத்திரங்கள் அனைத்தும் கைப்பற்றப்பட்டு விட்டன. இப்பத்திரங்கள் 1924 1927, 1939, 1941, 1944 ஆகிய ஆண்டுகளில் எழுதப்பட்டுள்ளன.

இங்கே அடிமை வேலை, பரம்பரை பரம்பரையாக இருந்து வந்திருக்கிறது. 50 ரூபாய், 100 ரூபாய், 500 ரூபாய் கடன்களுக்காகப் பரம்பரையாக வேலை செய்திருக்கின்றனர். தகப்ப



**கொத்தடிமை முறையிலிருந்து மீட்கப்பட்ட கூடலூர் 'பனியர் பெண்கள்'.**

**ஆண்கள் மட்டுமல்ல, பெண்களும் கொத்தடிமைக் கொடுமையிலிருந்து மீட்கப்பட்டுள்ளனர்.**



# உங்கள் நிலத்தில் உரச் செலவைக் குறைத்து பயிர் விளைச்சலை 15% அல்லது அதற்கும் மேலாக அதிகப்படுத்துவதற்கு உபயோகியுங்கள்

## ஏரீஸ் எக்ரோ-ஏஸோ

## மற்றும் ஏரீஸ் எக்ரோ-ரைஸோ

நைட்ரஜன் அளிக்கும் கிருமிகள்

**எப்படி?**
ஏரீஸ் எக்ரோ-ஏஸோ மற்றும் எக்ரோ-ரைஸோ நைட்ரஜன் அளிக்கும் கிருமிகள். பாக்டீரியாக்கள் வளிமண்டலத்திலிருக்கும் நைட்ரஜனை எடுத்து ஆர்கானிக் நைட்ரஜனாக மாற்றி, செடிகள் கிரகித்துக் கொள்ளும்படியாகச் செய்கின்றன. எனவே உங்களுக்கு நைட்ரஜன் அடிப்படையில் அமைந்த ரசாயன உரங்கள் 25% மிச்சமாகின்றன. இந்த மிச்சம் மட்டுமே ஏரீஸ் எக்ரோ-ஏஸோ அல்லது எக்ரோ-ரைஸோவின் விலையை விட அதிகமாக இருக்கிறது.




**ஆராய்ச்சித் தயாரிப்புகள்:**
நைட்ரஜனை ஏற்று இணைக்கும் பாக்டீரியாக்கள் இந்தியாவிலும், வெளிநாடுகளிலும் நடத்தப்பட்ட பரந்த ஆராய்ச்சியின் பயனாக விளைந்தவையாகும். ஏரீஸ் எக்ரோ-ஏஸோ மற்றும் எக்ரோ-ரைஸோ, ஏரீஸ் விஞ்ஞானிகள் கடுமையான ஆராய்ச்சிகளின் பயனாக உருவாக்கியுள்ள உன்னதமான தயாரிப்புகளாகும்.

**உங்கள் பயிர் விளைச்சல் 15% அல்லது அதற்கும் மேலாக அதிகமாக வழி செய்வது:**
• விதைகள் சிறப்பாக முளைவிடுதல் • நாற்றங்கால்களின் விரைவான வளர்ச்சி • மேம்பட்ட செடி வளர்ச்சி • வேர்களின் சிறந்த வளர்ச்சிக்கு மேம்பட்ட மண் அமைப்பு மற்றும் சூழ்நிலைகள் • விளைமண்ணில் வளிமண்டல நைட்ரஜனின் அதிகமான சேர்க்கை • உயிர்ப் பொருட்களின் சிதைவு போன்ற சாதாரண மண் மாற்றச் செயற்பாடுகள் துரிதப்படுதல் • மண் வழியாகப் பரவும் நோய்களுக்கு எதிர்ப்பு • மண்ணில் உள்ளார்ந்த நுண்ம உயிர்ப் பொருட்களின் எண்ணிக்கை அதிகமாதல்.

**உபயோகிப்பது கலபம்:**
அ) விதைப் பதனம் ஆ) தோய்த்தெடுக்கும் முறை
இ) மண் பதனம்.

**இந்தப் பயிர்களுக்கு:**
பயற்றினத்தைச் சாராத பயிர்களுக்கு எக்ரோ-ஏஸோ,
தானியங்கள், பருத்தி, கரும்பு, புகையிலை மிளகாய், எள், குசும்பு, சூரியகாந்தி, பழங்கள், காய்கறிகள் முதலியன.

பயற்றினங்களுக்கு மட்டும் எக்ரோ-ரைஸோ,
நிலக்கடலை, சோயாபீன், பட்டாணி மற்றும் அவரையினம், பருப்பு வகைகள், லூஸர்ன், தைன்சா, பிரெஞ்சு பீன்ஸ் முதலியன.



**விசேஷ அம்சங்கள்:**
- அதிகமான பாக்டீரியா எண்ணிக்கைக்கென (பிரதி கிராமிற்கு 100 முதல் 1000 கோடி) கூடுதலான நியூட்ரியன்டுகள் (ஊட்டச் சத்துக்கள்)
- சேமிப்பில் நீண்டகாலம் கெடாமலிருப்பதற்கென பிரத்யேகமான தெர்மோகோல் பாதுகாப்புப் பேக்கிங்
- பிரேரிக்கப்பட்டுள்ள ஐஎஸ்ஐ தரத்தின் தீவிரமான கடைப்பிடிப்பு

Aj

இவர்களுடைய ஆராய்ச்சித் தயாரிப்புகள்:
**ஏரீஸ் எக்ரோ-வெட் இண்டஸ்ட்ரீஸ் பிரை. லிட்.**
த.பெ. எண் 9417, பம்பாய் 400 093.

Grant.18 TM

னுக்குப் பின்னர் மகனும், அடிமை வேலை செய்திருக்கிறார். கணவன், மனைவி, குழந்தைகள், இப்படி குடும்பம் முழுதுமே அடிமை வேலையில் ஈடுபட்டிருந்தனர்.

பொட்டுக் கண்ணன் என்பவர் 500 ரூபாய்க் கடனுக்காக 20 வருடம் கொத்தடிமையாக இருந்தார். மொட்டார் என்பவர் 450 ரூபாய் கடனுக்காக 12 ஆண்டுகளும், பந்தன் என்பவர் 200 ரூபாய் கடனுக்காக 5 ஆண்டுகளும், தொல்கப்பி என்பவர் 300 ரூபாய் கடனுக்காக 10 ஆண்டுகளும் அடிமைத் தொழில் புரிந்து வந்துள்ளனர். இவைகள் அனைத்தும் ஒப்பந்தப் பத்திரங்கள் வாயிலாக தெரிய வந்துள்ளன. இவர்கள் அனைவரையும் நேரில் கண்டு அவர்தம் நிலைமைகளையும், அனுபவங்களையும் அறிந்து கொள்ள வேண்டும் என்பதற்கெனத் தாளவாடி செல்ல முனைந்தோம்.

ஜடாமுனி என்ற 13 வயதுச் சிறுவன் தனது குடும்பத்திற்குப் புதுத்துணி வாங்க ரூ. 150-க்குக் கடன்பட்டு 10 ஆண்டுகளுக்கு மேல் அடிமையாக இருந்தான். அவனது வேலை, யானைகளை விரட்டுவதாம். உயிருக்குப் பயந்து கொண்டு வாழ்ந்த அவன், விடுதலையடைந்ததைச் சொல்லும் போது அவனுக்கு மகிழ்ச்சி பிடிபடவில்லை. இப்படி எத்தனையோ சோகக்கதைகள்!

சத்தியமங்கலத்திலிருந்து தாளவாடி செல்லுகையில் ஏறத்தாழ 5,000 அடி உயரமுள்ள மலையைக் கடந்து செல்லும் வாய்ப்பு ஏற்பட்டது. அப்பகுதியிலுள்ள கிராமங்களையும், காடுகளையும் நேரில் கண்டபொழுது அடிமைத் தொழிலாளர்களின் நிலைமைகளையும் ஓரளவு மனக்கண்ணால் உணர முடிந்தது.

முதலில் செய்தியாளர்களுடைய குழு தாளவாடியை அடைந்தது. அங்கே அடிமைத் தொழிலினின்று விடுவிக்கப்பெற்ற சிலரைக் காணும் வாய்ப்பு ஏற்பட்டது. அங்கே சித்தநஞ்சன் என்னும் பெயருடைய 12 வயதுச் சிறுவன் கொத்தடிமையினின்று மீட்கப்பட்டுள்ளான். தந்தை சித்தன், கிருஷ்ணமேஸ்திரி என்பவரிடம் கடனாகப் பெற்ற 100 ரூபாய்க்கு, மகன் சித்தநஞ்சன் அடிமைத் தொழிலை ஏறத்தாழ 2.5 ஆண்டுகளாகப் புரிந்து வந்துள்ளான். இவனுக்கு மூன்று நேரம் உணவு மட்டும் வழங்கப்பட்டு வந்துள்ளது. கல்வி பயில வேண்டிய வயதில், அடிமைத் தொழில் புரிந்துள்ளது உண்மையிலே வருந்தத்தக்க ஒன்றுதான். இவன் 3.4.76-ல் விடுவிக்கப்பட்டான்; தற்பொழுது தினக்கூலி 2 ரூபாய் என்ற அளவில் கூலி வேலை செய்து வருகிறான்.

நீலகிரி மாவட்டத்தில் கொத்தடிமைத் தொழில் பரவலாக கூடலூர் வட்டாரத்திலே காணப்படுகிறது. இத்தொழிலில் ஈடுபட்டுள்ள அனைவரும் 'பணியர்' என்னும் மலைச்சாதி இனத்தவராவர்கள். இவர்கள் 'செட்டி' என்று அழைக்கப்படும் நிலச்சுவான்தார்களிடம் அடிமைத் தொழில் புரிந்து வந்தனர். மலைச்சாதி இனத்தைச் சார்ந்தவர்கள் ஆதலால் பெரும்பாலும் இவர்கள் கிராமங்களின் ஒதுக்குப்புறங்களிலே வாழ்ந்து வந்தனர். இவர்களுக்கென்று தனியான தொழில்கள் ஏதும் இல்லை. மேலும் பொருளாதாரத்திலும், சமூகத்திலும் மிகவும் பின்தங்கிய நிலையில் உள்ளனர். வாழ்க்கை நடத்துவதிலும் பல்வேறு இன்னல்கள் ஏற்படுகின்றன. எனவே தான் இவர்கள் அடிமைத்தொழில் புரிய வேண்டிய கட்டாயம் ஏற்படுகிறது. இவர்களும் பரம்பரை பரம்பரையாக அடிமைத்தொழில் புரிந்து வந்தவர்கள்தான்.

கூடலூர் பிர்க்காவில்தான் இவர்கள் அதிக அளவில் உள்ளனர். இந்த வட்டாரத்தில் ஏறத்தாழ 5,667 பணியர்கள் வாழ்கின்றனர். இவர்களில் கொத்தடிமைத் தொழிலில் ஈடுபட்டிருந்தவர்கள் 481 பேர்கள். இத்தொழிலில் ஆண்களும் பெண்களும் கலந்திருக்கின்றனர். மிகவும் குறுகிய காலத்தில் அதாவது மார்ச்சு, ஏப்ரல் ஆகிய இரண்டு மாதங்களிலே இவர்கள் அனைவரும் அரசால் கண்டுபிடிக்கப்பெற்று விடுவிக்கப்பட்டுள்ளனர்.

இவர்களையும் நேரில் கண்டறிய வேண்டுமென்பதற்காகச் செய்தியாளர் குழு கூடலூர் நோக்கிச் சென்றது. கூடலூரில் விடுதலை செய்யப்பட்ட சில பணியர்களைக் காணும் வாய்ப்பு ஏற்பட்டது. அவர்களில் பெரும்பாலானவர்கள் பணியர் பெண்கள். மணமாகாத-வயது வந்த பணியர் பெண்களும் இத்தொழிலில் ஈடுபட்டு வந்ததைக் கண்டோம்.

கூடலூர் வட்டாரம் புத்தூர் வயல் கிராமத்தைச் சார்ந்த குஞ்சன் என்னும் 28 வயதுடையவர் 15 ஆண்டுகள் அடிமை ஊழியம் செய்து வந்தார். தன்னுடைய தகப்பன் 'கோப்பன்' வாங்கிய சிறு தொகைக்குக் குஞ்சனும், அவன் மனைவி நஞ்சி என்பவளும் அடிமைத் தொழில் புரிந்து வந்தனர். தற்பொழுது இவர்கள் விடுவிக்கப்பட்டுள்ளனர். இவர்களுக்கு மூன்று குழந்தைகள் உள்ளன. இதைவிடக் கொடுமை தந்தை வாங்கிய பணத்திற்காக வயது வந்த மகள்-கரும்பி-இந்தத் தொழிலில் ஈடுபட்டு வந்துள்ளாள். அவளும் விடுதலை செய்யப்பட்டு, தற்பொழுது ஊராட்சி ஒன்றியப்பள்ளி ஒன்றில் ஆயாவாகப் பணியாற்றி வருகிறாள்.

இதையும் மிஞ்சுகின்ற அளவில் கூடலூர் பிர்க்காவைச் சார்ந்த பாலு என்பவன் செட்டி ஒருவரிடம் 15 ஆண்டுகளாக மாடு மேய்க்கும் தொழிலில் ஈடுபட்டு வந்துள்ளான். சிறிய வயதில்-அதாவது 7 வயதிலேயே இவன் இத்தொழிலில் ஈடுபட்டிருக்கிறான். இப்பொழுது வயது 22. இந்தப் பதினைந்து ஆண்டுகளில் எந்தவிதமான பொழுது போக்கையும் பெறவில்லை. சினிமா என்பதைப் பார்த்ததே இல்லை யென ஏக்கத்துடன் கூறினான்.

இவ்வாறு விடுதலை செய்யப்பட்டுவிட்டால்மட்டும் போதாது. அவர்களுக்கும் தகுந்ததொரு வாழ்வினை அமைத்துத் தர வேண்டும். எனவேதான் அரசு பல்


## "தமிழரசு" படியுங்கள்!

தமிழ்நாடு அரசின் கொள்கைகளையும், திட்டங்களையும் தெளிவாகத் தெரிந்து கொள்ளவும், நவீன வேளாண்மை முறைகளையும், இதர துறைகளின் பணிகளையும் அறிந்து கொள்ளவும் "தமிழரசு" படிக்கத் தவறாதீர்கள். "தமிழரசு" இதழ் தவறாமல் கிடைக்க உடனே சந்தாதாரராகச் சேரும்படி கேட்டுக் கொள்கின்றோம்.

**சந்தா விவரம்**

ஆண்டுச் சந்தா — ரூபாய் 12.00
6 மாதச் சந்தா — ரூபாய் 6.00
தனி இதழ் — 50 காசு

**சந்தா அனுப்பவேண்டிய முகவரி**

**பொது நிருவாக மேலாளர்**
**(Circulation Manager),**
**"தமிழரசு" அலுவலகம்**
**அரசினர் தோட்டம்**
**சென்னை — 600 002.**

ESTD: 21-3-52. **தபால்மூலம்** GOVT REGD: 3072.

# இலவசக்கல்விபோதனை

**"B குரூப்" வகுப்புகள் ஆரம்பம் : : நாள் : 7—7—1976**

உத்திரவாதத்துடன் **1976—77**-ம் வருட கீழ்க்கண்ட தேர்வுகளுக்கு மாதம் இருமுறை தபால் மூலம் பாடங்கள் அனுப்பி பயிற்சி அளிக்கப்படும்.

1. S.V.&Agra., B.A., B.Com., (P.U.C., இண்டர் தேறியவர்கள் தகுதியுடையவர்கள்). 2. M.A., M.Com., A.M.I.B.M., M.B.A., (பட்டதாரிகள் அருகதை உடையவர்கள்). 3. M.I.B.M., D.I.B.M., D.I.B.A., G.C.A., போபால் I.A., &I.Com., (S.S.L.C., S.S.C, மெட்ரிக், H.S.A, தேறியவர்களும், P.U.C, தவறியவர்களும் தகுதி உடையவர்கள்). 4. சென்னை-மதுரை: மெட்ரிகுலேஷன் & P.U.C., 5. தமிழ் வித்துவான்—புலவர் தேர்வுகள். 6. தமிழ் B.Litt., (ஆசிரியர்கள் தகுதியுடையவர்கள்). 7. விவசாயம், 8. போஸ்ட் மேன்—போஸ்டல் கிளார்க். 9. கைத்தறி நெசவு, 10. Accountancy. 11. கிராம மணியம்—கர்ணம். 12. சர்வீஸ் கமிஷன் (76 அக்டோபர்) தமிழ்&ஆங்கிலம். 13. S.S.L.C., (8-ம் வகுப்பு படித்தவர்கள் தகுதியுடையவர்கள்). 14. ஹோமியோபதி (தமிழ்-ஆங்கிலம்). 15. பேசிக் ஆங்கிலம். 16. பிரிமெட்ரிக். 17. Com., இண்டர் D.Com., B.Com., B.Com. (Hons), M. Com., (S.S.L.C.-P.U.C. தேரியவர்களும்-தவறியவர்களும் தகுதியுடையவர்கள்.

முழு விவரங்களுக்கு **25** பைசா தபால் தலையுடன் விண்ணப்பிக்கவும்.

'தமிழகத்தின் தனிப் பெரும் தபால் கல்வி ஸ்தாபனம்'

**Affiliated by I. A. Educations and Com. University — New Delhi.**

## ஸ்ரீ முருகன் டுடோரியல் இன்ஸ்டிட்யூட்,

ரிஷிவந்தியம், **Pin : 606205.** தென்னார்க்காடு மாவட்டம். தமிழ்நாடு

கிளைகள் : ஸ்ரீலங்கா, மலேசியா, தென் ஆப்ரிக்கா, மாரிஷியாஸ் & இந்தோனேசியா.

---

# சேலம் மத்திய கூட்டுறவு வங்கி (வரை) எண் 151.

## சேலம்-1.

தபால் பை எண். 171 தொலைபேசி எண்: 2402

கிளைகள் : நாமக்கல், திருச்செங்கோடு, ஆத்தூர், மோகனூர், இராசிபுரம், ஓமலூர், தாரமங்கலம், வேலூர், சங்ககிரி, சேந்தமங்கலம், கொங்கணாபுரம் சிறப்பு அங்காடி, சேலம் கடைவீதி, எடப்பாடி, பி. கொமாரபாளையம், பள்ளி பாளையம், தம்மம்பட்டி, ஜலகண்டாபுரம், ஆட்டையாம்பட்டி, செவ்வாய்ப்பேட்டை, பெத்தநாய்க்கன் பாளையம், மேட்டூர் டேம், நாமகிரிப்பேட்டை, கொண்டலாம்பட்டி, மல்லூர், தலைவாசல், எருமைப்பட்டி, வாழப்பாடி, ஏற்காடு, எளம்பிள்ளை, மகுடஞ்சாவடி.

சொந்த நிதி ரூ. 327 லட்சம். நடைமுறை மூலதனம் 1711 லட்சம்.

### வட்டிவிகித அட்டவணை

| | | |
|---|---|---|
| கால் டெபாசிட்டுகள் : | ரூ. 5,000/-க்கும் அதற்கு மேலும் (முன் அறிவிப்பு இல்லாமல்) | $3\frac{1}{4}$% |
| | ரூ. 10,000/-க்கும் அதற்கு மேலும் (3 நாள் முன் அறிவிப்பின் பேரில்) | $3\frac{1}{2}$% |
| சீசன் டெபாசிட்டுகள் : | ரூ. 1,000/-க்கும் அதற்கு மேலும் | |
| | 15 நாட்களுக்கும் அதற்கு மேல் 45 நாட்களுக்கும் | 3% |
| | 46 நாட்களுக்கும் அதற்கு மேல் 90 நாட்களுக்கும் | $3\frac{1}{2}$% |

பிக்செட் டெபாசிட்டுகள் : ரூ. 50/-ம் அதற்கு மேற்பட்ட பிக்செட் டெபாசிட்டுகளுக்கு :

| | | |
|---|---|---|
| 1. | 91 நாட்களுக்கும் அதற்குமேல் 6 மாதத்திற்குள் | 6% |
| 2. | 6 மாதத்திற்கும் அதற்குமேல் 9 மாதத்திற்குள் | $6\frac{1}{2}$% |
| 3. | 9 மாதத்திற்கும் அதற்குமேல் 12 மாதத்திற்குள் | $7\frac{1}{2}$% |
| 4. | 12 மாதத்திற்கும் அதற்குமேல் 36 மாதத்திற்குள் | $8\frac{1}{2}$% |
| 5. | 36 மாதத்திற்கும் அதற்குமேல் 60 மாதத்திற்குள் | $9\frac{1}{2}$% |
| 6. | 61 மாதத்திற்கும் அதற்குமேலும் | $10\frac{1}{2}$% |

சேமிப்புக் கணக்கு 6%

ரூ. 5000/-க்கு மேற்கொண்டு பிக்செட் டெபாசிட் போடுபவர்களுக்கு இலவச பாதுகாப்பு பெட்டக வசதி உண்டு. பிக்செட் டெபாசிட்டுகளின்மீது மாதாந்திர வட்டி உண்டு. ரெக்கரிங், பிராவிடெண்ட் டிபாசிட்டுகள் ஏற்றுக்கொள்ளப்படுகின்றன. இதர விவரங்களுக்கு செயலாளரிடம் தொடர்புகொள்க.



சிறுவன் சித்தநஞ்சனின் தாயிடம் செய்தியாளர்கள் பேட்டி காணல்.

வேறு திட்டங்களை உருவாக்கி வருகின்றது. இவர்களுக்கு உதவி புரிந்திடுவதில் இந்தியன் ஓவர்ஸீஸ் வங்கி, ஸ்டேட் வங்கி, போன்றவைகள் முனைந்துள்ளன.

சத்தியமங்கலம் வட்டத்தில் மீட்கப்பட்ட கொத்தடிமைகளுக்கு ஸ்டேட் வங்கி ஏராளமான உதவிகளை வழங்க முனைந்து பாடுபட்டு வருகிறது. விடுதலை பெற்றவர்களில் 37 பேர்கள் ரோமன் கத்தோலிக்கப் பண்ணைகளில் பணியாற்றுகின்றனர்.

வேளாண்மைத் தொழிலில் இவர்கள்ஈடுபட்டுவந்துள்ளதால், அத்தொழிலுக்கென ஒவ்வொருவருக்கும் 3 ஏக்கர் நிலம் வழங்க ஏற்பாடு செய்யப்பட்டு வருகிறது. இந்த வட்டத்தில் ஏறத்தாழ 1,500 ஏக்கர் நிலம் வேளாண்மை செய்வதற்கு ஏற்றதாக அமைந்துள்ளது. இதுவரை சுமார் 122 ஏக்கர் வரைகொடுக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டு விட்டன. இவர்கள் கேழ்வரகு, பயறு வகைகள் போன்றவைகளைப்பயிரிடுவதற்கென பல்வேறு உதவிகளை ஸ்டேட் வங்கிகளின் வாயிலாகப் பெற உள்ளனர்.

வேளாண்மைத் தொழிலுக்கென ஒரு ஜோடி எருது, இரும்புக் கலப்பை, விதைகள் போன்றவைகள் கடனாக வழங்கப்படும். இதற்கென அனைத்து ஏற்பாடுகளும் முடிந்துவிட்டன. இதுவரைசாம்ராஜ் நகரிலிருந்து 25 இரும்புக் கலப்பைகள் வாங்கப்பட்டுள்ளன. நல்ல ஜாதி எருதுகள் வாங்கும் பணியில் ஈடுபட்டுள்ளனர். எருதுகளுக்கான கடனை ஐந்து வருடத் தவணைகளிலும், கலப்பையை இரண்டு வருடத் தவணையிலும் செலுத்த வேண்டும்.

ஏக்கருக்கு ரூ. 220 வரை விதைப்பதற்காகக் கடன் வழங்கப்படுகிறது. இதில் விதைகள், உரங்கள் போன்றவைகளும் வழங்கப்படுகின்றன. இதற்கான கடன் தொகையை அறுவடை செய்து முடிந்த ஒரு மாதத்திற்கு பின்னர் திருப்பித் தர வேண்டும்.

தவிர அன்றாட வாழ்வுச்செலவுகளைச் சமாளிப்பதற்காகப் பால் கறவை மாடுகளையும் வழங்க உள்ளனர். கறக்கின்ற பாலில் ஒரு பகுதி கடனுக்கும், மறுபகுதி தங்களுடைய செலவுக்கும் என வகுக்கப்பட்டுள்ளது. பால் விற்பனைக்கெனப் பல்வேறு கருநாடகப் பால்பண்ணை எஜெண்டுகள் பொறுப்பேற்றுள்ளனர். இந்தக் கடன் 3 ஆண்டுகளுக்குள் தீர்ந்து விடும்.

இத்தகைய முறையில் தமிழ் நாடு அரசும், இந்திய அரசின்-நாட்டுடைமையாக்கப் பட்ட வங்கிகளும் உதவி புரிந்திடப் பெரிதும் பாடுபடுகின்றன.

விடுதலை பெற்ற பனியர்களின் நல்வாழ்வுக்கெனப் பல்வேறு திட்டங்கள் தீட்டப்பட்டு வருகின்றன. பனியர் குழந்தைகளுக்கென பால்வாடிப் பள்ளிகள் சிரசால், மாரடி, அம்பலவயல், கக்குண்டி, முத்திரைக்கொல்லி, கங்குரமூலை ஆகிய இடங்களில் செயல்படுகின்றன. இதனால் ஏறத்தாழ 256 பனியர் குழந்தைகள் பயன்பெறுகின்றனர். இவர்கள் அனைவரும் ஊராட்சி ஒன்றியப் பள்ளிகளின் மேற்பார்வையில் செயல்பட்டு வருகின்றனர். தவிர இவர்களுக்குச் சீருடைகளும் வழங்கப்பட்டுள்ளன. இவ்வகையில் 141 ஜோடி சீருடைகள் வழங்கப்பட்டுள்ளன.

தவிர வேளாண்மைத் தொழிலுக்கென கூடலூர் வட்டத்தில் 585.17 ஏக்கர் நிலங்கள் ஒதுக்கப் பட்டுள்ளன. இவர்கள் இந்த இடங்களில் குடியமர்ந்து வேளாண்மைத் தொழில் புரிவதற்கென வழிகளும் செய்து தரப் படவிருக்கின்றன.

மீட்கப்பட்டுள்ள 15 அடிமைத் தொழிலாளர்களுக்கு கிராமச் சாலைகள் திட்டத்தில் வேலை வாய்ப்பு அளிக்கப்பட்டுள்ளது. மற்றும் 165 அடிமைகள் காடுகள், தேயிலைத் தோட்டம், மற்றும் சாலை வேலைகளில் பணியாற்றுவதற்கான வாய்ப்புகள் பெற்றுள்ளனர். மீதமுள்ள 291 மீட்கப்பெற்ற அடிமை ஊழியர்களுக்கு விரைவில், கிராம சேவக்குகள் மூலம் வேலை வாய்ப்புகள் வழங்கப்பட்டுவிடும். அஞ்சல்துறை வாயிலாகஇவர்கள் தகவல் பெற இயலாததால் அரசு ஊழியர்களின் வாயிலாக வேலை வாய்ப்பு போன்ற தகவல்களைப் பெறுகின்றனர்.

இவ்வாறு அடிமைகள் எங்கிருந்தாலும் அவர்களையெல்லாம் விடுவிக்கும் பணியில் அரசு அலுவலர்கள் தீவிர நடவடிக்கை எடுத்து வருகின்றனர். கொடுமைகள் கண்ட கொத்தடிமைகளுக்கு, பிரதமர் அவர்களின் இருபது அம்சப் பொருளாதாரத் திட்டத்தின் பயனாக இன்று மறுவாழ்வு கிடைத்திருக்கிறது. இனி,

**''ஏழையென்றும் அடிமையென்றும் எவனுமில்லை சாதியில் இழிவு கொண்ட மனிதரென்பர் இந்தியாவில் இல்லையே!''**

என்ற நிலையை நோக்கி நடை போடுவோம்.

# நீலகிரி மாவட்டத்தில் கூட்டுறவுத்துறையின் பணிகள்

வேளாண்மைத் தொழிலின் வளர்ச்சியினைக் கருத்திற்கொண்டு நீலகிரி மாவட்டத்திலும் கூட்டுறவுச் சங்கங்கள் பெருமளவில் கடனுதவிகள் வழங்கி வருகின்றன. 1975—76-ஆம் ஆண்டு வேளாண்மைக்கான கடனுதவித் திட்டம் ரூபாய் 200 இலட்சமாகும். இதில் குறுகிய காலக் கடன் ரூ. 197 இலட்சமும், நடுத்தரக் காலக் கடன் ரூபாய் 3 இலட்சமாகும். ஆனால் திட்டமிடப்பட்டதற்கும் அதிகமாக — அதாவது ரூபாய் 204.02 இலட்சம் வரை பணமாகவும், உழவுச் சாதனங்களாகவும் வழங்கப்பட்டுள்ளன. இவைகளில் சிறு விவசாயிகள், மிகச் சிறு விவசாயிகள், நிலமற்ற குத்தகைதாரர்களுக்கு என குறுகிய காலக் கடனாக ரூபாய் 124.01 இலட்சமும், நடுத்தரக் காலக் கடனாக ரூ. 3.08 இலட்சமும் வழங்கப்பட்டுள்ளன.

**வேளாண்மை வளர்ச்சிக்கு**

வேளாண்மைத் தொழில் விரைவாகவும், சிறப்பாகவும் செயல்பட வேண்டுமென்பதற்கென 1976—77-ஆம் ஆண்டுத் திட்டத்திற்கு மொத்தக் கடன் தொகை ரூ. 220 இலட்சமாக அதிகரிக்கப்பட்டுள்ளது. இதில் சிறு விவசாயி, மிகச் சிறு விவசாயி மற்றும் நிலமற்ற குத்தகைதாரர்களுக்கு எனக் குறுகிய காலக் கடனாக ரூ. 147 இலட்சமும், நடுத்தரக் காலக் கடனாக ரூ. 5 இலட்சமும் வழங்கத் திட்டமிடப்பட்டுள்ளது. இதனால் ஏராளமான வேளாண்மைப் பெருங்குடி மக்கள் பயன்பெற வாய்ப்பு உள்ளது.

இம்மாவட்டத்திலும் நகை மீதான கடன் வழங்கு திட்டமும் செயல்பட்டு வருகின்றது. ஏராளமான அளவில் கடன் உதவி வழங்க வேண்டுமென்பதற்காக கோயம்புத்தூர் மாவட்டத்தைப் போலவே இங்கும் கடன் தொகைகள் அளிக்கப்பட்டு வருகின்றன. நலிவுற்ற மக்கள், நடுத்தர மக்கள் போன்றவர்களின் நலனில் மிகுந்த அக்கறையும், ஆர்வமும் காட்டப்பட்டு வருகின்றன. 1975—76-ஆம் ஆண்டில் கூட்டுறவு நகர வங்கி, மத்தியக் கூட்டுறவு வங்கிக் கிளைகள், வேளாண்மைக் கடன் வங்கி போன்றவைகளின் மூலம் ரூபாய் 70.65 இலட்சம் வரையில் கடன் தொகைகள் வழங்கப்பட்டுள்ளன. கடன் வழங்கும் இத்திட்டத்தினை 1976—77-ஆம் ஆண்டிற்கு ரூ. 101.50 இலட்சமாக உயர்த்தத் திட்டமுள்ளது.

**நியாய விலையில் சீரான விநியோகம்**

நுகர்வோர் கூட்டுறவுச் சங்கமும் இம்மாவட்டத்தில் முக்கியப் பணிகளை ஏற்று நுகர்வோர்க்கு இன்றியமையாப் பொருட்களைச் சீராகவும், நியாயமான விலையிலும் விநியோகம் செய்கின்றது. இவைகளைச் சிறந்த முறையில் நடைமுறைப்படுத்திடுவதற்கென இம்மாவட்டத்திலுள்ள 70 கூட்டுறவுச் சங்கங்களால் 120 நியாய விலைக் கடைகள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. 1976-ஆம் ஆண்டு மார்ச் திங்கள் வரை சுமார் 5.01 கோடி ரூபாய் அளவிற்கு இன்றியமையாப் பொருட்கள் விற்பனையாகியுள்ளது குறிப்பிடத்தக்கது. இவையல்லாமல் 118 தனியார் உணவுப் பங்கீட்டுக் கடைகளும் இம்மாவட்டத்தில் செயல்படுகின்றன. இவைகளும் விரைவில் கூட்டுறவுச் சங்கங்களுடன் இணைவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

அரசினுடைய ஆலோசனைகளுக்கிணங்க, இம்மாவட்டத்திலும் தொழில் நிறுவனங்களில்—அதாவது 200 மற்றும் அதற்கு மேற்பட்ட தொழிலாளர்கள் பணியாற்றும் தொழில் நிறுவனங்களில்— நுகர்வோர் கூட்டுறவுச் சங்கங்கள் அமைக்கப்பட்டு வருகின்றன. நீலகிரி மாவட்டத்தில் தற்பொழுது 40 தோட்டப் பண்ணைகள் உள்ளன. இவைகளில் 11 பண்ணைகளில் கூட்டுறவுச் சங்கங்கள் ஏற்படுத்தப்பட்டு விட்டன. விரைவில் மற்றப்பண்ணைகளிலும் ஏற்படுத்துவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

**மாணவர்கள் நல்வாழ்வு பெற்றிட**

மாணவர்கள் பயன்பெறுகின்ற முறையில் இங்கும் அனைத்து உயர்நிலைப் பள்ளிகளிலும், கல்லூரிகளிலும் கூட்டுறவு விற்பனை நிலையங்களை அமைத்திடத் திட்டமிடப்பட்டு வருகின்றது. மாணவர்களுக்குத் தேவையான அனைத்துப் பொருட்களும் சீராகவும், சலுகை விலையிலும் வழங்கப்படும். நீலகிரி மாவட்டத்தில் ஏறத்தாழ 56 உயர்நிலைப் பள்ளிகளும், 3 கல்லூரிகளும் தற்பொழுது இயங்கி வருகின்றன. இவைகளில் ஒரு கல்லூரியில் மட்டும் கூட்டுறவு விற்பனை நிலையம் ஏற்படுத்தப்பட்டுள்ளது. மற்றவைகளில் மிக விரைவில் கூட்டுறவுச் சங்கங்களை அமைப்பதற்கான நடவடிக்கைகள் தீவிரமாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

மாணவர்களுக்குப் பாடநூல்கள், நோட்டுப் புத்தகங்கள் போன்றவைகளை இக்கூட்டுறவுச் சங்கங்கள், வட்ட அளவில் விற்பனையாளர்களை நியமித்து வழங்கி வருகின்றன. தமிழ் நாட்டுப் பாட நூல் நிறுவனம் குறித்த விலைகளில் பாட நூல்களும், கட்டுப்பாட்டு விலையில் நோட்டுப் புத்தகங்களும் விநியோகம் செய்யப்படுகின்றன.

இவைகள் மட்டுமின்றி தரமான துணிகளைக் கட்டுப்பாட்டு விலையில் விநியோகிக்கும் பணியினையும் மேற்கொண்டுள்ளன. இப்பணியில் நீலகிரி மாவட்ட விநியோகம் மற்றும் விற்பனைச் சங்கம், நீலகிரி கூட்டுறவு விற்பனை நிலையத்தின் 21 கிளைகள் போன்றவைகள் ஈடுபட்டுள்ளன. கிராமப் புறங்களில் 46 சில்லறை விற்பனைக் கூடங்களும், நகர்ப்புறப் பகுதிகளில் 7 விற்பனைக் கூடங்களும் செயல்படுகின்றன.

30-4-76-ஆம் நாள் வரையில் ஏறத்தாழ 2.53 இலட்சம் ரூபாய் மதிப்புள்ள துணிகள் கட்டுப்பாட்டு விலையில் விநியோகம் செய்யப்பட்டுள்ளன. இம்மாவட்டத்தில் இரு நிலையங்களுக்கு இவ்வகைக்கென ரூ. 23,700 நிதி உதவி வழங்க அரசு அனுமதித்து உள்ளது.

பிரதமரின் இருபது அம்சப் பொருளாதாரத் திட்டம் சிறந்த முறையில் செயல்பட நீலகிரி மாவட்டத்திலுள்ள கூட்டுறவுச் சங்கங்கள் பரந்த அளவில் பணியாற்றி வருவதைக் குறிப்பிட வேண்டும்.

—ஆயிரராமன்

## அட்டைப்பட விளக்கம்

முதுமலை வனவிலங்கு சரணாலயத்தில் இரண்டு யானைகள்

# கோ-ஆப்டெக்ஸ் மக்கள் விரும்பும் வகைகள்! நியாயமான விலைகள்!



கோ-ஆப்டெக்ஸ் சேலைகள்.

## அழகு மிளிரும் ஆரணங்குகள்!

ஆரணி, கும்பகோணம், காஞ்சிபுரம் அசல் பட்டுச் சேலைகள், உறையூர், கோயமுத்தூர், சேலம், மதுரை பருத்தி கைத்தறிச் சேலைகள், அச்சிட்ட சுங்கடி சேலைகள் மற்றும் சின்னாளப்பட்டி சேலைகள்.



கோ-ஆப்டெக்ஸ்

## படுக்கை விரிப்புகள், மலர்ப் படுக்கைகள்!

நேர்த்தியான நெசவு கைத்தறிப் படுக்கை விரிப்புகள் மற்றும் தலையணை உறைகள். உங்களுக்கு சொகுசு அளிப்பவை!



கோ-ஆப்டெக்ஸ்

## லுங்கிகள், வசதியானவை நீடித்துழைப்பவை!

உங்கள் விருப்பத்துக்குகந்த சாதா, கோடிட்ட அல்லது கட்டமிட்ட பல வகைகளில்.

கோ-ஆப்டெக்ஸ்

## துவாலைகள், தூய்மையான துவாலைகள்!

சாதா, டர்கிஷ் வகைகள், மென்மையான மற்றும் ஈரத்தை உறிஞ்சும் வகைகள். உங்களது சுகாதாரத்துக்கு இன்றியமையாதவை!



மற்றும் கைத்தறிப் பருத்தி வகைகள், வேட்டிகள், உடுப்புகளுக்கான துணிகள், அலங்காரத் துணிவகைகள்—குடும்பத்தினர் அனைவருக்குமே உகந்த முழுதும் புதிய வகைகள்.

கோ-ஆப்டெக்ஸ்

கைத்தறியே வண்ணத்துப் பூச்சி

பதிவு எண். M. 8676



# வாழ்வு மலர
# வளம் பெருக
# 20 அம்சத் திட்டம்

—ஆசிரியரும் வெளியிடுபவரும் : தமிழ்நாடு அரசு செய்தி மக்கள் தொடர்பு இயக்குநர், சென்னை
அரசினர் தோட்டம் தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
முகவரி : தமிழரசு அலுவலகம், அரசினர் தோட்டம், சென்னை-600002.